


WWW.AKARAM.EU

இலவச தமிழ் மாத இதழ்

# AKARAM
# அகரம்

14. பங்குனி - 13. சித்திரை 2012

சுவடி: 11 திருவள்ளுவர் ஆண்டு 2042 கர வருடம்



FREE MAGAZINE

## ஊடகத்துறையின் உறுதிக்கரம்!

FREE CIRCULATION:

GERMANY, SWITZERLAND, FRANCE, ENGLAND, DENMARK, NORWAY, HOLLAND, SWEDEN, ITALY, CANADA

# Lycamobile



## ஜெர்மனி

சர்வதேச நாடுகளுக்கான தரம் வாய்ந்த அழைப்புக்கள் மிக குறைவான கட்டணத்தில்..!

மலேசியா
இந்தியா
கனடா
அமெரிக்கா

வீட்டு தொலைபேசி + கைத் தொலைபேசி

**1ct/min**

Lycamobile இல் இருந்து Lycamobile க்கு
இலவச அழைப்புக்கள்

| | வீட்டு தொலைபேசி | கைத் தொலைபேசி |
|---|---|---|
| இலங்கை | 1ct/min | 12ct/min |
| ஐரோப்பா | 1ct/min இல் இருந்து | |

* வெளி நாடு இணைப்புக்கட்டணம் 19 ct
இச் சலுகை 31/03/2012 வரை செல்லுபடியாகும்.

*சலுகை கட்டணங்கள் கால வரையறைக்குட்பட்டவை. மேலதிக விபரங்களுக்கு www.lycamobile.de

www.lycamobile.de 069 33399-322

Lyca mobile
Call the world for less

Lycamobile வாங்கக்கூடிய இடங்கள்:

Westfalen AG, Agip, JET, AVIA, ICP COMPANIES, LOTTO Sachsen-Anhalt, LOTTO Baden-Württemberg, LOTTO SAARTOTO, LOTTO Hessen, LOTTO Thüringen

# SHELVAZUG
## செல்வாசுக்

★★★★

KREDIT+IMMOBILIEN+VERSICHERUNGEN

**SHELVAZUG GmbH (P.T.THURAIRAJAH), BIRKENMATT 23, 6343 ROTKREUZ**

**TEL : 041 790 64 63** **FAX : 041 790 64 68** **NAT : 079 514 64 28**

**www.shelvazug.com shelvazuggmbh@bluewin.ch**

ZG ZH AG LU BS BL BE SO FR CH TI GE OW
AR JU VD AL GL NE UR VS SH NW SG SZ TG




- ★ வங்கிக்கடன் (5.9% இலிருந்து)
- ★ வீட்டுக்கடன் (1.5% இலிருந்து)
- ★ வாகனக்காப்புறுதி (30% இலிருந்து)
- ★ வாகனங்கள் (வாங்க அல்லது விற்க்க)
- ★ ஆயுட் காப்புறுதி
- ★ மருத்துவக் காப்புறுதி
- ★ வீட்டுக்காப்புறுதி
- ★ நிறுவனங்களிற்கான காப்புறுதி
- ★ கட்டிய வீட்டை வாங்க அல்லது வாடகைக்குப்பெற
- ★ புதிதாக வீடு கட்ட
- ★ வீடுகளைத் திருத்திக்கொள்ள





## tMedia Network

நிறுவனத்தின்



# அகரம்

மாதாந்த இதழ் - Monthly Magazine

*14. பங்குனி - 13. சித்திரை* | 14. Mar. - 13. Apr. 2012

*சுவடு 11* | Issue 11

தலைமை ஆசிரியர்:
திரு. த. இரவீந்திரன்

உதவி ஆசிரியர்:
திரு. வன்னித்தம்பி

ஆசிரியர் குழு:
திரு. பவித்திரன் (இலங்கை)
திரு. தயாபரன் (இலங்கை)
திரு. வண்ணை தெய்வம் (பிரான்ஸ்)
திரு. எதிர்மன்னசிங்கம் (சுவிஸ்)
திரு. சண் தவராஜா (சுவிஸ்)
திரு. அறிவழகன் (ஜேர்மனி)

சிறுகதை ஆசிரியர்:
திரு. இரா. அருணாச்சலம்

நிழற்படப்பிரிவு:
திரு. வியாசன்
செல்வி. கயல்விழி

ஒப்பு நோக்குனர்:
திருமதி. தாமரைச்செல்வி (ஜேர்மனி)
திரு. அர்ஜுன் (ஜேர்மனி)



தொடர்புகளுக்கு:
tMedia Network
PO. BOX 4153, 59037 Hamm
Germany
Tel: 00 49 23 81 98 77 897
Fax: 00 49 23 81 97 25 556
Email: ***editor@akaram.eu***

## www.akaram.eu



No part of this publication may be reproduced, copied or transited in any form or by any means or stored in any information storage or retrieval system without the publisher's written permission.

©tMedia Network 2011.
All rights reserved.


# நுழைவாயில்...

அகரம் வாசகர்களுக்கு வணக்கம்,

அகரம் தனது முதலாவது ஆண்டு நிறைவை அண்மித்து வருகிறது. ஒவ்வொரு இதழும் பெரும் வலியோடு பிரசவமாகும் நிலை தொடருகிறது. பன்னாட்டு வாசகருக்காக பன்னாட்டு தொண்டர் செயற்பாட்டில் வெளியாவதால் பிரசவ வலியும் பிரசவத்துக்குப் பின் ஏற்படும் வேதனைகளும் தொடரவே செய்கின்றன. என்னதான் முயன்றாலும் கால நேர தேச வேறு பாடுகளால் நேரும் தவறுகளைத் தவிர்க்க முடியாமல் போகிறது.

முக்கியமாக நுழைவாயிலாக அமையும் ஆசிரியத் தலையங்கம் ஒன்றைக் கூற, அது பக்க வடிவமைப்பில் இன்னொன்றாக மாறிவிட, சுகப் பிரசவமாக பிறந்த அது குறைப் பிரசவமாக முடிந்து விடுகிறது. உதாரணமாக சென்ற இதழில் தமிழர் சுயாட்சிக் கழக தலைவர் அமரர் வ.நவரத்தினம் தொடர்பான நினைவுக் கட்டுரையும் ஈழ மக்களின் தனித் தமிழ் ஈழக் கோரிக்கை பற்றியதாக ஆசிரியத் தலையங்கம் இருந்தது.

ஆனால் அந்தக் கட்டுரை தவிர்க்க முடியாத காணத்தால் இதழின் பக்கங்களில் இடம் பெறத் தவறியதால் ஆசிரியத் தலையங்கம் தொடர்பு அற்ற நிலையை வாசகர் காண நேர்ந்தது. அதனை உடன் எமது கவனத்துக்கு கொணர்ந்த வாசகரின் ஆர்வத்துக்கும் ஆதங்கத்துக்கும் அகரம் நன்றியாய் உள்ளது. அந்த வாசகர் பற்றிப் பெருமையும் கொள்கிறது. மீண்டும் இவை போன்ற தவறுகள் வரக் கூடாது என்பதே எமது ஆதங்கம். இந்த இதழில் அந்தக் கட்டுரை வருகிறது அதற்கான தேவையும் இருக்கிறது.

இப்பொழுது தமிழ் மக்கள் எதிர் கொள்ளும் காலப் பகுதி மிகவும் பரபரப்பும் கலவரமும் நிறைந்த ஒன்றாகும். முள்ளி வாய்க்காலின் அதிர்வுகள் நீடித்த துயரங்களையே எமக்கு சர்வதேசச் சமூகமும் ஐ.நா. அமைப்புகளின் அமர்வுகளும் ஏற்படுத்தி வருகின்றன.

எமது உயிர்களைக் காப்பாற்றுவர் என ஏங்கிய எமக்கு கருமாதிகளையே பரிசாகத் தந்தார்கள். தமிழ்ப் புலிப் பயங்கர வாதத்தை அழிப்பதாகக் கூறி எமது இனத்தை அழித்தவர்கள், அரச சிங்களப் பயங்கர வாதத்தையே எமக்குப் பரிசாக்கி உள்ளனர். எமது மக்களின் ஊனையும் உயிரையும் அழித்தவர்கள் எமது தாய் மண்ணையும் தாய்க் குலத்தையும் மக்களையும் சிங்களத்தின் காலடியில் சீரழிய வைத்துவிட்டனர்.

எமது பச்சிளம் குழந்தைகள் சிங்கள இராணுவ அதிகாரிகளின் பாதங்களைத் தொட்டு வணங்கும் அடிமை வாழ்வில் அவதி உறுகின்றனர். இன்று வரும் நீதி நாளை வரும் என்ற கனவில் கரைகிறது எமது வாழ்நாள்.

## சுவடி: 11

எத்தனை காலம் இப்படி வாழ்வது என்ற கேள்வி எம் அனைவரையும் வாட்ட வேண்டும். ஆனால் பலருக்கு அப்படியான நினைப்பே இன்னமும் எழவில்லை.

அந்த நினைப்பு எமக்கு ஏற்பட்டால் நான் நீ எனப் போட்டி போட்டு கிடைக்கும் சந்தர்ப்பங்கள் அனைத்தையும் இழப்போமா? அண்ணன் வருவார் விடுதலையை அள்ளித் தருவார் என ஆரூடம் சொல்வோர் ஒரு புறத்தில், அமெரிக்கா வரும் ஆதரவு தரும் என்போர் இன்னொரு புறத்தில், ஆண்டவன் அருள்வான் என அபிசேகம் செய்வோர் என ஆளுக்கொரு ஆட்டம் போட்டுக் காட்டுகின்றனர்.

அமெரிக்க அரசு மகிந்தருக்கு எதிராக வைத்திய கலாநிதி மனோகரன் தொடுத்த வழக்கை முடக்கி விட்டது. இராணுவத் தளபதி சவேந்திர சில்வாவையே சீண்ட மிகப் பெரும் பாடு படவேண்டி இருக்கிறது. இந்நிலையில் த.தே.கூ. தமிழ் இனத்தின் முதுகில் ஈட்டியைப் பாய்ச்சி உள்ளது. நாம் யாருக்காக யாரோடு மோதுவது என்ற புரிதலே இல்லாத இனமாக இருக்கிறோம். 1915ல் பொன். இராமநாதன் முதல் 2012 இரா சம்பந்தன் வரை சிங்களம் எமக்குத் தந்த படிப்பினைகளோ ஏராளம்.

இந்த ஒரு நூற்றாண்டு காலமாக எமது இனம் படித்துக் கிழித்தது என்ன? நாம் ஒரு சமூகமாக வாழும் அருகதை கொண்டிருக்கிறோமா? நமக்காக வேற்று இன மக்கள் எத்தனை பெரிய தியாகங்களை இழப்புகளை சந்தித்து வருகின்றனர் என்பதற்கு சனல் 4 தொலைக்காட்சி நிறுவனத்தினர், மனித உரிமை அமைப்புகள், இன்னர் சிற்றி பிரஸ், சில சிங்களச் சிந்தனாவாதிகள் கூட சாட்சியமாக உள்ளனர்.

அப்படியானவர்களில் அண்மையில் சிரியாவில் உயிர்த் தியாகம் செய்த மேரி கொல்வின் என்ற ஊடகவாளர் முள்ளிவாய்க்கால் மக்களோடு மக்களாகக் களம் கண்டு ஒரு கண்ணும் இழந்து தமது அற்புதமான மனித நேயப் பண்பை எம் இனத்துக்கு வழங்கியவர். இவர்களைப் போன்றவர்களுக்கு நாம் என்ன கைமாறு செய்யப் போகிறோம்?

தமிழன் என்றொரு இனம் உண்டு தனியே அவர்க்கொரு குணம் உண்டு என்று பெருமைப்பட்ட இனமா நாம்?

இதயங்கள் அழுதாலும், இதழ்கள் சிரிக்கட்டும்!

நன்றியோடு மீண்டும் இணைவோம்,
*அகரம் குழுமம்!...*

## சிறப்புப் பகுதிகள் - Features




ஐ.நா. சபையும் ஈழத் தமிழரின் துயரமும்!



தேசிய விருதுகள் 2011



விளாடிமீர் புட்டினுக்கு அஞ்சும் அமெரிக்கா!



நயினாதீவு




# ஐ.நா. சபையும் ஈழத் தமிழரின் துயரமும்!

த. எதிர்மன்னசிங்கம்

சனல் 4 ஒளிபரப்பிய ஸ்ரீலங்காவின் கொலைக் களங்கள் உலக அரசுகளின் பார்வையில் இன்னொரு ஹோலிவூட் திரைப்படமோ என்ற நினைப்பை ஏற்படுத்தும் வகையில் ஐ.நா.மனித உரிமைச் சபையின் முடிவுகள் காட்டிவிட்டன. அந்த ஆவணப்படத்தில் காண்பிக்கப் பட்டவைக்கும் மிக அதிகமாகவே இந்தியாவும் அமெரிக்கா மற்றும் அதன் நேச நாடுகளும் ஆதாரபூர்மாக தமது செய்மதி மற்றும் உளவு துறைகள் மூலமாக அறிந்தே வைத்துள்ளன.

எனவே சனல் 4 காட்சிகளை வைத்தே தமது நிலைப்பாட்டை எடுக்க வேண்டிய அவசியம் ஐ.நா வுக்கும் இந்த நாடுகளுக்கும் துளி அளவும் கிடையாது. ஆனாலும் அரசு சார்பற்ற மனித உரிமை ஆர்வத் தொண்டு நிறுவனங்களின் அயராத நீதிக்கான கோரிக்கையின் காரணமாக ஐ.நா வில் சென்ற ஆண்டு முதல் விவாதத்துக்கு எடுக்கப்பட்டது. ஈழத் தமிழர் மீதான போரின் போது இடம் பெற்ற மனிதப் படுகொலை மற்றும் மனித உரிமை மீறல்கள் போர் குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள் மீதான விசாரணை நேர்மையான முறையில் இடம் பெற வேண்டும் என்பதில் இவ்வமைப்புகள் விருப்பமாக உள்ளன.

மிகுந்த பிரயத்தனத்தின் பின்னர் 3 ஆண்டுகள் முடிவுறும் நிலையிலும் எப்படியும் இலங்கை அரசை ஒரு நேர்மையான தீர்வை நோக்கி இழுக்க முடியும் என்ற இந்தியாவும் அமெரிக்கா போன்ற நாடுகளும் எடுத்த முயற்சிகள் பலனின்றியே தொடரும் அவல நிலையே உள்ளது. மகிந்த தலைமையிலான இலங்கை அரசின் ராஜதந்திர நகர்வுகளை யாரும் பாராட்டாமல் இருக்க முடியாது. இலங்கை அரசின் இறுக்கமான இரும்புப் பிடி உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் மிகப்பலமாகவே உள்ளது. சர்வதேச அரசுகளை நயமாகவும் பயமாகவும் தனது கைக்குள் போட்டுக் கொள்ளும் வித்தை இலங்கை அரசுக்கு மட்டுமே கை வந்த கலை. அதுவும் எடுக்கும் நடவடிக்கை அனைத்துமே ஒரு போராட்டம் போன்ற விறைப்போடும் வித்துவத்தோடும் உள்நாட்டு வெளிநாட்டு நிபுணர்களை பெரும் செலவில் ஈடுபடுத்தி வெற்றி ஒன்றே குறியாகக் கொண்டு செயற்பட்டு வருகிறது.

அரசு என்ற வகையில் அதற்கு ஒரு தனிச் சிறப்புச் சலுகைகள் உண்டு. அதன் பேச்சுகள் அப்பட்டமான பொய்யாக இருந்தாலும் அதனைச் செவிமடுக்க வேண்டிய கடப்பாடு ஏனைய நாடுகளுக்கு உண்டு. அதே நேரம் ஏனைய நாடுகள் ராஜதந்திர நடைமுறை கருதி மௌனம் காக்கும் விடயங்களை பகிரங்கப் படுத்தி அந்நாடுகளை வாயடைக்க வைத்தும் விடும். உதாரணமாக அண்மையில் எஸ்.எம்.கிருஸ்ணா தமக்கு மகிந்தர் 13வது திருத்தச் சட்ட விதிகளுக்கும் மேலான தீர்வைத் தரத் தயாராக இருப்பதாகக் கூறினார் என பகிரங்கமாகத் தெரிவித்தார்.


ஆனால் மகிந்தர் எவ்வித தயக்கமும் இன்றித் தாம் அப்படிக் கூறவில்லை என மறுதலித்தார். அரசுத் தலைவரே கூறும்போது வெளிநாட்டமைச்சர் எப்படி மறு பேச்சுப் பேச முடியும். மேலும் மகிந்த அரசு குட்டமாக எவருக்காயினும் ஏதாவது சொல்ல வேண்டும் என்றால் அவற்றைப் பேச என்றே விமல் வீரவன்ச, சம்பிக்க ரணவக்க, மேர்வின் சில்வா போன்றோர் உள்ளனர். பேராசிரியர்கள் போன்ற ஜீ.எல்.பீரிஸ்

ரஜீவ விஜேசிங்க போன்ற பட்டதாரிகளும் தம்மைச் சிங்களவர்களாக நினைத்துப் பேசுவார்களே அல்லாது கல்விமான்களாக காட்டுவதில்லை.

இந்நிலையில் சனல் 4 தொலைக்காட்சி தான் பட்ட துன்ப துயரங்களுக்கு எதுவித பலனும் இல்லாமல் போய்விட்டதே என ஆறாத் துயர் படுவது அதன் செய்திக் குறிப்புகள் வெளிப் படுத்துவதைக் காண முடிகிறது.

இம்முறையும் பெரிதாக எதுவும் ஏற்பட வாய்ப்பில்லை என்ற அச்சம் எல்லார் மனதிலும் ஏற்பட்டே இருந்தது. அதுவும் அமெரிக்காவில் மகிந்தருக்கு எதிரான வழக்கில் அரசுத் தலைவருக்கான பாதுகாப்பு உத்தரவாதம் அவருக்கு உண்டு என அமெரிக்க அரசுத் திணைக்களம் அமெரிக்க நீதிமன்றத்துக்கு அறிவுறுத்தியதன் மூலம் ஒபாமா அரசு மகிந்தரிடம் எதையோ எதிர்பார்க்கிறது என்ற செய்தியை புலப்படுத்தியது.

இந்திய அரசின் நிலைப்பாட்டிலும் பாரிய மாற்றம் புலப்படாத நிலையில் சோனியா காந்தி தலைமையிலான காங்கிரஸ்கட்சியின் ஆட்சி இந்தியாவில் உள்ள வரை சிங்களத்துக்கான இந்தியக் கவசம் வலுவாகவே இருக்கும். இந்நிலையில் சனல் 4 ஆவணப்படத் தயாரிப்பாளர் குழுவின் கருத்துக்களை நாம் பார்ப்பது நம்மை நாமே கிள்ளிப் பார்ப்பதாய் இருக்கும்.




**1.** இலங்கை அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையே நடந்த போரின் போது கைத் தொலை பேசிகள் மூலம் பதிவான போர் குற்றம் மற்றும் மனிதத்துக்கு எதிரான குற்றங்களின் சாட்சியாக சில மிகக் கொடூரமான காணொளிக் காட்சிகள் அடங்கிய ஸ்ரீலங்காவின் கொலைக்களங்கள் என்ற படத்தை சென்ற ஆண்டு ஜோன் சினோ ஒளிபரப்பினார்.

**2.** இக்காணொளி இரு தரப்பினராலும் இழைக்கப்பட்ட போர்க் குற்றங்களை கொண்டிருந்தன. வெற்றி பெற்ற அரசுப் படைகளின் பெண் போராளிகள் மீதான பாலியல் குற்றங்கள், கைதிகள் கைகள் கட்டப்பட்டுச் சுட்டுக் கொல்லப்படுதல், பாதுகாப்பு வலையங்கள் எனக் கூறப்பட்ட வலையங்களுக்குள் இருந்த பொதுமக்கள் மீது எறிகணைத் தாக்குதல்கள் போன்ற குற்றங்கள் அவை.

**3.** இப்படம் ஜெனிவாவிலும் அமெரிக்காவிலும் உள்ள ஐ.நா.,சபை, பிரித்தானிய மக்கள் சபையிலும், ஐரோப்பிய பாராளுமன்றம், அமெரிக்க செனற் சபை பிரித்தானியப் பிரதமர் டேவிட் கமரோன் உட்பட அரசியல்வாதிகள் முன் திரையிடப்பட்டது இருப்பினும் 40,000 க்கும் அதிகமான மக்கள் கொல்லப்பட்டபோதும் இன்னமும் இக்குற்றங்கள் முறையாக விசாரணை செய்யாமலும் குற்றவாளிகள் தண்டிக்கப்படாமலும் உள்ளது. ஐ.நா. இலங்கை அரசை கேட்டுள்ளபோதிலும் கூட.

**4.** இந்தப் பலமான பின்னூட்ட காட்சிகளையும் ஜோன் சினோவே கண் கண்ட சாட்சிகளின் சாட்சியமும் தனிப் படங்களும் போரின் இறுதிக் கட்டத்தில் எப்படி யாரால் என்ன நிகழ்த்தப்பட்டன என்பன விலாவாரியாக ஆவணப்படுத்தி இருந்தது. அவற்றின் முடிவுகள் இலங்கை இராணுவத்தின் அதிஉயர் தரத்தின் ஒப்புதலுடன் நிறைவேற்றப்பட்டன.

**5.** ஸ்ரீலங்காவின் கொலைக் களம் 4 போர்க் குற்றங்களை சிறப்பான ஆய்வுகள் மூலம் யார் பொறுப்பு எனக் கண்டறிந்துள்ளது. அவை திட்டமிட்ட பொதுமக்கள் மீதான கடுமையான எறிகணைத் தாக்குதல்கள். தாக்குதல் அற்ற பகுதியில் மருத்துவமனை மீதான எறிகணை வீச்சு, சிக்கிக் கொண்ட பல்லாயிரக் கணக்கான மக்களுக்கு உணவு மருந்துப் பொருட்களை வழங்க மறுத்தமை, இவற்றை வழங்க வேண்டிய சட்ட ரீதியான மனித நேய உதவிகளை வழங்கும் கடப்பாட்டை மீறிய செயல். மேலும் 12 வயது சிறுவனை தமிழீழ விடுதலைப் புலிக் கைதியை நிர்வாணப் படுத்தி கட்டிவைத்துக் கொடூரமாக கொல்லப் பட்டமை.

**6.** மனித உரிமை அமைப்புகளின் அழுத்தங்கள் மற்றும் ஐ.நா.நியமித்த நிபுணர்கள் குழுவின் சர்வதேச சுயாதீன விசாரணைக் குழு மூலம் ஒரு முழுமையான விசாரணை வேண்டும் என வைத்த கோரிக்கைகளையும் மீறி, சென்ற டிசெம்பர் மாதம் வெளியான இலங்கை அரசின்

கற்றுக் கொண்ட பாடங்களும் நல்லிணக்க ஆணைக் குழுவின் அறிக்கயில் கூறப்பட்ட பிரகாரம் அரசு ஒரு இறுக்கமான விசாரணை நடத்தத் தவறிவிட்டது. அது குறிப்பாக எந்த ஒரு பொதுமகனும் வேண்டும் என்றே குறிவைத்துக் கனரக எறிகணையால் தாக்கப்படவில்லை என மறுக்கிறது. இந்தப் போர்க் குற்றங்கள் தண்டிக்கப் படாது போவது சர்வதேச நாடுகளின் செயலற்ற தன்மை இலங்கை அரசைப் பொறுப்புக் கூறும் நிலையிலிருந்து தப்பிக்க வைத்துள்ளது.

**7.** போர் குற்றங்களுக்கான பொறுப்பு அரசின் அதி உயர் கட்டளத் தளபதி மீது உள்ளது. இந்தப் படம் இப்பொழுதும் ஸ்ரீலங்காவின் அதி உயர் அதிகாரத்தில் உள்ள முப்படைகளின் கட்டளைத் தளபதி ஜனாதிபதி ராஜபக்ஷ அவருடைய சகோதரரும் பாதுகாப்புச் செயலருமான கோத்தபாய ராஜபக்ஷ மற்றும் சட்டப் பாதுகாப்பு கருதி ராஜதந்திர பதவிகளை ஏற்றிருக்கும் இரண்டு படைத் தளபதிகள் மீது கேள்விகளைத் தொடுக்கிறது.

**8.** மீண்டும் இம்மாதம் இங்கிலாந்தில் கிரிக்கட் அணி இலங்கையில் ஆட்டங்களைத் தொடங்க உள்ள நிலையில் அடுத்த பொதுநலவாய நாடுகளின் மாநாட்டுக்கு 2013ல் அரசுத் தலைவர்கள் கூட உள்ள நிலையில் இந்தப் படம் தோற்றுப் போன மறக்கப்பட்ட மக்களின் துயரத்தின் மாறாத வடுவாக சர்வ தேச சமூகத்தால் கைவிடப்பட்ட மக்களின் நினைவாக ஸ்ரீலங்காவின் கொலைக்களம் இருக்கும்.

உலக மனித நாகரிகம் நன்றி சொல்ல வேண்டியது இந்திய மத்திய அரசுக்கும் அதன் கைப்பாவைகளாக விளங்கும் தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கும் மட்டுமே. இப்படியான ஒரு மகத்தான மனித உரிமை மீறலை மானுடத்துக்கு எதிரான அநீதியை வேறு எங்கேயும் எந்த இன மக்களுக்கும் இந்த 21ம் நூற்றாண்டில் இழைத்து விட முடியாது. 20ம் நூற்றாண்டு உருவாக்கிய உன்னத உலக அமைப்பான ஐ.நா. அமைப்பை அவமானச் சின்னமாக்கிய பெருமையும் இதன் போதுதான் நிகழ்ந்தது. அடுத்த அமைப்பான பொதுநலவாய நாடுகளின் மாநாடும் கொழும்பில் 2013ல் இன்னுமொரு வரலாற்று அவமானக் காட்சியை காட்டு மிராண்டிகளின் உலகம் அரங்கேற்றும் கண்டு மகிழலாம்.



Ihr persönlicher Finanzoptimierer

சுவிஸ் நாட்டில் உங்கள் காப்புறுதித் தேவைகளுக்காக
கணக்கற்ற முகவர்கள் பணியாற்றுகிறார்கள். ஆனால்,
காப்புறுதி விபரங்களை முறையாகப் பயின்று,
மனச்சாட்சிக்கு விரோதமில்லாமல் பணியாற்றுவோர்
ஒரு சிலரே. அவர்களுள் ஒருவர் உங்கள் திலீபன்.



Herr Krishnasamy THILEEPAN
Dipl.Finanzberater IAF
















சுவிசில் சொந்த வீடு வாங்க விரும்பும்
உறவுகளே, அவதானமாகச் செயற்படுங்கள்.
உங்கள் கடனுக்கான வட்டி வீதம்
எப்போதும் அதிகரிக்கக் கூடும்.
எனவே, சரியான வங்கியையும், வட்டி
வீதத்தையும் தெரிந்து கொள்ளுங்கள்.

உங்கள் வாழ்வின் சகல அம்சங்களிலும்
உங்களோடு கரங் கோர்க்கும்
ஒரேயொரு நிறுவனம் AWD.

அறிவு. நேர்மை. நாணயம்.

தனியொரு காப்புறுதி நிறுவனத்தின்
முகவரல்ல நாம். உங்கள் தேவைக்கு ஏற்ப
தகுந்த நிறுவனத்தில் நாம் காப்புறுதி செய்து
தருகிறோம்.

Allgemeiner Wirtschaftsdienst AG
Zweigniederlassung Bern-Köniz
Sägestrasse 79
3098 Köniz
Telefon: 031 915 00 50
Telefax: 031 915 00 60
Handy: 079 889 60 65
eMail: krishnasamy.thileepan@awd.ch
Internet: www.awd.ch



# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பேண விரும்பும் வலுச் சமநிலை.

சண் தவராஜா

சுவிற்சர்லாந்தின் ஜெனீவா நகரில் ஆரம்பமாகியுள்ள ஐ.நா. மனித உரிமைக் குழுவின் 19 ஆவது கூட்டத்தொடரில் கலந்து கொள்ளப் போவதில்லை எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முடிவு செய்துள்ளது. பல்வேறு அக, புறக் காரணங்களைக் கருத்திற் கொண்டு இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகக் கூட்டமைப்பு தெரிவித்துள்ள நிலையில் இந்த முடிவிற்கு ஆதரவாகவும் எதிராகவும் பல கருத்துக்கள் பல்வேறு மட்டங்களிலும் வெளிப்பட்டு வருகின்றன.

"கூட்டமைப்பு தமிழ் மக்களை ஏமாற்றி விட்டது. சிறி லங்கா அரசாங்கத்தைக் காப்பாற்றும் நிகழ்ச்சித் திட்டத்துக்கு மற்றுமொருமுறை துணைபோய் விட்டது" என ஒரு சாராரும், "கால, தேச, வர்த்தமான நிலைமைகளைக் கவனத்திற் கொண்டு எடுக்கப்பட்ட முடிவு தவறானதல்ல. கூட்டமைப்பு உறுப்பினர்கள் ஜெனீவாவில் பிரசன்னமாகி விளக்கமளிப்பதனால் மாத்திரம் அமெரிக்காவினால் முன்மொழியப்படவுள்ள பிரேரணைக்கு அமோக ஆதரவு கிட்டுமென்றோ, சிறி லங்கா அரசினாலும் அவர்களின் ஆதரவுச் சக்திகளாலும் மேற்கொள்ளப்படவுள்ள எதிர்ப் பரப்புரைகளில் அது பலவீனத்தை ஏற்படுத்தும் என்றோ நிச்சயமாகக் கூறிவிட முடியாது" என மற்றொரு சாராரும் வாதிட்டு வருகின்றனர்.

ஜெனீவாக் கூட்டத்தொடரில் கலந்து கொள்வதில்லை என்ற முடிவு தொடர்பாக கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் விடுத்த அறிக்கையை வாசிக்கும்போது கூட்டமைப்பு அம்முடிவை எடுத்தமைக்கான காரணம் என்ன என்பதைத் தெளிவாகப் புரிந்துகொள்ள முடியவில்லை. ஆனால், கூட்டமைப்பின் அநேகமான நாடாளுமன்ற உறுப்பினர்களின் விருப்புக்கு மாறாக எட்டப்பட்ட இந்த முடிவின் பின்னணியில் ஏதோ அழுத்தம் இருக்கின்றது என்பது மட்டும் புலனாகின்றது. அது என்னவாக இருக்கும்?

கடந்த செப்படம்பரில் நடைபெற்ற ஐ.நா. மனித உரிமைக் குழுவின் 18 ஆவது கூட்டத்தொடருக்கு முன்னதாக சிறி லங்கா அரசாங்கத்திற்கு எதிரான தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்படக் கூடும் என்ற ஊகங்களும் எதிர்பார்ப்பும் நிலவி வந்தன. அக்காலப் பகுதியில், இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாக அரசாங்கத்திற்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கும் இடையே நடைபெற்றுவந்த தொடர்பேச்சுக்கள் உரிய பலனைத் தரவில்லை என்ற ஆதங்கத்தில் இருந்துவந்த கூட்டமைப்பு, அரசாங்கம் வழங்கிய உறுதிமொழிகளை நிறைவேற்றும்வரை பேச்சுக்களில் கலந்து கொள்வதில்லை என அறிவித்திருந்தது. தமிழ் மக்கள், குறிப்பாக புலம்பெயர் தமிழ் மக்கள், கூட்டமைப்பின் இந்த முடிவைப் பெரிதும் வரவேற்றிருந்தார்கள். கூட்டமைப்பின் அந்த அறிவிப்பு அரசாங்கத்திற்கு அழுத்தத்தை வழங்கும் அதேவேளை மனித உரிமைக் கூட்டத்தொடரில் சிறி லங்காவிற்கு எதிரான பிரேரணை முன்வைக்கப்படும் போது தமிழ் மக்களின் பிரதிநிதிகளான கூட்டமைப்பின் நிலைப்பாடும் கவனத்திற் கொள்ளப்படும் என மக்கள் நினைத்திருந்தனர்.

ஆனால், கூட்டத்தொடர் ஆரம்பமாக ஒருசில தினங்கள் இருக்கையில் ஆச்சரியப்படத்தக்க வகையில் தமிழ் மக்களின் விருப்புக்கு மாறாக கூட்டமைப்புக்கும் அரசாங்கத்திற்கும் இடையிலான பேச்சுக்கள் மீண்டும் இடம்பெற்றன.

அதேபோன்றதொரு சூழ்நிலையே தற்போதும் ஏற்பட்டுள்ளது. 19 ஆவது மனித உரிமைக் கூட்டத்தொடரின் முன்னதாக ஜெனீவாவிற்கு வருகை தரப் போவதாக கூட்டமைப்பு பகிரங்கமாகவே தெரிவித்திருந்தது. போதாதற்கு சிறி லங்கா அரசாங்கத்திற்கு எதிராகக் கொண்டுவரப் போகும் தீர்மானத்துக்கு ஆதரவு வழங்கப் போவதாக அமெரிக்கா, பிரித்தானியா போன்ற நாடுகளும் தெரிவித்திருந்தன. இந்நிலையில் கூட்டமைப்பின் ஜெனீவா வருகை தமிழ் மக்கள் மனங்களில் பாரிய எதிர்பார்ப்பைத் தோற்றுவித்திருந்தது.

ஆனால், கடந்த தடவையைப் போன்றே இம்முறையும் கூட்டமைப்பின் சார்பில் வெளிவந்துள்ள அறிவிப்பு தமிழ் மக்களை - குறிப்பாக புலம்பெயர் தமிழ் மக்களை - மீண்டுமொருமுறை அதிர்ச்சிக்குள் ஆழ்த்தியுள்ளது. "தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ் மக்களுக்கும் தமிழ்த் தேசியத்திற்கும் துரோகம் இழைத்து விட்டது" என நினைக்கும் அளவிற்கு அது அவர்களைப் பாதித்துள்ளது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சரியான பாதையில்தான் பயணிக்கின்றதா? தமிழ் மக்களின் ஜீவாதாரக் கோரிக்கைகளான தாயகம், தேசியம், தன்னாட்சி என்பவற்றை வென்றெடுப்பதற்கான நீண்ட நெடும் பயணத்தில் தமிழர்களைத் தொடர்ச்சியாக அது வழிநடத்திச் செல்கின்றதா? தமிழ் மக்களுக்கு இன்றைய நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை விட வேறு கதிமோட்சம் இல்லை என்பதற்காக கூட்டமைப்பின் செயற்பாடுகள் யாவற்றையும் வாய்மூடி மௌனிகளாக ஏற்றுக் கொள்ள வேண்டுமா? இது கூட்டமைப்பு உறுப்பினர்களின் ஒட்டுமொத்த முடிவா அன்றி ஒரு சிலரின் தனிப்பட்ட முடிவா? என்பன போன்ற கேள்விகளுடன் கூடிய கருத்தாடல்கள் தற்போது தமிழ்ப் பரப்பில் தீவிரமாக நடைபெற்று வருகின்றன.

எந்தவொரு பேச்சுவார்த்தையின் போதும் வலுச்சமநிலை பேணப்பட வேண்டியது பொதுவிதியாக உள்ளது. தற்போது கூட்டமைப்புக்கும் அரசாங்கத்துக்கும் இடையே நடைபெற்றுவரும் பேச்சுவார்த்தை மேசையில் அரசாங்கத்தைப் போன்று வலுவான நிலையில் கூட்டமைப்பு இல்லை என்பது தெரிந்த விடயம்.

கடந்த மூன்று தசாப்தங்களாக ஈழத் தமிழர் அரசியலில் தலைமைச் சக்தியாக விளங்கிவந்த தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு நிர்மூலம் செய்யப்பட்டுள்ள நிலையிலும், யுத்தத்தில் வெற்றி பெற சகல வழிகளிலும் உதவிய நாடுகள் யாவும் போர்க் குற்றச்சாட்டுகளுக்கு ஆளாகியுள்ள சிறி லங்கா அரசாங்கத்தை எப்பாடு பட்டாவது காத்துவிடக் கங்கணம் கட்டி நிற்கும் நிலையிலும், ஒரு அரசு என்ற அடிப்படையிலும் சிறி லங்கா அரசாங்கமே பேச்சுவார்த்தை மேசையில் மிகவும் வலுவான நிலையில் உள்ளது என்பதை மறுத்துவிடுவதற்கு இல்லை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பொறுத்தவரை கூட்டமைப்பைப் பின்னணியில் இருந்து இயக்குவதாகக் கூறப்படும் இந்தியாவின் பலம், கூட்டமைப்பின் நிலைப்பட்டுக்கு ஆதரவாகக் குரல்தரும், கிட்டத்தட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையே தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகளாக அங்கீகரித்துள்ள மேற்குலகின் பலம், இவை அனைத்துக்கும் மேலாக விடுதலைப் புலிகளுக்கு மீள் உயிர் கொடுப்பதாக அரசாங்கத்தால் குற்றஞ்சாட்டப்படும் புலம்பெயர் ஈழத் தமிழர்களின் அரசியற் செயற்பாடுகள் மற்றும் அனைத்துத் தேர்தல்களிலும் ஏகமனதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கே வாக்களிக்கும் தமிழ் வாக்காளப் பெருமக்களின் பலம் எனக் கூட்டமைப்பு ஒரு வலுச் சமநிலையைப் பேணி வருகின்றது.

அதேநேரம் எப்போதும் மாறிவிடக் கூடிய நிலையிலுள்ள இந்த வலுச் சமநிலையைத் தக்க வைத்துக் கொள்ள கூட்டமைப்பு கடுமையாகப் போராடி வருகின்றது. விடுதலைப் புலிகளின் பிரதிமையாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைக் கருதும் அரசாங்கமும், சிங்களப் பேரினவாதிகளும் கூட்டமைப்பு பலமான நிலையில் இருப்பதைக் கிஞ்சித்தும் விரும்பவில்லை. எனவே, எவ்வகையிலேனும் அந்தப் பலத்தைக் குறைத்துவிட அவை பல வழிகளிலும் முயற்சித்து வருகின்றன. அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் முடியப்பு பியசேன அரசாங்கத் தரப்புக்குத் தாவியதும், அடுத்ததாக அவர் தாவப் போகின்றார், இவர் தாவப் போகின்றார் என அன்றாடம் வெளிவரும் வதந்திகளும் இதற்கான எடுத்துக்காட்டுகள்.

மறுபுறம், தனது பலத்தைத் தக்கவைத்துக் கொள்ள கூட்டமைப்பு பல வழிகளிலும் சமரசங்களைச் செய்ய வேண்டிய இக்கட்டான நிலையில் உள்ளது. 18 ஆவது மனித உரிமைக் கூட்டத் தொடரின் போது அரசாங்கத்துடனான பேச்சுக்களில் மீண்டும் கலந்து கொள்ள கூட்டமைப்பு இறுதி நேரத்தில் எடுத்த முடிவு,

தற்போது ஜெனீவாவிற்கான வருகையை இரத்துச் செய்தமை ஆகிய விடயங்கள் அந்த அடிப்படையிலேயே பார்க்கப்பட வேண்டும்.

ஜெனீவாவிற்கு வருகை தந்து 19 ஆவது கூட்டத் தொடரில் கூட்டமைப்பு கலந்து கொண்ட நிலையில் - சில வேளைகளில் - சிறி லங்கா அரசாங்கத்திற்கு எதிரான உத்தேச தீர்மானம் தோல்வியைத் தழுவுமாக இருந்தால் அது நிச்சயமாகக் கூட்டமைப்பின் வலுச் சமநிலையைப் பாதிக்கவே செய்யும். வேறு விதமாகப் பார்த்தால், ஜெனீவாவில் கூட்டமைப்பும் கலந்து கொண்டு சிறி லங்காவுக்கு எதிரான தீர்மானம் எட்டப்படுமானால், சிங்களப் பேரினவாதிகள் கருதுவதைப் போன்று "சிங்களவர்கள் பழிவாங்கப்படக் காரணமாக இருந்தார்கள்" எனக் காட்டப்பட்டு தமிழ் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் பழிவாங்கப்படக் கூடும். இத்தகைய பழிவாங்கல்கள் சில வேளைகளில் ஒட்டுமொத்த தமிழினத்துக்கும் எதிரான பழிவாங்கலாக மாறக் கூடிய அபாயமும் உள்ளது. ஏனெனில், தற்போதைய நிலையில் சிறி லங்கா அரசாங்கத்துக்கு எதிரான தீர்மானம் என்பது ஒட்டுமொத்த சிங்கள இனத்துக்கும் எதிரான தீர்மானமாகவே சித்திரிக்கப் படுகின்றது. எனவே, 1983 இல் இடம்பெற்றதைப் போன்று மற்றுமொரு கறுப்பு யூலை இடம்பெற்றால் கூட ஆச்சரியப்பட முடியாத சூழலே அங்குள்ளது. இத்தகைய ஒன்றை அரசாங்கமே முன்னின்று ஏற்பாடு செய்யாது விட்டாலும் செய்பவர்களைத் தடுக்காது விடும் நிலைப்பாட்டை அரசாங்கம் எடுக்கக் கூடும் எனக் கருத இடமுண்டு.

இதுவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எதிர்கொண்டுள்ள இக்கட்டான சூழல். மக்களின் விருப்பைக் கவனத்தில் எடுத்து ஜெனீவா செல்வதா? அன்றி வலுச்சமநிலையைப் பேண முயன்று பழிச் சொல்லுக்கு ஆளாகுவதா?

பொதுவில், கூட்டமைப்பின் தீர்மானம் என்ற பெயரில் விடுதலைப் புலிகள் இல்லாத காலகட்டத்தில் எடுக்கப்படுகின்ற தீர்மானங்கள் யாவும் அனைத்து உறுப்பினர்களாலும் அன்றி "வலுமிக்க" ஒரு சில உறுப்பினர்களாலேயே எடுக்கப்படுகின்றன என்பது ஒன்றும் இரகசியமான விடயமல்ல. இது ஜனநாயக அரசியலில் ஈடுபடும் அரசியற் கட்சிகள் விடயத்தில் சகஜமான ஒரு அம்சம்.

ஆனால், அத்தகைய தீர்மானங்கள் யாவும் அனைவரின் கருத்தொருமிப்புடனேயே எட்டப்படுகின்றன என்ற தோற்றப்பாட்டைத் தமது உறுப்பினர்கள் மத்தியிலும், தமிழ்ப் பொதுமக்கள் மத்தியிலும் ஏற்படுத்த கூட்டமைப்பினால் முடியாமல் உள்ளது. அல்லது அதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படவில்லை எனபதே இன்று எழுந்துள்ள சிக்கலுக்குக் காரணம்.

இந்நிலையில், விமர்சனங்களை முன்வைத்தவாறே தொடர்ந்தும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை ஆதரித்து நிற்பதா அல்லது கூட்டமைப்பைப் பொது எதிரியாகச் சித்தரிக்கும் வகையிலான எதிர்ப்பு நிகழ்வுகளை நடாத்தி எமது பலத்தை நாமே குறைத்துக் கொள்ளப் போகின்றோமா என்பதே தமிழ் மக்கள் முன்பாக உள்ள மிகப் பாரிய அதேவேளை சிக்கலான கேள்வி.




R.R. Ajai Silks
4 Ave en Pierre et Marie Curie
93150 Le Blance Mesnil
அனார்க்கலி, பஞ்சாபிகள்,
சுடிதார்,
காக்கறாச்சோலி, சீக்குயின்ஸ்
சாறி, சிறுவர் சிறுமிகளுக்குரிய
ஆடைகள்,
திருமணபட்டுப்புடவைகள்,
பட்டுவேட்டிகள், இமிரேசன்
நகைகள்,
காப்புக்கள் அன்பளிப்புப்
பொருட்களுக்கு நாடுங்கள்.
எமது
வாடிக்கையாளர்களுக்கு
இனிய சித்திரைப்
புத்தாண்டு
வாழ்த்துக்கள்
Tel/Fax: 01 49 47 83 17
Mobile: 064 307 8609
R.R. AJAI SILKS
ஆர்.ஆர்.அஜெய் சில்க்ஸ்
RETOUCHES
தையலகம்
RETOUCHERIE
COUTURE SUR MESURES
TUNIQUE & SARI INDIENS
Tous Vêtements
Notre métier : Parfaire votre allure
POUSSEZ
HORAIRES
OUVERT 7J/7
10H à 20H
SOLDES
-40%
-30%




# மட்டக்களப்பு மங்களராமய விகாராதிபதியின் உண்ணாவிரதமும் பின்னணியும்.

- இலட்சுமணன் -

கிழக்கு மாகாணத்தில் காணி தொடர்பான பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண மத்திய அரசாங்கமும், மாகாண அரசாங்கமும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகையில் மட்டக்களப்பு மங்களராமய ரஜமஹா விகாரையின் விகாராதிபதி அம்பிட்டிய சுமணரத்ன தேரர் மட்டுநகரில் உண்ணாவிரத நாடகம் ஒன்றினை நடாத்தியிருந்தார்.

பெரும் பரபரப்பை உருவாக்கிய இந்த நாடகத்தின் சூத்திரதாரியான அம்பிட்டிய சுமணரத்தின தேரர் கண்டி மாவட்டத்தின் அம்பிட்டிய பிரதேசத்தைச் சேர்ந்தவர். கடந்த பன்னிரண்டு வருடங்களாக மட்டக்களப்பு விகாரையின் விகாராதிபதியாகவும், மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களுக்கான பௌத்த பிக்குகள் சம்மேளனத்தின் உபதலைவராகவும் இருந்து வருகிறார். எதற்கெடுத்தாலும் உண்ணாவிரதத்தினை மேற்கொள்ளும் இவர், கடந்த 2010ஆம் ஆண்டு செப்ரம்பர் 28ஆம் திகதி மட்டக்களப்புக்கு விஜயம் செய்த சிறி லங்கா ஜனாதிபதியின் சகோதரரும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சருமான பசில் ராஜபக்ச தன்னை அவமரியாதைக்கு உட்படுத்தினார் என்று குற்றஞ்சாட்டி மட்டக்களப்பு காவல் அலுவலகத்தின் முன்னால் உண்ணாவிரதம் ஒன்றினை நடத்தி பரபரப்பை உருவாக்கியிருந்தார்.

'மட்டக்களப்பில் அம்பிட்டிய சுமண ரத்தினதேரர் ஆகிய நானும் இருக்கிறேன்' என்று மக்களுக்கும் ஏனையவர்களுக்கும் தெரியப் படுத்துவதற்காகவே இவ்வாறு எதையாவது செய்கிறாரோ என்று நினைக்கத் தூண்டும் வகையில் அவரது செயற்பாடுகள் சிறுபிள்ளைத் தனமாக உள்ளன.

எதற்கெடுத்தாலும் சண்டையிடுவதையும், வாய்த் தர்க்கத்தில் ஈடுபடுவதையும் வழக்கமாகக் கொண்டுள்ள தேரர் ஒரு இனவாதக் கடும் போக்காளர் ஆவார்.



ஐக்கிய நாடுகள் சபைக்கு எதிராக அண்மையில் மட்டக்களப்பில் இவர் நடாத்தியிருந்த ஆர்ப்பாட்டப் பேரணியும் பான் கீ மூனின் கொடும்பாவி எரிப்பும் அவரது குணாம்சத்துக்கு நல்ல உதாரணமாக அமைந்திருந்தது.

தேரரின் நடவடிக்கைகளையும் செயற்பாடுகளையும் பார்க்கும் போது சிறி லங்காவின் அடாவடி அமைச்சர் மேர்வின் சில்வாவுடன் நெருக்கமான உறவுடையவர், அவருடைய கட்டளைகளின் படியே இங்கு செயற்பட்டு வருகிறார். களனியைப் போன்ற நிலையை மட்டக்களப்பிலும் ஏற்படுத்த முனைகின்றாரோ என நினைக்கத் தோன்றுகிறது.

சிங்கள மக்கள் அனைவருமே இனவாத, தமிழர் விரோதச் சிந்தனை உடையவர்கள் அல்ல என்ற போதிலும், தமிழர்கள் இத்தனை இழப்புக்களைச் சந்தித்த பின்னரும் பெரும்பாலான சிங்களவர்களின் மனப்பான்மையில் இன்னமும் மாற்றம் ஏற்பட்டிருக்கவில்லை என்பதற்கு மட்டக்களப்பு விகாராதிபதி நல்லதொரு உதாரணமாகும். மட்டக்களப்பில் தமிழ் மக்களின் ஊடாட்டங்களை, அவர்களின் செயற்பாடுகளை 12 வருடங்களாக நேரடியாகக் கண்டு கொண்டிருப்பவரிடமே மாற்றம் தெரியவில்லை என்றால் வேறு இடங்களில் வசிப்பவர்களின் சிந்தனைகள் எப்படியிருக்கும் என்பதை நினைத்தும் பார்க்க முடியாமல் உள்ளது.

மங்களராமய ரஜமஹா விகாரைக்கு முன்பாக பெப்ரவரி 14ஆம் திகதி காலையில் ஒருசில சிங்கள மற்றும் முஸ்லிம் மக்களை இணைத்துக் கொண்டு அவர் நடாத்திய உண்ணாவிரத நாடகத்தை மீள்குடியேற்றப் பிரதி அமைச்சர் கருணா மாலையில் இளநீர் கொடுத்து முடித்து வைத்தார்.

'சிங்கள, முஸ்லிம், தமிழ் மக்களின் காணிப் பிரச்சினைகளை தீர்த்துவைக்குமாறு கோரியும் கிழக்கு மாகாணத்தில் சிங்கள, தமிழ், முஸ்லிம் ஏழை மக்கள் மீது அரசாங்க அதிகாரிகளினால் மேற்கொள்ளப்படுகின்ற பழிவாங்கல் நடவடிக்கைகளை முடிவுக்குக் கொண்டுவருவதற்கு ஜனாதிபதியின் தலையீட்டை வலியுறுத்தியுமே' தான் உண்ணாவிரதத்தில் ஈடுபடுவதாக தேரர் கூறியிருந்தார்.

கிழக்கு மாகாணத்தில் நிலவும் மூவின மக்களின் காணிப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண பொறுப்பு வாய்ந்த அமைச்சர் ஒருவரை அனுப்பிவைத்து தீர்வு தொடர்பில் ஜனாதிபதி உத்தரவாதமளிக்க வேண்டும் என்றும் கோரிக்கை வைத்தமைக்கு அமைவாகவே பிரதி அமைச்சர் கருணா நேரில் வந்து உண்ணாவிரத்தினை முடித்து வைத்திருந்தார்.

பௌத்த பிக்கு ஒருவர் உண்ணாவிரதம் இருக்கும் போது அதில் சிங்கள மக்கள் கலந்து கொள்வது சாதாரண விடயம் என்ற போதிலும் முஸ்லிம் மக்களும் அழைத்து வரப் பட்டிருந்தமை இது ஒரு பொதுவான பிரச்சினை என்று வெளியே காண்பிப்பதற்காகவே அன்றி வேறில்லை. அதேவேளை, இந்த முஸ்லிம்கள் சிங்கள மொழி பேசும் முஸ்லிம்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

எது எப்படியிருந்தாலும், அம்பிட்டிய சுமண ரத்தினதேரரின் உண்ணாவிரதம் வெளியே சொல்லப்பட்டது போன்று பொதுவானதொரு நோக்கத்துக்காக செய்யப்பட்டதாக இருக்க வாய்ப்பில்லை. தன்னுடைய இருப்பைத் தக்க வைக்கவும் தமிழ், முஸ்லிம் மக்கள் மத்தியில் குழப்பங்களை ஏற்படுத்துவதற்குமாகவே ஒரு சில வறிய முஸ்லிம் மக்களை அவர் வலிந்து இணைத்துக் கொண்டிருக்கிறார் என்பதை ஊகிக்க முடிகின்றது.

அடிக்கடி உண்ணாவிரதங்களில் ஈடுபடும் சுமணரத்ன தேரர் 2008ஆம் ஆண்டு அக்டோபர் 04ஆம் திகதி மட்டக்களப்பு நகரிற்கு விஜயம் செய்த பிரதம நீதியரசர் சரத் என் சில்வா உள்ளிட்ட நீதி அமைச்சின் முக்கியஸ்தர்கள் நீதிமன்றக் கட்டடத் திறப்பு விழா நிகழ்வுகளில் கலந்துகொள்ள தமக்கு அழைப்பு விடுக்காதது மட்டுமன்றி கொழும்பிலிருந்து பிக்கு ஒருவரை



அழைத்து வந்தமைக்கும் எதிர்ப்புத் தெரிவித்து உண்ணாவிரதம் ஒன்றினை மேற்கொண்டிருந்தார்.

மங்களராமய விஹாரையின் பிரதம குருவுக்கு அழைப்பு விடுக்கப்படாததுடன், நிகழ்வைப் பார்வையிடச் சென்ற தன்னை உள்ளே செல்ல அனுமதிக்கவில்லை எனவும் தெரிவித்து மணிக்கூட்டுச் சந்தியில் மறியல் போராட்டத்தையும் உண்ணாவிரதத்தையும் நடத்துவதாக அறிவித்தார்.


மறுதினம் புத்தசாசன பிரதியமைச்சர் குணவர்த்தன மட்டக்களப்பு நகருக்கு நேரில் வந்து தேரருக்கு வழங்கிய உறுதி மொழியையடுத்து உண்ணாவிரதம் முடிவுக்கு வந்திருந்தது. தேரர் முன்வைத்த ஏழு கோரிக்கைகளையும் ஜனாதிபதியுடன் பேசி நிறைவேற்றித் தருவதாக பிரதியமைச்சர் குணவர்த்தன தேரோவுக்கு அப்போது உறுதிமொழி வழங்கியிருந்தார்.

இவ்வாறாக உண்ணாவிரதமிருப்பதும் உறுதி மொழிகளைப் பெற்றுக் கொள்வதுமாக இருக்கும் தேரரின் கோரிக்கைகள் எதுவும் இதுவரை முழுமையாக நிறைவேறியிருக்கா விட்டாலும் அவரது மறைமுக நிகழ்ச்சி நிரல் கொஞ்சம் கொஞ்சமாக நிறைவேறி வருகிறது என்றே கூற முடியும்.

இவருடைய கோரிக்கைகளின் அடிப்படையிலேயே மட்டக்களப்பின் தேர்தல் அலுவலகம் தொடக்கம் பல அரசாங்க அலுவலகங்களில் சிங்கள அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர். அத்துடன் சிங்கள உத்தியோகத்தர்கள், ஊழியர்களும் கூட நியமிக்கப் பட்டுள்ளனர். இது மட்டக்களப்பு மாவட்டத்தையும் சிங்கள மயப்படுத்த நினைக்கும் அரசாங்கத்தின் நிகழ்ச்சி நிரலுக்குத் துணைபோவதாக உள்ளமையை அவதானிக்கலாம்.

மட்டக்களப்பில் சிங்கள மக்களை குடியேற்றக் கோரி 'பயங்கரவாத நடவடிக்கை காரணமாக கிழக்கிலிருந்து இடம்பெயர்ந்தோர் சங்கத்தின்' ஏற்பாட்டில் அம்பிட்டிய சுமணரத்ன தேரர் தலைமையில் சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டமொன்று நடத்தப்பட்டது. இதில் ஐந்து பௌத்த பிக்குகளும் சுமார் ஐம்பது வரையான சிங்களவர்களும் கலந்துகொண்டு தமிழர்களுக்கு எதிரான கோசங்களை எழுப்பினர்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் எல்லைப் பிரதேசமான கெவுளியாமடு பிரதேசத்தில் உள்ளவர்களுக்கும், புதிதாக கச்சக்கொடி சுவாமிமலை பிரதேசத்தில் காணிகளை அடாத்தாகப் பிடித்தவர்களுக்கும் காணி அனுமதிப் பத்திரங்களை பட்டிப்பளை பிரதேச செயலாளர் வழங்க வேண்டும். வெல்லாவெளி பிரதேச செயலகப் பிரிவிலுள்ள சின்னவத்தையில், முன்பு இருந்த சிங்களவர்களுக்குரிய காணிகள் மீளவும் வழங்கப்பட வேண்டும். எல்லைக் கிராமங்களில் தமிழர்களின் காணிகளைப் பிடித்து வைத்திருக்கும் சிங்களவர்களுக்கு அவற்றைச் சொந்தமாக வழங்க வேண்டும். வவுணதீவு பிரதேச செயலகப் பிரிவின் சிப்பிமடுவில் வசித்த சிங்களவர்களுக்குச் சொந்தமான காணிகள் மீளவும் அவர்களுக்கே வழங்கப்பட வேண்டும். அரச அலுவலகங்களில் நிலவும் சிங்களவர்கள் ஒதுக்கப்படும் போக்கு நிறுத்தப்பட வேண்டும். ஆகிய கோரிக்கைகளை தேரர் தன்னுடைய அண்மைய உண்ணாவிரதத்தின் போது முன்வைத்திருந்தார்.




மூவின மக்களின் பிரச்சினைகளுக்குமாகக் குரல் தருவதாக அவர் கூறிய போதிலும் அவருடைய கோரிக்கைகள் அடிப்படையில் சிங்கள மக்களின் தேவைகள், பிரச்சினைகள் பற்றியதாக மாத்திரமே இருப்பதை இதிலிருந்து உணர்ந்து கொள்ளலாம்.

கச்சக்கொடி சுவாமிமலை பிரதேசத்தில் படையினரின் உதவியுடன், அனுமதிப் பத்திரமுள்ள தமிழர்களின் காணிகளைச் சிங்களவர்கள் பிடித்து வைத்துள்ளமைக்கு எதிராக நீதிமன்றில் வழங்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. ஆனாலும், அனுமதிப் பத்திரமுள்ள தமிழ் மக்களின் காணிகளை அபகரிக்கவும் அங்கே பௌத்த விகாரை அமைக்கவும் தொடர்ச்சியாக முயற்சிகள் நடைபெற்று வருகின்றன.

கெவுளியாமடுவில், சிங்கள மக்களும், தமிழ் மக்களும் மீளக் குடியேறி வசித்து வருகின்றனர். ஆனாலும் தமிழ் மக்களின் காணிகளை அபகரிக்கும் செயற்பாடுகள் அங்கும் தொடருகின்றன.

யுத்தத்துக்கு முன்பதாக மட்டக்களப்பு மாவட்டத்தில் கோரளைப் பற்று மத்தி பிரதேச செயலகப் பிரிவில் தியாவட்டவான், கோரளைப் பற்று வடக்குப் பிரதேச செயலகப் பிரிவில் கஜுவத்தை, கோரளைப் பற்றுப் பிரதேச செயலகப் பிரிவில் கல்குடா வலைவாடி, ஏறாவூர்ப் பற்று பிரதேச செயலகப் பிரிவில் புன்னைக்குடா, வவுணதீவு பிரதேச செயலகப் பிரிவில் சிப்பிமடு, மண்முனை வடக்கு பிரதேச செயலகப் பிரிவில் ஜெயந்திபுரம், வெல்லாவெளி பிரதேச செயலகப் பிரிவில் சின்னவத்தை, பட்டிப்பளைப் பிரதேச செயலகப் பிரிவில் கெவுளியாமடு ஆகிய இடங்களில் சிங்கள மக்கள் வசித்து வந்துள்ளனர்.

அதேவேளை, மட்டக்களப்பு நகரிலும், ஏறாவூரிலும் சிங்களப் பாடசாலைகள் இயங்கியுள்ளன. நகரில் உள்ள சிசிலியா பெண்கள் பாடசாலை, புனித மிக்கேல் கல்லூரி என்பவற்றில் சிங்கள இனப் பிள்ளைககள் கல்வி கற்றும் உள்ளனர். ஆனால் கல்குடா, தியாவட்டவான், சிப்பிமடு ஆகிய கிராமங்களில் சிங்களப் பிள்ளைகளுக்கெனத் தனியான பாடசாலைகள் இருந்ததாகத் தெரியவில்லை.

1990 வரையில் குறிப்பிட்ட பிரதேசங்களில் சிங்கள மக்கள் வசித்து வந்துள்ளனர். அதன் பின்னர் ஏற்பட்ட அச்சமான சூழ்நிலை காரணமாகவே அவர்கள் இடம்பெயர்ந்து வேறு இடங்களுக்குச் சென்றிருந்தனர்.




தற்போதைய நிலையில், தியாவட்டவான் பிரதேசத்தில் இருந்த சிங்களவர்களுக்குச் சொந்தமான காணிகள் யாவும் ஏனையோருக்கு விற்கப்பட்டிருக்கிறது. கல்குடாவிலும் ஏறாவூர் நகரிலும் ஒரு சில சிங்களவர்கள் குடியேறியிருக்கின்றனர்.

சிங்கள மக்களோ, முஸ்லிம் மக்களோ தமது காணிகளில் மீளவும் வசிக்கலாம் என்ற சூழல் உருவாகியுள்ள நிலையில், 13 ஆவது திருத்தச் சட்டமூடாக மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ள ஒருசில அதிகாரங்களையும், காணி உரிமை தொடர்பாக முன்வைக்கப்பட்டு வரும் அதிகாரங்களையும் மத்திய அரசின் புத்தசாசன அமைச்சின் கீழ்கொண்டு வந்து கையகப்படுத்தும் நோக்குடன் நாடு நகரத் திட்டமிடற் கட்டளைச் சட்டம் என்ற பெயரில் புதிய சட்டமொன்றைக் கொண்டுவர அரசாங்கம் முயற்சித்துவரும் நிலையில் சுமணரத்ன தேரர் நடாத்திய உண்ணாவிரதம் கவன ஈர்ப்பைப் பெறுகின்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தைப் பொறுத்தவரை இடம்பெயர்ந்தோர் மற்றும் அடாத்தாகக் குடியேறியோர் குறித்த விவகாரங்களை அரசாங்க அதிகாரிகள் சுமூகமாகவே கையாண்டு வருகின்றனர். இந்நிலையில் அம்பிட்டிய சுமணரத்ன தேரர் போன்றோர் தமது இருப்புக்காவும், குறுகிய இனவாத நோக்கங்களுக்காகவும் மேற்கொண்டு வரும் உண்ணாவிரத நாடகங்கள் போன்ற செயற்பாடுகள் இன நல்லிணக்கத்துக்குக் குந்தகமாகவே அமையும் என்பதே உண்மை.

"என் உடைகளைக் கிழித்து நிர்வாணம் ஆக்கினார்கள். நான் மூச்சு விடக் கஷ்டப்பட்டுக் கொண்டும், தலையில் கண்ணில் காயத்துடனும் நெஞ்சில் வெடிக் காயத்துடனும் இருந்தேன். அப்படியே தூக்கி கனரக வாகனத்தில் வீசினார்கள். அந்த மக்கள் பட்ட அவலத்தை விட நான் பட்ட துன்பம் ஒன்றும் இல்லை என்றாலும் எனது அனுபவம் தமிழர்களின் வேதனையைச் சொல்லப் போதுமானது".

# ஊடகத்துறையின் உறுதிக்கரம்!

- அறிவழகன் -



இடது கண்ணைப் பறித்தது இலங்கை இராணுவம் அவரது உயிரைப் பறிக்க முடியாமல் போனதால். மறு கண்ணைவிட விட அவரது உயிரே மேல் எனச் சிரிய இராணுவம் கருதியதால் அவரது உயிரைப் பறித்தனர்.

போரில் முதல் முதல் பலியாவது உண்மை என்பார்கள். அந்த உண்மையின் உறைவிடம்தான் நேர்மையான ஊடகரின் பேனா. அதனால் ஊடகர் போரில் குறிவைக்கப் படுவதை ஈராக் போரில் அமெரிக்க இராணுவம் செய்து காட்டியது. எங்கள் விடுதலைப் போரில் முதல் ஊடகப் பலியாக விழுந்தது நிர்மலராஜனின் உயிர். அதனை செய்தது தமிழர் தரப்பு என்பது மிகப் பெரும் சோகம். அந்தக் கொலைகாரரின் ஆட்சி இன்றும் தொடர்வது தமிழ் இனத்தின் சாபம்.

எத்தனையோ கொலைகள் நடந்து விட்டன, ஆனால் அது எம்மக்களால் எம்மக்களுக்காகச் செய்யப்பட்ட இன விடுதலைத் தியாகம். சொந்த இன நலன் என்ற வகையில் ஒருவித சுய நலமும் உண்டு. ஆனால் எங்கோ பிறந்து எவராகவோ வளர்ந்து எவர் எவர் என்ற இன மத முள் வேலிகளைக் கடந்து மனிதம் என்ற உன்னத பொதுமையில் தன்னை உயர்த்தி அனைத்து மக்களையும் தன் உறவாக நினைத்து அவர்கள் உயர்வுக்காக தன் உடல் பொருள் ஆவி அனைத்தையும் அள்ளிக் கொடுக்கும் அருங் குணம் ஒரு சிலருக்கு மட்டுமே வரும்.

"2001ம் ஆண்டு வன்னியில் 5 இலட்சம் தமிழர்களின் அவல நிலையை அறிந்து கொள்ள புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குள் நான் நுழைந்தேன். அங்கு செல்வதற்கு இலங்கை அரசாங்கம் தடை விதித்திருந்தது. ஸ்ரீலங்காப் படைகளின் கண்ணில் படாமல் வெளி யேறிவிட வேண்டும் என்று நான் நினைத்தேன். சிறு விளக்குகளின் ஒளி முட்கம்பி வேலிகள், இடுப்பளவு தண்ணீர் ஊடான காட்டுப் பாதையில் நான் பயணித்தேன்.

ஆனாலும் நான் படையின் கண்ணில் பட்டேன்.என்னைப் பார்த்ததும் துப்பாக்கிச் சூட்டை ஆரம்பித்தனர். வெளிச்சக் குண்டுகளை வீசினர். நான் பத்திரிகையாளர் என்று கத்தினேன். அதை அவர்கள் பொருட்படுத்தவில்லை. அப்போது கிரனேட் வைத்து தாக்கினார்கள் அந்த இரத்தக் காயத்துடன் முன்னே நடந்து வந்தேன் நிற்க

முடியவில்லை. இரத்தம் வழிந்து கொண்டிருந்தது. அப்போது என் அருகில் வந்த படை வீரர்கள் பலமாகத் தாக்கத் தொடங்கினார்கள்.

என் உடைகளைக் கிழித்து நிர்வாணம் ஆக்கினார்கள்.நான் மூச்சுவிடக் கஷ்டப்பட்டுக் கொண்டும், தலையில் கண்ணில் காயத்துடனும் நெஞ்சில் வெடிக் காயத்துடனும் இருந்தேன். அப்படியே தூக்கி கனரக வாகனத்தில் வீசினார்கள். அந்த மக்கள் பட்ட அவலத்தை விட நான் பட்ட துன்பம் ஒன்றும் இல்லை என்றாலும் எனது அனுபவம் தமிழர்களின் வேதனையைச் சொல்லப் போதுமானது".

இரண்டாம் ஈழப்போர் உக்கிரத்தின் நிறைவுக்காலம். வவுனியாவில் இராணுவத்தினரினதும், விடுதலைப் புலிகளினதும் முன்னரங்க நிலைகளுக்கு இடையிலான சூனியப் பிரதேசம் சுமார் ஐந்து கிலோ மீற்றர் அகலம் கொண்டது. சாதாரணமான போக்கு வரத்துப்பாதை வழியே நகர்வ தென்றால் கூட ஏராளமான இராணுவக் கெடுபிடிகளைக் கடந்துதான் உட்பிரவேசிக்கவோ, வெளியேறவோ முடியும். அதுவும் நடைபாதை வீதி தவிர்ந்த இருபுறமும் சிதறி விதைக்கப்பட்ட மிதிவெடிகளும், அங்கு நிலவும் அசாதாரண அமைதியும் எவரையும் கிலி கொள்ளச் செய்யும் என்பது நிதர்சனம்.

சர்வதேச செஞ்சிலுவைச்சங்கத்தினரின் பிரசன்னம் நிகழும் காலை பத்து மணி தொடக்கம் மாலை நான்கு மணி வரைக்குமான நேரப் பகுதியிலேயே மக்கள்போக்குவரத்து அங்கு நடை பெற்றுக் கொண்டிருக்கும்.

தவிர, எப்போது மோதல் ஆரம்பிக்கும், எப்போது தணியும் என்று எவரும் வரையறை செய்து கொள்ள முடியாத காலப்பகுதி அது. இந்த சூனியப்பிரதேசத்தைக் கடக்கும் எவருக்கும் உயிர்மேல் ஆசை இல்லாதிருத்தலே சிறப்பு என்பது அன்றைய காலப்பகுதியில் எழுதப்படாத ஓர் விதி.

அன்றைய நாட்களில், வன்னிப் பகுதியில் நடைபெறும் எந்தவொரு அழிவுச் செய்திகளும் வெளியில் வராதவாறு சிறிலங்கா அரசாங்கத்தின் செய்தித் தணிக்கை அமுல் படுத்தப் பட்டிருந்தது. விமானக்குண்டு வீச்சுக்களினாலும், எறிகணைத் தாக்கங்களினாலும் கொல்லப்படும் மக்களின் எண்ணிக்கை கூட, விடுதலைப்புலிகளின் எண்ணிக்கையாகவே ஸ்ரீலங்கா அரசால் வெளியிடப் பட்டுக் கொண்டிருந்தது.

வன்னிப்பகுதியின் உண்மை நிலையினை அறிய உலகின் எந்த ஜாம்பவானுக்கும் அங்கு அனுமதி வழங்கப் படுவதில்லை. ஆகவே ஸ்ரீலங்கா அரசின் பொய்ச் செய்திகளை மட்டுமே நம்ப வேண்டிய துர்ப்பாக்கிய நிலை. புலிகளின் குரல் வானொலி உண்மைச் செய்திகளை வெளியிட்டு வந்த போதிலும், வவுனியாவின் முன்னரங்க நிலைகளை அண்டிய பகுதியில் வாழும் மக்களால் மட்டுமே புலிகளின் குரலைக் கேட்க முடிந்திருந்தது.

இவ்வாறான காலப் பகுதியின் ஒரு நாளான 2001 ஏப்ரல் 14 .அன்று இருள்கவியும் மாலை நேரம். இராணுவத்தினரின் முன்னரங்க நிலைகளுக்கு அண்டியதான ஒரு காட்டுப் பிரதேசத்தினை நோக்கி சரமாரியான தாக்குதல் மேற் கொள்ளப்படுகிறது. அவ்வேளையில் எழுப்பப்படும் கூக்குரல் சத்தம் இராணுவத்தினருக்குக் கேட்டிருக்க நியாயமில்லை. காட்டு மிருகங்களின் அசைவுகளுக்குள் கூட இராணுவம் துப்பாக்கிகளால் பதில் சொல்லும் போது, மனிதர்களின் அசைவை அவர்கள் ஒருபோதும் கருத்தில் கொள்ள நியாயமில்லை.

திடீரென துப்பாக்கிகள் முழங்கத் தொடங்கியதும் நான் கீழே விழுந்து மறைவிடம் தேடி தரையில் படுத்தபடி நகர ஆரம்பித்தேன். என் மேல் யாரோ நகர்வது தெரிந்தது - என்னைப் பாதுகாக்கவா அல்லது அவரின் பதட்டமா என்று தெரிவில்லை. அதன் பிறகு நான் செடிகளின் பின்னால் மறைந்து கொண்டேன். பத்து அடி தள்ளி ஒரு மரம் இருந்தது ஆனால் அது வெகு தொலை வெனப்பட்டது.

துப்பாக்கிகள் எம்மை நோக்கி இயங்கிக் கொண்டே இருந்தன. பார்க்க இயலாத ஒரு இராணுவக் கம்ப மொன்றிலிருந்து வெளிச்சம் வந்த வண்ணம் இருந்தது. அப்பொழுதான் அங்கிருந்து வந்த ஒரு தோட்டா என்னைத் தாக்கியது.

என் கண்கள் தாக்கப் பட்டுள்ளன என்று உணர்ந்து கொண்டேன். என் விழியிலும் வாயிலும் இருந்து குருதி மண்ணில் வடிந்தது. இறக்கப் போகிறோம் என்பதில் மிகுந்த வருத்தம் அடைந்தேன். தலையில் அடிபட்டால் வெகு நேரம் கழித்தே இறப்பு நேரும் என்று தோன்றியது (என் கண்ணைத் தாக்கியது ஒரு கூரான பொருளாகும்).

"ஆங்கிலம்... ஆங்கிலம் யாரேனும் அறிவீரா" என்று சப்தமிடத் தொடங்கினேன். இன்னும் வெடி வெடித்தது. உணர்ச்சி வயப்பட்டு அந்த ராணுவத்தினரும் கத்திக் கொண்டிருந்தனர். அவர்களும் என்னைப் போலவே பயந்திருந்தனர்."

இச்சம்பவம் நடைபெற்று முடிந்த மறுநாள் இவ்வாறான வாக்குமூலம் உலகமெங்கும் உள்ள பத்திரிகைகளிலும், ஊடகங்களிலும் வெளிவந்த போதுதான், மரி கொல்வின் (Marie Colvin) என்ற பெண் ஊடகவியலாளரின் துணிவும், திறமையும், வெளி உலகிற்கு வெளிச்சம் போட்டுக் காண்பிக்கப் பட்டது.

மரீ கத்தரின் கொல்வின்.....! அமெரிக்காவின் நியூயோர்க் மாநிலத்தில் உள்ள Oyster Bay என்னும் இடத்தில் 1956 சனவரி 12 இல் பிறந்தார். அதே இடத்திலுள்ள உயர் நிலைப் பள்ளியில் கல்வி கற்று 1974 இல் தேர்ச்சி பெற்ற பின்பு, Yale பல்கலைக் கழகத்தில் மாந்தவியல் துறையில் கற்று 1978 இல் இளநிலைப் பட்டம் பெற்றார்.



Yale பல்கலைகழகத்தில் இருந்து பட்டம் பெற்ற பின்பு, ஓராண்டு கழித்து United Press international என்னும் நிறுவனத்தின் சார்பாக நியூயோர்க் நகரக் காவலர் செய்தியாளராகப் பணியாற்றினார். 1984 இல் United International நிறுவனத்தின் பிரான்சு நாட்டிற்கான தலைவராக 1984 இல் பதவி ஏற்றார். 1985 இல் The Sunday Times என்னும் பிரித்தானிய செய்தி யூடகத்தில் சேர்ந்தார். 1986 முதல் அச் செய்தித் தாளின் மத்திய கிழக்கு நாடுகளிற்கான செய்தியாளராகப் பணிபுரிந்து, பின்னர் 1995 இல் வெளியுறவுச் செய்தியாளராகப் பணி புரிந்தார். 1986 இல் இவரே லிபியாவைச் சேர்ந்த கடாபியை முதன் முதலாக நேர்காணல் கண்டார், அதுவும், அமெரிக்காவின் "எல்டொராடோ பள்ளத்தாக்கு" எனப் பெயர் சூட்டப் பட்ட படைத் துறை நடவடிக்கையில் லிபியா மீது குண்டு போடப்பட்ட பின்பு இந் நேர்காணலைச் செய்திருந்தார். மத்திய கிழக்கு நாடுகளைப் பற்றிய துறையிலேயே இவர் சிறப்புப் பட்டறிவு கொண்டவர் எனினும், செச்சனியா, கோசவோ, சியரா லியோன், சிம்பாப்வே, இலங்கை போன்ற பல நாடுகளில் நிகழ்ந்த உள்நாட்டுப் போராட்டங்கள், எழுச்சிகளைப் பற்றி செய்தி சேகரித்து எழுதியுள்ளார்.

இவர் கோசவோவிலும், செச்சனியாவிலும் மிகவும் துணிவுடன் பணியாற்றி, அனைத்துலகப் பெண்கள் ஊடக நிறுவனப் பரிசை வென்றார். இவர் பல ஆவணப்படங்களுக்கும் வசனம் எழுதி உருவாக்கி இருக்கின்றார் எடுத்துக்காட்டாக் BBC செய்தி நிறுவனத்திற்காக Bearing Witness என்னும் ஆவணப் படத்தில் தோன்றி நடித்தார்.

2009 ஆண்டின் மே மாதப் பகுதியில், முள்ளிவாய்க்கால் பகுதியில், தமிழின அழிப்பு நடை பெற்றுக் கொண்டிருந்த வேளையில், தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தர்களான நடேசன் மற்றும் புலித்தேவன் ஆகியோரோடு தொடர்பில் இருந்து, உண்மை நிலையை மேற்குலகத்திற்கு அறிவித்துக் கொண்டிருந்தார்.

தமது ஆயுதங்கள் மௌனிக்கப்பட்டு, தமது வீரர்கள் வெள்ளைக் கொடியோடு இராணுவ முன்னரங்க நிலைகளுக்குப் புறப்படத் தயாராக இருக்கிறார்கள் என்ற செய்தி, திரு. நடேசன் அவர்களால் கொல்வின் அம்மையாருக்கும் தெரிவிக்கப் பட்டது. அவர்கள் புறப்பட்டுச் சில நிமிடங்களின் பின், "அவர்களது தொடர்பு துண்டிக்கப்பட்டு விட்டது, அவர்கள் பற்றிய செய்தி எதுவும் கிடைக்கவில்லை, எனவே அவர்கள் கொல்லப் பட்டிருக்கலாம்" என்ற சந்தேகத்தை வெளியிட்டு, ஸ்ரீலங்கா அரசின் படு கொலையை வெளியிட்டு வைத்தவர்களில் கொல்வின் அம்மையாரும் ஒருவர். நடேசன் அவர்கள் தொடர்பை ஏற்படுத்திய போது, பிரித்தானிய நேரம் சரியாக நடுநிசியாக இருந்த போதிலும், உடனடியாகச் செயற்பட்ட கொல்வின் அம்மையார் அமெரிக்க வெளியுறவுச் செயலர் ஹிலாரி கிளிண்டன் அவர்களுக்கும் இச்செய்தியைத் தெரியப்படுத்தியிருந்தார்.

நடேசன் அவர்களையும் உடன் புறப்பட்டவர்களையும் காப்பற்ற வேண்டும் என்ற துடிப்புடன் செயற்பட்ட கொல்வின் அம்மையார் அன்றைய தினம் காலை வரை விழித்திருந்து, நடேசன் அவர்களது மீள் தொடர்பிற்காகக் காத்திருந்தவர்.

இலங்கைப் பேரினவாத அரசின் படுகொலைகள் அனைத்தையும் திரட்டி செய்திகளாக வெளியிட்டு வைத்தவர்களில் அம்மையாரின் பங்கு அளப்பரியது.

கொல்வின் அம்மையார் அவர்கள் சிரியா நாட்டிற்குள் நுழைந்த போதிலும், சட்டப்படி அதற்கு அனுமதி இருந்திருக்கவில்லை என்று கூறப்படுகிறது. அயல் நாடொன்றின் வழியாக உந்துருளி ஒன்றிலேயே அவர் சிரியா நாட்டை அடைந்திருக்கிறார். ஆனாலும் அங்கே இடம் பெறும் விடயங்களைப் பதிவு செய்ய அவருக்கு அனுமதி அளிக்கப்படவில்லை. சிரியாவின் homs என்ற நகரத்தின் மேற்குப் பகுதியான Baba - Amar என்னுமிடத்தில் தங்கியிருந்து, செய்திகளை உடனுக்குடன் அறியத் தந்திருக்கிறார்.

துணிச்சல் மிக்க பெண்மணியான இவர், சிரியாவின் மோதல் நிகழும் பகுதிகளில், இரவு வேளைகளில் கூட செய்தி சேகரிக்கும் பணியில் ஈடுபட்டிருந்தார் என்பது வியப்பூட்டும் செய்தி எனினும், கடந்த காலங்களில் பணியாற்றிய அனுபவமும், விவேகமும் இவருக்கு இறுதிவரை கைகொடுத்திருந்தன.

இறுதியாக் பெப்ரவரி 21ம் திகதி தனது செய்திப்பரப்பல் ஊடாக, BBC , Channel 4, ITN News, CNN ஆகிய செய்தி நிறுவனங்களோடு தொடர்பில் இருந்திருக்கிறார்.கொல்வின் அம்மையார் அவர்களின் மணவாழ்வு சிறப்பாக அமைந்திருக்கவில்லை. இரண்டு முறை மணம் முடித்து, பின்னர் விவாகரத்துப் பெற்றுக் கொண்டார்.

தனது வாழ்நாளை ஊடகப் பணிக்காகவே அர்ப்பணித்த இவர் 2000 ம் ஆண்டில் சிறந்த ஊடகவியலாளர்: Foreign Press Association, 2000ம் ஆண்டில் Courage in Journalism: International Women's Media Foundation, 2001ம் ஆண்டில் British International Journalist of the Year award, Foreign Reporter of the Year: (British Press Awards ), 2010ம் ஆண்டில் British International Journalist of the Year award: British Press Awards (second award) ஆகிய விருதுகளைப்பெற்று, நான்கு முறை விருது பெற்ற பத்திரிகையாளர் என்ற பெருமையையும் கொண்டவராவார்.

இவர் தங்கியிருந்த வீட்டிலிருந்து, செயற்கைக் கோள் மூலமான தொடர்பில், செய்திகளைப் பரிமாறிக் கொண்டிருந்த வேளையில், சிரியப் படைத் துறையினரால் அவ்விடம் அடையாளம் காணப்பட்டுத் தாக்குதல் மேற் கொள்ளப் பட்டிருக்கிறது. இவருடன் அவ்வீட்டினில் இருந்த, பிரான்ஸ் நாட்டின் படப் பிடிப்பாளரும், இன்னொருவரும் வீட்டை விட்டு வெளியே தப்பி ஓடியபோதும், கொல்வின் அம்மையாரும், பிரான்ஸ் நாட்டின் படப் பிடிப்பாளரும் உயிரிழக்க வேண்டியதாயிற்று.

ஒரு ஊடகவியலாளர் என்பதற்கும் மேலாக, தனித்து நின்று சாதித்துக் காட்டிய பெண்மணி என்பதே இவருக்குச் சாலச் சிறந்தவோர் பெயராக அமையும். ஊடக தர்மம் என்பது அற்றுப் போய்க் கொண்டிருக்கும் இவ்வுலகில், எப்பக்கமும் சாயாது நின்று, உண்மைகளை வெளிக் கொணர்ந்த மரி கொல்வின் அம்மையாரின் இழப்பென்பது ஈடு செய்யப்பட முடியாத தொன்று.


கூடவே எம்மினத்தைச் சிங்களம் வேரறுத்துச் சாய்த்த வேளையில், முக்கிய சாட்சியாக இருந்த அம்மையாரின் செயற்பாடுகளை, தமிழினம் மிகுந்த ஆவலோடு எதிர் பார்த்திருந்த வேளையில், இப்பிரிவு நிகழ்ந்தது இன்னுமொரு வேதனைக்குரிய விடயமாகும்.

இனிவரும் ஊடகத் தலைமுறைக்கு கொல்வின் அம்மையாரின் செயற்பாடுகள் ஒரு வழிகாட்டியாக அமையும் என்ற நம்பிக்கையோடு, காலத்தால் அழியாத இப்பெண்மணிக்கு அகரம் இதழும் தலை சாய்த்துத் தனது இறுதி வணக்கத்தைத தெரிவித்துக் கொள்கிறது.

MEDIA ASIA
Another Home of Southasian Channels

For satellite news, live radios, TV-Guide, Radio-schedules, contact details of Tamil channels in the world etc.

www.mediaasia.in



# தனி நாட்டுப் பிரகடனம் செய்யாவிட்டால் சிங்களம் இழுத்தடித்து பிரபாகரனின் காலத்துக்குப் பின் எந்த உரிமையும் கொடுக்காது!

**- வ. நவரத்தினம்.**



"தன்னிச்சையான தனித் தமிழீழப் பிரகடனம் ஒன்றுதான் எமக்கு ஏற்ற வழி அதனை இப்போதாயினும் செய்யாவிட்டால் சிங்களம் காலத்தை இழுத்தடித்து பிரபாகரனின் காலம் கழியும் வரை பார்த்து முடிவில் எதுவுமே தராது விட்டுவிடும்." இப்படித் தமது இறுதி நாட்களில் தமிழ் நெற் இணையத்துக்கு வழங்கிய குரல் வழி நேர்காணலில் கூறிப்போன தீர்க்கதரிசிதான் திரு நவரத்தினம். இதனை தமிழ் நெற் 18.10.2010 பதிவில் கேட்கலாம். அவர் கூறியதை இன்று நாம் காணமுடிகிறது.

மேலும் 1972 முதல் இன்று வரையான அனைத்து அரசமைப்பு விதிகளுமே சட்டவிரோதமாகச் சிங்களத்தால் நிறைவேற்றப்பட்டன. இவை முதன்மைச் சட்டமாகிய 1948 அரசமைப்பின் மாற்றமுடியாத விதிகளை மீறி உள்ளன. பிரித்தானிய அரசினால் வழங்கப்பட்ட 29வது பிரிவை அப்பட்டமாக மீறிய குற்றம் இழைக்கப் பட்டுவிட்டது. தமிழ் மக்களின் ஆணை பெறப்படாமலே தமிழர் மீது புதிய அரசமைப்புகள் திணிக்கப்பட்டுள்ளன.

(The 1972 Constitution and all constitutions that followed are illegal ones. They are in blatant violation of the Supreme Law of the 1948 Constitution, along with Article 29 which was supposed to contain the safeguards and which had been declared by Her Majesty's Privy Council in England, to be unalterable and to be with entrenched powers. Yet, this was replaced by a totally illegal constitution which declared Ceylon a Republic, without Tamil The 1972 Constitution and all constitutions that followed are illegal ones. They are in blatant violation of the Supreme Law of the 1948 Constitution, along with Article 29 which was supposed to contain the safeguards and which had been declared by Her Majesty's Privy Council in England, to be unalterable and to be with entrenched powers. Yet, this was replaced by a totally illegal constitution which declared Ceylon a Republic, without Tamil mandate.)

இப்படியான சட்டத்தை தமிழரசுக்கட்சி தனது பகிஷ்கரிப்பைத் தொடராது விட்டதால் இன்றைய நிலை ஏற்பட்டது என்றார். இவர் தனித் தமிழ் ஈழம் நோக்கி உருவாக்கிய தமிழர் சுயாட்சிக் கழகத்தை 1977ல் திட்டமிட்டு தமிழரசுக் கட்சி தலைமையிலான தமிழர் விடுதலைக் கூட்டணி தோற்கடித்ததன் மூலம் இவரது தனி நாட்டு இலட்சியம் பாழடிக்கப்பட்டது.

வாழ் நாள் இறுதிவரை சுதந்திர இறைமை கொண்ட தமிழ் ஈழக் கனவுடன் 40 வருடங்களுக்கு மேல் அரசியலில் போராடி அதே கனவுடன் தமது 97வது வயதில் கனடா மொன்றியலில் 2006 ஒக்டோபில் அமரத்துவம் அடைந்தார்.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மூளை எனப் புகழப்பட்ட அன்றைய ஊர்காவல் துறைத் தொகுதி பா.உ. திரு.வ. நவரத்தினம் அக்கட்சியின் நிறுவனர்களில் ஒருவராக தந்தை செல்வா, கோப்பாய் கோமான் வன்னியசிங்கம் ஆகியோருடன் செயற்பட்டவர்.

1956ல் ஆகஸ்ட் திருகோணமலையில் நடந்த தமிழரசுக் கட்சியின் மாநாட்டில் ஒற்றை ஆட்சி அரசமைப்பை மாற்றி அதற்குப் பதில் சமஷ்டி ஆட்சி முறையை 1 வருட காலத்தில் சுயாதீன உரிமைகள் அடங்கிய சிங்கள தமிழ் அரசுகள் கொண்ட இணைப்பாட்சி முறையைக் உருவாக்காது விட்டால் தமிழரசுக் கட்சி தொடர்ச்சியான சாத்வீகப் போராட்டத்தில் இறங்கும் என்ற தீர்மானத்தின் மூலம் பண்டார நாயக்காவை நிர்பந்தித்தது. இதுவே 1957ல் பண்டா செல்வா ஒப்பந்தம் மூலம் பிராந்திய

சுயாட்சி கொண்ட சபைகளை உருவாக்க இணக்கம் ஏற்பட்டுள்ளது.

1959ல் பண்டாரநாயக்கா கொலையுண்டதால் ஸ்ரீமாவோ பிரதமராகி சிங்கள மொழி அமுலாக்கத்தைத் தமிழர் பிரதேசங்களில் தீவிரப்படுத்தவே தமிழரசுக் கட்சி சத்தியாக்கிரக வழியில் சட்டமறுப்பு இயக்கத்தை வடக்கு கிழக்கு எங்கும் சமகாலத்தில் அரச அதிபர்கள் மற்றும் அலுவலகங்களை முற்றுகை இட்டு முடக்கியது. இதனால் ஸ்ரீமா ஆதன் முறையாக தமிழர் பிரதேசங்களுக்கு இராணுவத்தை அனுப்பி தமிழ் மக்கள் மீது தாக்குதலை நடத்தி தமிழ்த் தலைவர்களைக் கைது செய்து பானங்கொட இராணுவமுகாமில் அடைத்தது.

மாதக் கணக்கில் முடிவு இன்றித் தொடர்ந்த சத்தியாக்கிரகம் அரசுக்கு நெருக்கடியை போதிய அளவு ஏற்படுத்தாத காரணத்தால் திரு. நவரத்தினத்தின் ஆலோசனையில் தனியான தமிழீழ தபால் சேவையைத் தொடங்க தமிழீழ முத்திரையை வெளியிடச் செய்தார். எனவே அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்கும் நிலையை ஏற்படுத்தக் காரணமான அமரர் நவம் கட்சியின் மூளை எனப் போற்றப்பட்டார்.



1961ல் வெளியிடப்பட்ட தமிழ் அரசு முத்திரை

1965ல் உருவான டட்லி செல்வா ஒப்பந்தமும் தேசிய அரசு உருவாக்கமும் கட்சி தனது கொள்கைகளை கைவிட்டு சிங்கள மொழி படிக்காத தமிழ் அரச ஊழியர்களை வேலை நீக்கியும் திருகோணமலைத் துறைமுகத்தை அரசுடமையாக்கி அதன்மூலம் சிங்கள மக்களைக் குடியேற வைத்தும் புதிதாக சேருவிலவில் சிங்கள பாராளுமன்றத் தொகுதியை உருவாக்கியும் அரசு ஒப்பந்த விதிகளை மீறியது. ஆனாலும் தமிழரசுக் கட்சியும் அதன் அமைச்சரான முருகேசு திருச்செல்வமும் (நீலன் திருச்செல்வத்தின் தந்தையார்) அரசில் இறுதிவரை தொடர்ந்தே இருந்தனர்.

அரசு கொணர்ந்த அடையாள அட்டை மசோதாவை ஆட்சேபித்து தமிழரசுக் கட்சியின் கட்டளையை மீறி அரசை எதிர்த்து வாக்களித்த காரணத்தால் அவர் கட்சியிலிருந்து வெளியேற்றப் பட்டார். அத்தோடு அவரை தமது அரசியல் எதிரியாகப் பாவித்த தமிழர் விடுதலைக் கூட்டணி அவரையும் அவரது இலட்சியத்தையும் தமிழ் மக்களின் மீட்புக்கு இடமளிக்காமல் செய்தது.

தமிழர் சுயாட்சிக் கழகத்தின் விடுதலை மாதமிருமுறை இதழில் நமக்கொரு நாடு என்ற தொடரில் இஸ்ரவேல் உருவான வரலாற்றைத் தொடராக எழுதி வந்தார். 1956ல் இலங்கை முகம் கொடுக்கும் சிக்கல்கள் என்ற நூலையும் தமிழ் தேசியத்தின் எழுச்சியும் வீழ்ச்சியும் நூலை 1995லும் எழுதினார்.

இவர் மறைவையிட்டு தமிழீழத் தேசியத் தலைவர் நாட்டுப்பற்றாளர் என்ற பட்டமளித்துக் கௌரவித்தார். கனடாவில் அவரது மகன் அவரது நினைவாக 2007ல் விழா எடுத்து முத்திரை வெளியிட்டு கொண்டாடினார்.

ஒரு நேர்மையான சிறந்த அறிவு கொண்ட நல்ல மனிதரை அகரம் இம்மாதம் நினைவுபடுத்தி அன்னாருக்கு அஞ்சலி செலுத்துகிறது. (முக்கிய தரவுகளுக்காக தமிழ் நெற் இணையத்துக்கு அகரம் நன்றி தெரிவிக்கிறது).




# கட்சி அரசியல் சூதாட்டத்தில் அல்லாடும் இந்திய மக்கள்!




தமிழகத்திலிருந்து சீதாராமன்

சென்ற ஆண்டு நடந்து முடிந்த தமிழ் நாடு சட்ட சபைத் தேர்தல் மிகப் பெரும் அரசியல் பூகம்பத்தை ஏற்படுத்தியது. வரலாறு காணாத அளவுக்கு மக்களின் வாக்குப் பதிவு, தேர்தல் ஆணையம் நெறிப் படுத்திய தீவிர தேர்தல் சட்ட விதிகளின் கடுமையான அமுலாக்கம் என்பன மக்களின் வாக்குகளுக்கு ஒரு புது அர்த்தத்தையும் பரிணாமத்தையும் வழங்கியது. மக்களும் முழுமையான மன ஈடுபாட்டுடன் தமது மன எழுச்சியை வெளிப் படுத்தினர்.

தி.மு.க ஆட்சியின் அதிகார பலம், பண பலம் என்பவற்றைப் புதிய தேர்தல் அதிகாரி அதிரடிப் பதவி மாற்றங்கள் மற்றும் சட்டம், ஒழுங்கு விதிகளை கடுமையாக அமுலாக்கம் செய்ததன் மூலம் பணம் கொடுத்துப் பதவியை வாங்கும் வழமையான நடைமுறை சிதறடிக்கப் பட்டது. அதனால் மாநில ஆட்சியில் இருந்த தி.மு.க.வோ மத்திய ஆட்சியை வைத்துள்ள காங்கிரஸோ தேர்தலில் எதுவித தில்லு முல்லையும் செய்து பதவியைத் தக்க வைக்க முடியாமல் போயிற்று. அதன் முடிவு கொடி கட்டிப் பறந்த தி.மு.க., காங்கிரஸ் கட்சிகளின் கொட்டம் வேரோடு சாய்க்கப் பட்டது.

மறைமுகமான குடும்ப அதிகார ஆட்சி அடக்கு முறைக்குள் சிக்கிக் கிடந்த மக்கள் தமது வெறுப்பைக் காண்பிக்கத் தேர்தல் ஆணையம் வழங்கிய ஜனநாயக உத்தரவாதம் நல்ல ஒரு வாய்ப்பைக் கொடுத்திருந்தது. ஈழப் போரில் தமிழ் இனமக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதியும் அங்கு அரங்கேறிய இனஅழிப்புப் போருக்கு இந்திய மத்திய மாநில அரசுகள் சிங்களத்துக்கு வழங்கிய நிபந்தனையற்ற ஆதரவும் மக்களை தி.மு.க. காங்கிரஸ் கட்சிகளை வேரோடு பிடுங்கி எறிய வைத்தது.

சிங்கள அரசும் தி.மு.க. காங்கிரஸ் கூட்டணியும் இத்தேர்தலில் தமிழ் மக்களின் எதிரிகளாகப் பார்க்கப்படும் நிலை தமிழகத்தில் உருவானது. சிங்கள அரசு தமிழக மீனவர் மீதான தாக்குதலை தொடர்ந்து நடத்தி வருவது ஒருபுறம் நடக்கையில் அதனை இந்திய மத்திய மாநில அரசுகளே நியாயப் படுத்தும் நிலையால் தமிழக மக்களுக்குத் தாமும் ஈழத் தமிழர் போன்ற ஒரு நிலையில் உள்ளாகி இருப்பது போன்ற உணர்வு காணப்பட்டது.

செல்வி ஜெயலலிதா தலைமையில் அமைந்த புதிய ஆட்சி முன்னைய ஆட்சியில் ஊழல் மற்றும் நில அபகரிப்பு வழக்குகள் பற்றிய பொது மக்களின் முறைப்பாடுகள் ஆயிரக் கணக்கில் குவியவும் வகை தொகையற்ற கைதுகளும் சிறை வைப்புகளும் நீதிமன்ற விசாரணைகளும் அரசியல் பழிவாங்கல் எனும் அளவுக்கு அன்றாடச் செய்திகள் ஆயின.

கலைஞரின் குடும்ப உறுப்பினர்களே முட்டி மோதி கழக அரசியல் சந்தி சிரிக்கும் அளவுக்குத் தரம் கெட்டுப் போனது. கலைஞரின் தலைமை பல நேரங்களில் சவாலையும் கேலி கிண்டலையும் எதிர் கொள்ள நேர்ந்தது. கலைஞரின் இலக்கிய அறிவே தடுமாறும் வகையில் அவரது இலக்கிய மேற்கோள்கள் தப்புத் தப்பாக அமைந்தன. எடுத்து விடும் வாதங்களும் அர்த்தம் இல்லாத பேத்தல்களாகக் காணப்படுவது அவரது முதுமையின் அடையாளங்களோ என எண்ண வைக்கின்றன. ஆனால் எதிர்ப்பாளர்களின் குறிப்பாக சோவின் கண்டன விமர்சனங்களுக்கு நல்ல தீனியாக அமைந்து விடுகின்றன.

ஆனாலும் மத்திய அரசும் மாநிலக் காங்கிரஸ் கட்சியும் தி.மு.க.வை சீண்டாமலும் தமிழ் மக்களையும் அ.இ.அ.தி.மு.க.வையும் தயவு தாட்சணியம் பாராது வறுத்து எடுப்பதில் ஆர்வமாக உள்ளன. தமிழக அரசுக்குத் தேவையான நிதி உதவி வழங்குவதையே ஒரு ஆயுதமாக மத்திய அரசு பயன் படுத்தி வருகிறது. உதாரணமாகச் சென்ற ஆண்டின் இறுதியில் வீசிய தானே புயல் ஏற்படுத்திய சேதம் 5000 கோடி வரை மதிப்பிடப்பட்டு மத்திய அரசிடம் கோரிக்கை வைக்கப்பட்டது. ஆனால் மத்திய அரசோ வழங்கியது வெறும் 500 கோடி மட்டுமே. 735 கிராமங்கள், 2 இலட்சம் வீடுகள், 30 இலட்சம் மக்கள் பல்லாயிரம் கெக்டேயர் பயிர்கள் எனப் பெரும் பட்டியலே அழிவாக இருக்கையில் மக்களும் மாநில அரசும் படும் பாடு சொல்லமுடியாது.

மேலும் தமிழக மக்கள் முன்னெடுக்கும் எந்த அரசியல் செயற்பாடு என்றாலும் அதனை மத்திய அரசு வக்கிர உணர்வோடு அணுகும் வன்மம் அதன் ஒவ்வொரு அசைவிலும் காணமுடிகிறது. இத்தகைய நிலையை ராஜீவ் காந்தி கொலைச் சந்தேக நபர்களான சாந்தன், பேரறிவாளன், முருகன் மீதான மரணை தண்டனை பற்றிய கருணை மனு 13 வருடங்கள் கழித்து நிராகரிக்கப் பட்டமை வெளிப் படுத்தியது.

குறிப்பாகக் கூடங்குளம் அணு மின் நிலையம், முல்லைப் பெரியாறு அணை விவகாரம் என்பனவற்றில் மத்திய அரசு புதிய அ.இ.அ.தி.மு.க. தலைமையிலான மாநில அரசின் மீது ஒருவித கட்சி அரசியல் பனிப் போரை நடத்துவதை அவதானிக்க முடிகிறது. ஈழத்தில் மகிந்த அரசு தமிழ் மக்களை எவ்வாறு மதிப்பீடு செய்து கெடுபிடிகளை ஏற்படுத்துகிறதோ அதே வகையான அரசியலை இந்திய மத்திய அரசும் தமிழகத்தில் நடத்துவதை அவதானிக்க முடியும்.

1988ல் கூடங்குளம் அணுமின் நிலைய ஒப்பந்தம் கைச்சாத்தான காலத்தில் இருந்தே சமூக ஆர்வலரான சுப. உதயகுமாரன் அணுக்கதிர் வீச்சினால் மக்களுக்கும் மண்ணில் உயிர்வாழ் இனங்களுக்கும் ஏற்படக்கூடிய ஆபத்தை மக்களுக்கு உணர்த்தி அதனைத் தடுக்க முயன்று வருகிறார். அணு உலைகளால் ஏற்பட்டு வரும் ஆபத்துகளால் யேர்மனி, பிரான்ஸ், பிரித்தானியா போன்ற முன்னேறிய நாடுகளே அவற்றை மூடியும் அகற்றியும் வரும் இந்நாட்களில் இந்தியா மேலும் பல உலைகளை உருவாக்க முற்படுவது மனிதருக்கும் மண்ணுக்கும் விளைவிக்கும் மிகப்பெரும் குற்றமாகும். அத்தகைய குற்றத்தை மக்களாட்சி என்ற பெயரால் ஊழலுக்குப் பெயர் பெற்ற அரசு இழைக்க முற்படுகிறது.

மக்களின் போராட்டத்தை யேர்மன் மற்றும் அமெரிக்க நாடுகளின் தொண்டு நிறுவனங்களிடம் பணம் பெற்று இந்திய நாட்டுக்கும் அரசுக்கும் துரோகம் செய்கின்றனர் என மத்திய அரசும் காங்கிரஸ் கட்சியும் குற்றம் சுமத்துகின்றன. இதில் காங்கிரஸ் ஊது குழல்கள் இவர்களைக் குண்டர் சட்டத்தின் கீழ் சிறையில் போட வேண்டும் என ஆர்ப்பரிக்கின்றனர்.

இந்தக் கூச்சலின் உச்சக் கட்டமாக யேர்மானிய உல்லாசப் பயணி ஒருவர் தமது தொண்டு அமைப்பின் மூலம் உதவி செய்தார் எனப் பிடித்து எதுவித விசாரணையும் விளக்கமும் இன்றி நாடு கடத்தப் பட்டுள்ளார். இது விடயமாகவும் தமக்கும் தமது சமூகப்பணிக்கும் அவதூறு ஏற்படுத்தும் வகையில் அறிக்கை விடுத்துள்ள பிரதமர் மன்மோகன் சிங் மீதும் வழக்குத் தொடுத்துள்ளார் திரு. உதயகுமார்.

எப்படியாயினும் அணுமின் நிலையத்தைச் செயற்பட வைக்கவேண்டும் என்பதில் காங்கிரஸ் தலைமையிலான மத்திய அரசு உறுதியாக உள்ளது. இதற்கெனவே செயற்கையான மின்சக்தி தட்டுப்பாட்டை தமிழகத்தில் உருவாக்கி மக்களையும் ஜெயலலிதாவின் மாநில அரசையும் கடுமையான பொருளாதார சமூக அரசியல் நெருக்குதலுக்கு உட்படுத்தி வதைக்கிறது. ஆட்சிக்கு வந்த புதிதில் மத்திய மின் இணைப்பிலிருந்து 1000 மெகாவாட் மின்சாரம் கேட்டிருந்தார். அதில் பாதியைக் கூட மத்திய அரசு வழங்கவில்லை. குஜராத்தில் இருந்தும் மின்சாரம் கேட்டிருந்தார்.

எங்கே போயும் மாநிலத்தில் மின்சாரத் தேவை தீரவில்லை. தினமும் மின்வெட்டு மக்களைப் பாடாய்ப் படுத்துகிறது. மாநில அரசுக்கு எதிரான மக்களின் வெறுப்பை ஏற்றி கூடங்குளம் அணுமின் நிலையத்தைச் செயற்பட வைப்பதே மத்திய அரசின் ஒரே நோக்கமாகத் தெரிகிறது. அ.தி.மு.க.வை அடிக்கவும் அணுமின் நிலையத்தைத் திணிக்கவும் அரசு சந்தர்ப்பத்தை உருவாக்குகிறது. மாநில அரசு தன் பங்குக்கு நியாயமான ஆட்சி நடத்தவும் அரசியல் எதிரியான தி.மு.க.வை பழிவாங்கவும் அதிரடி நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இத்தகைய நடவடிக்கைகள் சிலவற்றால் மக்கள் அநியாயமாக அவதிக்குள்ளாகும் நிகழ்வுகளும் உண்டு. உதாரணமாக சமச்சீர் கல்விப் பாடத் திட்டம்,

அண்ணா நூற்றாண்டு நினைவு நூலகம், புதிய சட்ட சபை வளாகம் போன்றவை குறிப்பிடத் தக்கவை. இவற்றில் எவை சசிகலாவின் சதியால் ஏற்பட்டவை என்பது இன்னமும் வெளிவராத செய்திகள். பஸ் கட்டண, பால் விலை, மின் கட்டண அதிகரிப்பால் வாழ்க்கைச் செலவினப் பழுவால் மக்கள் தவிக்கின்றனர்.

உள்வீட்டுச் சதியோ உண்மைப் பழிவாங்கலோ இரண்டில் எதுவாயினும் மக்களின் வரிப்பண இழப்பும் அவற்றால் ஏற்படும் இடரும் மக்களுக்கே என்பதே யதார்த்தம். வக்கிர அரசியல் செய்வதில் தி.மு.க.வும் காங்கிரஸ் கட்சியும் சளைத்தவை அல்ல. எனவே மக்கள் துயர் படுவது என்பது இயல்பு என்பதுபோல் ஆகிவிட்டது. இந்த இரண்டு கட்சிகளின் ஆட்சிக் காலத்தில் சர்வதேச அள-வில் இந்திய நாட்டைப் பட்டா போட்டு விற்றது போன்ற நிலையை நாட்டின் உச்ச நீதிமன்றமே குறிப்பிட்டுக் கண்டிக்கும் அளவுக்கு மோசமானது என்பதை நினைவில் கொள்ளலாம்.

இந்த வகையில் எதிர்வினையாக ஏனைய கட்சிகளும் ஊழலுக்குப் பலியாக இருந்தன என்பதை எந்த ஒரு கட்சியும் மறுக்க முடியாது. மத்தியில் ஆட்சியில் உள்ள காங்கிரஸ் கட்சி ஆட்சியைத் தனது கையில் தக்க வைக்க அதன் ஆதரவுக் கட்சியான தி.மு.க. மாநிலத்தில் ஆட்சியைக் கைப்பற்ற வேண்டும் அல்லது மாநிலத்தில் ஆட்சியில் உள்ள கட்சியின் அ.இ.அ.தி.மு.க.வின் ஆதரவைப் பெற்றால் மட்டுமே 2014ல் இடம் பெறும் பொதுத் தேர்தலில் மீளவும் ஆட்சியைப் பெறமுடியும்.

காங்கிரஸ் கட்சிக்கு தி.மு.க. போன்ற விசுவாசமான நட்பு அ.இ.அ.தி.மு.க.விடம் கிடைக்காது என்பது நன்கு தெரிந்த விடயம். மேலும் செல்வி ஜெயலலிதாவின் ஆற்றலும் போக்கும் முற்றிலும் தனித்துவமானது எவருக்கும் அடங்கிப் போ-கும் தன்மை அற்றது. எனவே அதனை அடி-யோடு சாய்த்தால் மட்டுமே காங்கிரஸ் அடுத்த ஆட்சி பற்றிய கனவை வளர்க்க முடியும். ஆனால் வடமாநிலங்களில் அடியற்ற மரம்போல் ஆகிவிட்ட காங்கிரஸுக்கு ஆந்திரா, கன்னடம், தமிழகம் கைக்கு எட்டிய தூரத்தில் இருப்பதை எப்படியும் பறித்து விட வேண்டும் என்ற நிலை.

கேரளாவில் காங்கிரஸ் கூட்டணிச் சட்டசபை உறுப்பினரும் உணவுத் துறை அமைச்சருமான பிறவம் தொகுதி உறுப்பினர் டி.எம். ஜேக்கப்பின் மரணம் ஆட்சி யார் கைக்கு மாறும் என்ற கேள்வியை எழுப்பி நிற்கிறது.

ஆட்சி காங்கிரஸுக்கா பி.ஜே.பிக்கா என்பதனை மார்ச் 18ந் தேதி நடைபெறும் உப தேர்தல் தீர்மானிக்கும். முல்லைப் பெரியாறு அணை விவ-காரம் இத்தனை சூடு ஏற்பட இதுதான் காரணம்.

மக்கள் மனதில் அணை உடையும் என்ற பீ-தியை உருவாக்கி தேர்தலை வென்றுவிட இரு கட்சிகளும் தீவிரமாக உள்ளன. அணை (டாம் 999) என்ற திகிலூட்டும் படம் முல்லைப் பெரியாறு அணை உடைவதையும் அதன் மடை உடைந்த நீர் மக்களை சுனாமிபோல் அள்ளிச் செல்வதையும் கணிணி கிராபிக்ஸ் தத்ரூபமாகக் காட்டிக் கலவரம் ஊட்டுகிறது. அப்படியான ஆபத்து எழச் சாத்தியமே கிடையாது என்கிறது ஆய்வுகளின் முடிவு.

ஆயினும் தேர்தல் காய்ச்சல் கண்டுள்ள கட்சிகள் எல்லாமே கம்மியூனிஸ்டுகள் உட்பட அங்கே ஆதாயம் தேட முனைகின்றனர். இங்கே நில நடுக்கத்தை மையமாக வைத்து ஒரு மக்கள் போராட்டத்தை நடத்தும் கட்சிகள் கூடங்குளத்தில் நில நடுக்கம் பற்றிய பேச்சே எடுக்காது மக்கள் மனதை சலவை செய்யும் வித்தையை கையாளுகின்றன.




மாநில அரசும் அதன் காவல் துறையும் மிகச் சிறப்பாகச் செயலாற்றி வருகின்ற போதிலும் தமிழகத்தை இப்பொழுது அபரீதமான அளவில் கொலை, கொள்ளை, வழிப்பறி, ஆட் கடத்தல், கப்பம் கோருதல் போன்ற குற்றச் செயல்கள் இடம் பெறுகின்றன. இவற்றைக் காணும் பொழுது மத்திய அரசு ஏதோ ஒரு வகையில் சட்டம் ஒழுங்கைக் காரணம் காட்டி ஆட்சியைக் கலைக்கும் நோக்கம் கொண்டு உள்ளதோ எனவும் கருத வைக்கிறது.

அண்மையில் மத்திய அரசு ஒரு புதிய சட்டத்தின் மூலம் மாநிலங்களில் தனது அதிகாரத்தைப் பெற்றுவிட முயன்றது. மத்திய பயங்கரவாதத் தடை மையம் என்ற அமைப்பின் மூலம் மாநிலங்களில் எவரையும் கைது செய்யவும் விசாரணை நடத்தவும் வழி வகைகளை அந்தச் சட்டம் வழங்க எத்தனித்தது. அதனை ஜெயலலிதா முதன் முதலாக எதிர்த்து அத்தகைய அமைப்பின் மூலம் இந்திய அரசமைப்பு மாநில அரசுகளுக்கு வழங்கிய அதிகாரங்களில் மத்திய அரசு அத்துமீறித் தலையிடும் நிலை உருவாகும் என ஆட்சேபித்தார். அவரைத் தொடர்ந்து மேலும் 7 மாநில முதலமைச்சர்கள் எழுப்பிய எதிர்ப்பில் மத்திய அரசு அதனைக் கைவிட்டது.

இந்தியாவில் நாம் காண்பது நிறுவன மயப் படுத்தப்பட்ட ஊழல் அரசியல் கட்சிகளின் குடும்ப வாரிசு ஆட்சிமுறை. இதனை நேருவின் குடும்பம் முன்னுதாரணமாக உள்ளது. ஊழலும் நேருவின் மகள் இந்திரா காந்தியின் காலத்தில் இருந்தே இன்று மூன்றாவது தலைமுறையைக் கண்டுள்ளது. ஊழல் ஒவ்வொன்றும் கோடிகள், இலட்சம் கோடிகள் தொகைகளில் இடம்பெறுகையில் கறுப்புப் பணம் கோடானு கோடிகள் என வெளிநாட்டுப் பணமாக வெளிநாடுகளில் இந்திய அரசியல் வாதிகளின் தொழில் அதிபர்களின் பெயர்களில் பதுக்கி வைக்கப்பட்டுள்ளன.

மார்ச் 18ல் வெளியாகும் வட மாநில அரசுகளின் சட்டசபைத் தேர்தல் மற்றும் கேரள தமிழக இடைத் தேர்தல் முடிவுகள் இந்திய அரசியலில் பல முக்கிய மாற்றங்களுக்கு அத்திவாரமாக அமையலாம் என எதிர் பார்க்கப்படுகிறது. இந்திய விவசாயிகளின் உழைப்பும் ஊதியமும் ஒட்டு மொத்தமாக அரசின் ஆதரவுடன் உறிஞ்சி எடுக்கப் படுகின்றன. பட்ட விவசாயக்கடன் மீள முடியாது விவசாயி தற்கொலை செய்ய முழு விவசாயக் குடும்பமே பட்டினியால் சாகிறது. ஆனால் அரசியல் வாதிகளுக்கு கட்சி அரசியலே அல்லாது இவை எதிலும் அக்கறை கிடையாது.






# சாத்தான்களின் வதிவிடம்...

த. பாவலன்

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஸவிற்கு நெடுந்தீவினில் கூடிய அக்கறையிருப்பதாக பலரும் அடிக்கடி சொல்லிக்கொள்கின்றனர். நடந்து முடிந்த ஜனாதிபதி தேர்தலில் தனது சொந்த தொகுதியும் அள்ளி அள்ளி கொடுத்த இடமுமான அம்பாந்தோட்டையை விட நெடுந்தீவினில் கூடிய விகிதாசாரத்தினில் வாக்குகள் வீழ்ந்தமையை அவர் அடிக்கடி நினைவு கூர்ந்து கொள்வதாக கூறுகின்றனர். அப்படியெல்லாம் பேச்சளவினில் கொண்டாடப்படும் நெடுந்தீவினில் பாடசாலை மாணவி யேசுதாஸன் வர்சனாவின் கோரக் கொலை வடக்கில் தொடரும் ஆட்கொலைகளின் மற்றொரு முகத்தை துல்லியமாக காண்பித்திருக்கின்றது. தெற்கில் நடப்பதைப் போன்று வடக்கில் நடப்பதும் சாதாரண குற்றச் செயல்களேயென சப்பைக்கட்டுக்கட்டுவோர் பதிலளிக்க சங்கடமான விடயமேயிது. வெவ்வேறான குற்றங்களின் கீழ் நீதிமன்றினால் பிணையில் விடுவிக்கப்பட்டு சுதந்திரமாக நடமாறும் குற்றவாளியொருவரே மாணவியின் படுகொலைச் சம்பவத்திலும் சந்தேக நபராக கைது செய்யப்பட்டிருக்கின்றார்.

2000ம் ஆண்டின் பிற்பகுதிகளினில் நடந்த ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமலராஜனின் படுகொலை அதிர்ச்சியுடன் எல்லோரையும் இலங்கையை ஒரு முறை திரும்பிப் பார்க்க வைத்திருந்தது. தமிழ் ஊடகவியலாளர்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட பாரிய வன்முறையின் முதல் அடையாளமாக அதுவே அவதானிக்கப்பட்டிருந்தது. அப்போதும் அரசினில் அங்கத்துவம் பெற்றிருந்த தமிழ் ஆயுதக்குழுவான ஈ.பி.டி.பி மீது இக்கொலைக்கான குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டிருந்தது. நிமலராஜன் படுகொலை தொடர்பில் பொலிஸாரால் ஒப்புக்கு நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் 3ம் எதிரியாக பெயர் குறிப்பிடப்பட்டிருந்த நபரே கந்தசாமி ஜெகதீஸ்வரன். குறித்த கட்சியின் உறுப்பினனாகவும், அப்போது தீவுப்பகுதியின் இராணுவப் பிரிவிற்குப் பொறுப்பாக இருந்த நெப்போலியனிற்கு வலது கரமாக இருந்தவர் என கூறப்படுகின்றது.

நிமலராஜன் படுகொலையில் முதலாம் சந்தேக நபராக குற்றம்சாட்டப்பட்டிருந்த நெப்போலியன் இதே நெடுந்தீவு ஊடாக பொலிஸார் தேடுவதாக கூறி இந்தியாவிற்குத் தப்பித்திருந்தான். தற்போது இலண்டனில் ராஜபோக வாழ்க்கை வாழும் நெப்போலியனுக்கு இப்போதும் இலங்கையிலிருந்தே செலவுக்குப் பணம் போவதாக கூறப்படுகின்றது.

இந்நிலையில் நெப்போலியனின் வெளியேற்றத்தின் பின்னர் அநாதரவாகிப்போன ஜெகன் எனப்படும் ஜெகதீஸ்வரன் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான ராமமூர்த்தி மற்றும் ராமேஸ்வரன் அணியில் இணைந்து கொண்டிருந்தான். அதே வேளையிலேயே அவன் வசம் வைத்திருந்தாக கூறப்படும் துவிச்சக்கர வண்டியொன்று தொடர்பில் சந்தேசத்தின் பெயரில் ஜெகன் கைது செய்யப்பட்டிருந்தான். கொலையாளிகள் திட்டமிட்டே கட்சி மாறியிருந்த ஜெகனை சிக்க வைக்க துவிச்சக்கர வண்டியை போட்டுவிட்டு சென்றதாக பின்னர் சந்தேகங்கள் இருந்தன.

கைவிடப்பட்டிருந்த நிலையில் அநாதரவாக நின்றிருந்த ஜெகன் ஏதோவொரு வகையில் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தான். நிமல்ராஜன் படுகொலை வழக்கு விசாரணை சட்டமா

அதிபரிடமிருந்த ஆலோசனைகள் எதிர்பார்ப்பதாக கூறி கிடப்பில் போடப்பட்டுவிட்டது. நன்கு திட்டமிடப்பட்டு பத்திரிகைகளில் செய்திகள் வரச்செய்யப்பட்டதன் பின்னர் தேடுதல் நடத்தி துப்பாக்கிகள் கைப்பற்றப்பட்ட நாடகங்கள் பலவும் அங்கே அரங்கேற்றப்பட்டே இருந்தன. வழக்கு கிடப்பினில் போடப்பட்டு விட்டதால் ஜெகன் மீண்டும் தேடப்பட்டிருக்கவில்லை. அத்துடன் உண்மைகளை முடக்கிவிட ஜெகனை தமது கைக்குள் வைத்திருப்பதே பொருத்தமானதென ஈ.பி.டி.பி தலைமையும் கருதியது. ஆனால் ஒரு ஊடகவியலாளனைக் கொலை செய்தபோதும் கண்டுகொள்ளாத இலங்கை அரசின் சட்டங்கள் கட்டுப்படுத்த முடியாத ஒருவனாக ஜெகனை சமூகத்திற்கு தந்துள்ளது. வெளியுலகத்திற்குத் தெரியாத வகையில், நெடுந்தீவில் அவன் அரங்கேற்றிய பல குற்றச்செயல்கள் இப்போதே அம்பலமாகத்தொடங்கியுள்ளது, மாணவி வர்சனாவின் மரணமே மீண்டும் ஒருமுறை அவனின் கோர முகத்தை மீண்டுமொரு முறை வெளிப்படுத்தியுள்ளது.

மிகவும் வறுமையின் கீழ் வாழ்ந்து கொண்டிருக்கும் ஆயிரக்கணக்கான நெடுந்தீவுக் குடும்பங்களில் ஒன்றே வர்சனாவின் குடும்பமும். தந்தையான யேசுதாஸன் ஒரு வாயில்லப் பூச்சி என்கின்றனர் ஊரவர்கள். பிள்ளைகளும் அதே மனப்பாங்குடன் வளர்க்கப்பட்டுள்ளனர். வீட்டிற்கு அருகாகவுள்ள நெடுந்தீவு மகாவித்தியாலகத்தினில் வர்சனா தனது தங்கையுடன் கல்விகற்று வந்திருந்தாள். அந்த சனிக்கிழமை நெடுந்தீவு மக்களிடம் மீண்டும் மீண்டும் நினைவில் வைக்க விரும்பாத கறுப்பு நாள். கச்சைதீவு புனித அந்தோனியார் வருடாந்த உற்சவத்திற்காக நெடுந்தீவு தயாராகிக் கொண்டிருந்தது.ஆட்களற்ற அத்தீவுக்கு உற்சவ தினத்திற்கு வரும் யாத்திரிகர்களுக்கான அடிப்படை வசதிகளை செய்து வழங்கும் பணி நெடுந்தீவு பங்கு தந்தைக்கேயுள்ளது. நெடுந்தீவுக்கு அருகாமையில் அமைந்துள்ளது என்பதற்கப்பால், தொழிலுக்குச் செல்லும் நெடுந்தீவு மீனவர்கள் வழிபட கச்சைதீவுப் பக்கம் அடிக்கடி செல்வதும் கூட காரணமாக இருக்கலாம்.

அன்றைய நாளிலும் தனது தாய்க்கு உதவியாக வர்சனா தனது பாடசாலை நண்பி சகிதம் வீட்டிற்கு சமையலுக்கான மீனை வாங்க சந்தைக்கு பயணமாகியிருக்கின்றாள். எனினும் நண்பியின் உறவினர்கள் கச்சைதீவு செல்ல தயாராகிக் கொண்டிருந்ததால் அவர்களுடன் தானும் செல்ல விரும்பி இடை நடுவில் சந்தைக்குச் செல்லும் திட்டத்தை நண்பி கைவிட்டிருந்தாள். ஆனாலும் வீதியால் துவிச்சக்கர வண்டியில் வந்து கொண்டிருந்த ஜெகன் சந்தைக்குச் செல்வதாக கூறி வர்சனாவை அழைத்துச் செல்வதை காண அவள் தவறவில்லை.

ஆட்களற்ற காணியொன்றில் வர்சனாவின் சடலத்தை பின்னர் ஊரவர்கள் கண்டு பிடித்திருந்தனர். அரை நிர்வாணமாக கிடந்த சடலம், கொலையின் முன்னர் அவள் பாலியல் வல்லுறவிற்குள்ளாக்கப்பட்டிருந்ததை அப்பட்டமாக வெளிப்படுத்தி நின்றன.. அருகாக காணப்பட்ட வெற்று மதுபானப்போத்தல் கொலையாளி எந்த சூழ்நிலையில் செயற்பட்டிருந்தான் என்பதை கூறி நின்றது. கொலைக்குப் பயன்படுத்தப்பட்ட கூரிய கல்லொன்றும் சாட்சியமாக அங்கிருந்தது.

மாலை வரை வர்சனா வீடு திரும்பியிராத நிலையினில், மகளும் கச்சைதீவு சென்றிருக்கலாம் என பெற்றோர் நினைத்திருந்தனர். ஏனெனில் கூடச்சென்ற நண்பி கச்சைதீவினில் நிற்பதை நண்பர் ஒருவர் உறுதிப்படுத்தியிருந்தார். எனினும் அவளுடன் தொலைபேசியில் உரையாடியபோது வர்சனாவை ஜெகன் துவிச்சக்கர வண்டியில் ஏற்றிச் சென்றிருந்த விடயம் வெளியே வந்திருந்தது. இதற்கிடையே கல்லால் குத்தி கொலை செய்யப்பட்டிருந்த நிலையில் வர்சனாவின் சடலம் கண்டுபிடிக்கப்பட்டிருந்தது.


கொலையாளி யார் என்பதை பின்னர் எவருக்கும் சொல்லித் தெரியவேண்டியிருக்கவில்லை. கொலைச்சந்தேக நபரான ஜெகனை வீட்டிலேயே வைத்து மக்கள் மடக்கிப் பிடித்திருந்தனர். மக்களிடமிருந்த கொந்தளிப்பு மனோபாவம் அவனை அடித்துக் கொல்லவே தூண்டி இருந்தது. கடற்படையினரோ அல்லது பொலிஸாரோ தலையிட்டு மீட்டிருக்காவிடில் அவனை சடலமாகவே மீட்டிருக்கவேண்டும் என்கின்றனர் ஊரவர்கள்.

அவனைப் பற்றி அவன் செய்த அடாவடிகள் பற்றி மக்கள் இப்போதுதான் வாய் திறந்திருக்கின்றார்கள். வீடொன்றினில் புகுந்து கைத்துப்பாக்கியை காட்டி குடும்பப் பெண்ணொருத்தியை பாலியல் வல்லுறவுக்குட்படுத்தியிருந்தானாம். நடு மண்டபத்தினில் கணவருடன் படுத்திருந்த மற்றொரு பெண்ணின் மார்பை இரவில் வேலி பாய்ந்து வந்து கடித்துக் குதறிவிட்டு தப்பிச் சென்றிருக்கின்றானாம். ஓட்டு மொத்தமாக நெடுந்தீவினில் அரங்கேற்றப்படும் அடாவடிகளது அடையாளங்களள் ஒன்றாகவே இச்சம்பவம் பார்க்கப்படுகின்றது.

பட்டியல்கள் நிண்டு கொண்டேயிருக்கின்றது. ஊடகவியலாளன் மயில்வாகனம் நிமலராஜனின் படு-கொலை செய்யச் சென்றவர்களில் இவனும் ஒருவனே என்பதை சலனம் எதுவுமின்றி நெடுந்தீவு மக்கள் சாதாரணமாகவே சொல்கின்றனர். கச்சதீவு சென்ற ஊடகவியலாளர்கள் சிலர் நெடுந்தீவு சென்றிருந்த நாளொன்றினிலேயே மக்கள் துப்பாக்கி முனையை உதறித்தள்ளி கிளர்ந்தெழுந்தமையும் நடந்திருந்தது. இதனாலேயே இம்முறை நெடுந்தீவில் நடந்தவை மூடி மறைக்கப்படாமல் உலகிற்கு அப்பட்டமாக வெளிக்கொணரப்பட்டிருந்தன. கடற்படையினரோ துணை ஆயுதக்குழுக்களோ துப்பாக்கி முனைகளால் தொடர்ந்தும் மக்களை மிரட்டி அடிபணிய வைக்க முடியாதென்பதை மீண்டும் ஒருமுறை இச்சம்பவம் வெளிப்படுத்தி நிற்கின்றது.

1990ம் ஆண்டினில் அரசு- புலிகளுக்கிடையிலான அப்போதைய யுத்தம் குடாநாட்டின் ஏனைய பகுதிகள் ஊடான அனைத்துத்தொடர்புகளையும் நெடுந்தீவு இழக்க வைத்திருந்தது. அங்கு சிக்கிக்கொண்டிருந்த மக்களில் கணிசமானோர் இந்தியாவிற்குச் சென்றிருந்தனர். எஞ்சியிருந்தவர்களுக்கான அனைத்துமே இந்தியாவிலிருந்தே வரவேண்டியிருந்தது. இத்தகைய சூழலினில் நெடுந்தீவில் கரையிறங்கிய கடற்படையினருடன் வந்திறங்கிய ஈ.பி.டி.பியினர் அத்தகைய சூழலில் மக்கள் மனதை வெல்ல வாய்ப்பை ஏற்படுத்தியிருந்தது. அத்துடன் பலரும் உறுப்பினர்களாக இணையவும் அத்தகைய சூழலே வழிகோலியிருந்தது. குறிப்பாக நடந்து முடிந்த ஜனாதிபதித்தேர்தலின்போது விகிதாசார ரீதியில் மகிந்தாவுக்கு கூடிய வாக்குகள் நெடுந்தீவிலேயே வீழ்ந்தும் இருந்தது.. அந்த நன்றிக்கடனுக்காக நெடுந்தீவினை சிங்கப்பூராக்க போவதாக அனைவரும் அவர் கூறிவந்தவை பழைய கதைகளே.

ஆனால் சாதாரண போக்குவரத்திற்காக கூட மணித்தியாலக்கணக்கில் காத்திருக்கும் வாழ்வே அவர்களுக்கு எஞ்சியுள்ளது. சொல்லிக் கொள்ளத்தக்கதாக அபிவிருத்தியின் சாயல் கூட எட்டிப்பார்த்திராத ஒரு சாதாரண கிராமமாகவே நெடுந்தீவு இருக்கின்றது. அங்குள்ள மக்கள் தமது மேய்ப்பர்களினில் முற்றாக நம்பிக்கை இழந்துள்ளனர். இப்போதெல்லாம் மேய்ப்பர்களது உறுதி மொழிகளை நம்பவும் அவர்கள் தயாராக இல்லை. என்று தமது சொந்த கால்களில் அம் மக்கள் நிற்கப் போகிறார்களோ அப்போதே நெடுந்தீவை அடையாளப்படுத்தும் விமர்சனங்களும் நின்றுபோகும். அதற்கான பாதையொன்று இப்போது திறந்து விடப்பட்டுள்ளது. தீர்மானிக்க வேண்டியவர்களாக நெடுந்தீவு மக்களே இப்போதும் உள்ளனர்.



அகரம் சஞ்சிகை ஆதரவில்...

# கலை மாருதம் 2012

நிகழ்வுகள்:

அகவணக்கம்

நடனம்

நாடகம்

நாட்டிய நாடகம்

தமிழிசை

இன்னிசை

சிறப்பு விருந்தினராக உலகத் தமிழர் பேரவைத் தலைவர் அருட் தந்தை எம்மானுவேல் மற்றும் மதிப்புக்குரிய மதகுரு Koolen அவர்கள் கலந்துகொள்கின்றனர்.

**இடம்: Bürgersaal**
**Rathaus Zehlendorf**
**Kirchstr. 1-3**
**14163 Berlin**

**நேரம்: 17:00 Uhr**

**காலம்: 10.04.2012**

**இவ் நிகழ்ச்சி ஊடாக தாயக உறவுகளுக்கு கரம் கொடுப்போம்.**

தமிழ் பெண்கள் கூட்டமைப்பு - யேர்மனி

## ஊருக்கு மட்டும்...!

சிந்தனையில் மட்டும்
சிலருக்கு "சீர்திருத்தம்"
நடத்தையில் ஒருபோதும்
இல்லையே மாற்றம்..!

## தமிழ்ப் பெண் ஆனாள்!

யாதும் ஊரே யாவரும் கேளிர்
என்றவன் தமிழன் இவளோ
எங்கோ பிறந்தாள் எம்மோடு
மேரி கொல்வின் என வாழ்ந்து
தமிழ் பெண் என ஆனாள்
ஆறுமோ அவள் பிரிவு
மாறுமோ அவள் நினைவு!

-பாக்கியம்-

## உரிமை வேண்டும்!

தமக்குத் தாமே
தடைகளை விதித்தபடி
உரத்த குரலில்
ஒலிக்கிறது பெண்மை..!

## எனக்கு மட்டும்...!

எல்லோருக்கும் தாஜ்மஹால்
காதலின் சின்னமாய்..,
எனக்கு மட்டும் அது
வேதனையின் வண்ணமாய்...!

## அன்றும் இன்றும்!

மகாபாரதப் போர்க்களத்தில்
மாயவன் கொலைகாரன்
ஈழப்போர்க்களத்தில்
இந்தியா கொலைகாரன்


## *நீதி...!*

எல்லோருக்கும் தேவைப்படுகிறது
அவரவர் விடயத்தில் மட்டும்..!

# விழியோரம் வலி!...

தொகுப்பு: தமிழ்விழி

# அகரக் கவிக்களம்...



### நினைத்தாலே பிடிக்குது பைத்தியம்!

தொட்டால் சூடும் இல்லை
சுரண்டினால் சுரணையும் இல்லை
அடித்தால் அழுவதும் இல்லை
உதைப்பவன் காலடியில் விழும்
தமிழனின் நிலை கண்டு மனதில்
நினைத்தாலே பிடிக்குது பைத்தியம்!

-பாக்கியம்-

### பெண்ணே!

சினிமாவில் பெண் போதைப் பொருளாய்
சின்னத் திரைத் தொடரில் பிறரைச்
சீண்டித் துன்புறுத்தும் வில்லியாய்
நச்சு நிறை நாகமாய் பார்த்து மகிழும்
பெண்ணே உன் பெருமை என்னவோ ?
-கருமி-

### என்கவுண்டர்

போலிக் குற்றச் சாட்டில்
போட்டுத் தள்ளுவது
போலிஸ் என்கவுண்டர் !
உண்மைக் குற்றவாளிகளை
மந்திரிகள் ஆக்கி ஊழல்
செய்வது என்ன கவுண்டரில்?
-கருமி-

அன்பிற்கினிய அகரம் வாசகர்களே...!
உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகளை, 3 - 6 வரிகளுக்கு
மேற்படாமல் எழுதி அனுப்புங்கள்..!
சிறந்தவையாகத் தெரிவுசெய்யப்படும்
கவிதைகள் அகரத்தின்
கவிதைத்தொடரில் பிரசுரிக்கப்படும்.

tMedia Network
PO BOX 4153, 59037 Hamm
Germany

eMail: poems@akaram.com

# Importas
Cash & Carry

Subash Purity of Taste
Kings
Niru BRAND
SURYAA
Maliban
Inspired by goodness...
ELAKKIA
PG tips
TRS ASIAS FINEST FOODS
PATAKS Original
Rubicon
RENUTÉ

எமது வாடிக்கையாளர்களுக்கு
இனிய சித்திரைப் புத்தாண்டு வாழ்த்துக்கள்

SOLO IMPORTERS & DISTRIBUTOR FOR
**SUBASH, KINGS, NIRU, SURYAA, MALIBAN, ELAKKIA AND RUBICON**

**OVER 20 YEARS LEADER IN SWISS ETHNIC MARKET**

**BIGGEST ASIAN SHOP IN ZÜRICH**

***Importas Cash & Carry***
***(80m away From Letzi Park)***
***Baslerstrasse 102***
***8048 Zürich***

***Tel: +41 43 343 03 55***
***Fax:+41 43 343 03 56***
***Email: info@importas.ch***
***Web: www.importas.ch***



# என்ன கொடுமை சரவணா!...

கல்வெளி வேலுப்பிள்ளை

வணக்கம் பாருங்கோ,...

எப்படிப் போகுது வாழ்க்கை..? வெளிநாட்டில எல்லாருக்கும் காலில இறக்கை முளைச்ச வாழ்க்கை எண்டு என்ற சிநேகிதர் ஒருத்தர் அடிக்கடி சொல்லுறவர். ஓட்டம், ஓட்டம், ஒரே ஓட்டம் தான் பாருங்கோ. எல்லாம் காசைத்தேடுற ஓட்டம் தான். வெளிநாடுகளுக்கு வந்து, இந்த இயந்திர வாழ்க்கைக்குள்ள மாட்டீட்டமெண்டால், பிறகு தப்ப வழி கிடையாது. தப்புறதெண்டால், ஒண்டில் இந்த ஊரை விட்டு ஓடவேண்டும், இல்லாட்டில் உலகத்தை விட்டே ஓடவேணும். ஆனால் அதுக்கும் எங்கட ஆக்களுக்கு மனம் வராது கண்டியளோ..! ஏன் எண்டால், காசாசை எவரை விடப்போகுது..? இந்த நாடுகளில உடல் உழைப்பால முன்னுக்கு வாற ஆட்கள் அதிகம். அது உங்களெல்லாருக்கும் தெரியும். ஆனால் ஒரு சில நூதனமான உழைப்புகளால , படுவே-கமாக முன்னுக்கு வாற ஆக்களும் இருக்கினம். அவையளைப்பற்றித்தான் உங்களோட கொஞ்சம் கதைக்கவேணும்.ஏன் எண்டால், அவையின்ர நூ தனமான உழைப்புகளுக்குப் பலியாகிறதும் எங்கட ஆட்கள் தான் பாருங்கோ..!

வெளிநாடுகளுக்கு வந்துசேருற எங்கட ஆட்கள் எல்லாருக்கும், அந்தந்த நாடுக-ளில சொந்தக்காரர், அல்லது நண்பர்கள் இல்லாட்டில், வெளிநாடுகளின்ர நடைமுறை வாழ்க்கையில இணைஞ்சு கொள்ளுறது கொஞ்சம் கடினம்தான் பாருங்கோ. ஏன் எண்டால், பதிவுகள், மொழிபெயர்ப்புகள், வேலை தேடுறது, அதன்பிறகு வதிவிட அனுமதிப் பிரச்சனையள் எண்டு எங்கட சனம் எதிர்கொள்ளுற பிரச்சனையள் கொஞ்சநஞ்சமில்லை. இதுகளைப் பாவிச்சு, "தவிச்ச முயல் அடிக்கிற" ஆக்கள் இங்க ஏராளமாய் இருக்கினம். அவையளுக்குப் பாவபுண்ணியம், எங்கட சனம் எண்ட இரக்கம் எண்டு எந்த எண்ணமும் துளியும் இல்லைப்பாருங்கோ. அதுதான் வேதனைக்குரிய விசயம் கண்டியளோ..!

அண்மையில புதுசா வந்த பெடியன் ஒருத்தன், சொல்லி அழுத சில விசயங்களைக்கேட்டால் உங்களுக்கும் அழுகையும் ஆத்திரமும் வரும் கண்டியளோ. இப்படியெல்லாம் எங்கட சனங்கள் இருக்கினமோ எண்டும் நினைக்கவேண்டிவரும். விசயம் என்னெண்டால், அண்மையில வெளிநாடொன்றுக்கு வந்த பெடியனை எதேச்சையாய்ச் சந்திக்க வேண்டிவந்துது. அப்பத்தான் எனக்கும் ஒருசில விசயங்கள் தெரியவந்துது பாருங்கோ. அந்தப்பெடியன் இங்க வந்து, ஒருமாதிரி தனக்குத் தெரிஞ்ச ஆங்கில மொழியைவைச்சு ஏதோஒருமாதிரி பதிவுகளை எல்லாம் செய்துபோட்டுது. பிறகு வேலை ஒண்டைத் தேடுவம் எண்டு வெளிக்கிட்டிருக்குது. அப்பத்தான் இஞ்ச கனகாலமாய் இருக்கிற ஒரு தமிழரின்ர பழக்கம் கிட்டியிருக்குது. அவரும் பழகின புதுசில அன்பாய் ஆதரவாய்க் கதைச்ச உடன, பெடியன் தெய்வத்தைக் கண்டகணக்கில விழுந்து விழுந்து பழக ஆரம்பிச்சிருக்குது. பிறகு "வேலை எடுத்துத் தரலாம் வாரும்" எண்டு அவர் சொல்ல, பெடியன் அப்படியே அவரின்ர காலில விழாத குறை. சரியெண்டு ஒரு இடத்துக்குக் கூட்டிக்கொண்டு போய், வேலை-யில சேர்த்துவிட்டிருக்கிறார். இந்த நாடுக-ளில வேலை செய்யுறதெண்டால், பதியா-மல் வேலை செய்யேலாது எண்டுறது எங்கட ஆக்கள் எல்லாருக்கும் தெரியும். ஆனால் சில இடங்களில, முழுநேரமாய்ப் பதியாமல், குறைஞ்ச நேரம் வேலை செய்யுற மாதிரிப் பதிஞ்சு போட்டு, முழுநேரமாய் வேலை செய்தால் நல்ல காசு கையில வருமெண்டு அவர் காட்டின ஆசை வார்த்தையில பெடியன் அப்படியே சந்தோசத்தில துள்ளிக்குதிச்சிருக்கு. இதில என்ன கொடுமை எண்டால், பெடியன் வேலை செய்யப்போற இடத்தின்ர முதலா-ளியும் ஒரு தமிழ் ஆள்தான் பாருங்கோ. பெடி-யனை வேலைக்குச் சேர்த்துவிட்ட நம்மட ஆளும், முதலாளியுமாய்ச் சேர்ந்து, பெடியனோட சம்பளத்தைப்பற்றிக் கதைச்சிருக்கினம். உடன நம்மட ஆள் குறுக்க பாய்ஞ்சு "சம்பளத்தை முதலாளி என்னட்டதான் தருவார், பிறகு நான் உன்னட்டத்தருவன்" எண்டு சொல்ல, பெடியனும் நன்றிக்கடன் மறக்கக்கூடாதெண்டு "ஓம்" எண்டு தலையாட்டியிருக்குது. ஆனால் நம்மளின்ர ஆள், "ஓம்" போடப்போறார் எண்டு பெடியனுக்குத் துளி-யும் தெரியாது பாருங்கோ.

சரியெண்டு, முதல் மாதச் சம்பளம் வந்த உடனே பெடியனிட்ட காசைக்குடுத்திருக்கிறார் நம்மளின்ர ஆள். அதில இருநூறு யூரோ குறை-வாய் இருக்கெண்டு தெரிஞ்சும் பெடியன் எதுவும் கேட்கேல்லை. எப்பிடிக்கேட்கிறதெண்ட சங்கடம் தான் பாருங்கோ. ஆனால் கொஞ்ச நாளைக்குப்பிறகு, "உன்ர வேலைக்கான பதி-வுச் செலவெண்டு இருநூறு யூரோ தம்பி" எண்டு நம்மட ஆள் சொல்ல, பெடியனும் நம்பிட்டுது. பிறகு அடுத்துவந்த மாசங்களிலையும், நூறு தொடக்கம் இருநூறு யூரோ வரைக்கும் குறைஞ்சு வருதெண்டுட்டு, பெடியன் வாய் விட்டுக் கேட்டிருக்குது. அதுக்கு நம்மளின்ர ஆள் சொன்ன பதில் என்ன தெரியுமே..? தம்பி, நான் என்ர பெயரில வேலை எடுத்துத் தந்தபடியால, நான் அரசாங்கத்திற்கு மாசம்மாசம் காசு கட்டவேணுமப்பு. அதுதான் உவ்வளவு கழிவப்பு எண்டு ஒரு சுத்துச்சுத்தியிருக்கிறார். பெடியனுக்கு அப்பவும் பெரிசாச் சந்தேகம் வரேல்லை. ஒரு வருசம் கடந்து, ஓரளவுக்கு விசயங்கள் பிடிபடத்தொடங்கின பிறகுதான், பெடியனுக்குச் சந்தேகம் வலுத்திருக்குது.

குறைவாப் பதிஞ்சால், காசு ஒண்டும் அரசாங்கம் வெட்டாது எண்டு பெடியனின்ர சிநேகிதன் ஒருத்தனும் சொல்லியிருக்கிறான். பெடியனும் தன்ர சந்தேகத்தை நேரில நம்மட ஆளிட்டக் கேட்டிருக்குது. உடன நம்மளின்ர ஆள் எகி-றிப் பாஞ்ச பாய்ச்சலில, ஒருக்கா நிலம் ஆடிச்சாம் கண்டியளோ..!, "வேலை வேலை எண்டு அலையேக்க, நான் அலைஞ்சு திரிஞ்சு வேலை எடுத்துத் தந்ததுக்கு எனக்கென்ன தந்தனீர்..?, உங்களுக்கு வேலை எடுத்துத் தந்து போட்டு நாங்கள் என்ன கொட்டாவி விடுறதே"...? எண்டு அவர் போட்ட போடுகையில பொடியன் கொஞ்சம் அதிர்ந்துதான் போச்சுது. உதெண்டாலும் பரவாயில்லை, அதுக்குப் பிறகும் நம்மட ஆள் போட்டாராம் ஒரு போடு. என்ன தெரியுமே..? "இவ்வளவு நாளும் நீ கொஞ்சமாய்ப் பதிஞ்சு போட்டு, கூட வேலை செய்ததைக் காவல்துறையிட்டச் சொன்னன் எண்டால் நீ உள்ளுக்க போகவேண்டி வரும், பரவாயில்லையோ"...? எண்டு அவர் கேட்ட கேள்வியில, பெடியனுக்கு அஞ்சும் கெட்டு அறிவும் கெட்டுப் போச்சாமுங்கோ.

எவ்வளவு கண்றாவித்தனம் எண்டு பாருங்கோவன்..! உதெல்லாம் ஒரு பிழைப்பே..? ஊரில உயிர்வாளேலாதெண்டு இஞ்ச வாற எங்கட உறவுகளை, நாங்களே இப்படி வஞ்சிக்குறம் எண்டால், சிங்களவன் செய்யுறதில என்னதப்பு இருக்குச்சொல்லுங்கோ பாப்பம்..? உதுக்குப் பெயர் உழைப்பில்லை, உதைத்தான் "தட்டிச்சுத்துறது" எண்டு சொல்லுறது. உப்பிடி வாற காசு ஒரு நாளும் நிலையாது பாருங்கோ. சத்தியமாய்ச் சொல்லுறன், உப்பிடிப்பட்டவனுகள் மனுசரே இல்லைப் பாருங்கோ., உயிரோட திரியுற பிணம் கண்டியளோ..! புதுசா வாற எங்கட சனம், இனியாகிலும் கொஞ்சம் கவனமாயிருக்கவேணும் கண்டியளோ..!

உதுகளை விடவும் கனக்க நடக்குதாமுங்கோ..! வங்கியில கடன் எடுத்துத் தாறம் எண்டு ஒரு கூட்டம் உதே தொழிலாய் அலையுதாமுங்கோ. ஆசையில கடனை எடுத்துப்போட்டு, கட்டேலாமல் மூச்சிரைக்க ஓடித்திரியுற ஆக்கள் எங்களில கனபேர். கடன் எடுத்துக்குடுத்தவனுக்கு "கொமி-சன்" எண்ட பெயரில நல்ல வருமானம் வர, கடன்எடுத்தவன் பாடு அந்தோ கதியாமுங்கோ..! உதுகளுக்கும் மேலால, மதம் மாத்துறம் எண்டொரு கூட்டம் பண்ணுற அட்டகாசம் தாங்க முடியேல்லை எண்டும் அந்தப் பெடியன் சொல்லி அழுத்திச்சு. தயவுசெய்து, நொந்துபோய் வாற எங்கட சனத்தை இஞ்சைஎண்டாலும் கொஞ்சம் நிம்மதியா இருக்க விடுங்கோவனப்பா..! மொத்தத்தில,எங்க போனாலும் தமிழனுக்கு நிம்மதியில்லை எண்டுறது நல்லாப் புரிஞ்சு போச்சுப் பாருங்கோ...!

திருட்டுப் பயலே திருட்டுப்பயலே
சேதி கேளடா
ஒவ்வொரு மனிதனும் ஒவ்வொரு வகையில்
திருடன் தானடா...!

அப்ப வரட்டே போட்டு..!


"கதிரவன் செய்தியில் காணுங்கள் உலகை"
-நிகழ்காலத்தின் கண்ணாடி-

www.kathiravantube.com
www.kathiravangames.com
www.kathiravanphotos.com

கதிரவன்
www.kathiravan.net

www.kathiravantube.com
www.kathiravangames.com
www.kathiravanphotos.com

செய்தித்துறையில் ஊடகங்களுடன் ஊடகமாக நின்று உலகெங்கும் செய்தி ஒளிவீசும் உங்கள் கதிரவனுடன் இணைந்து உலக நடப்பை அறிந்துகொள்ளுங்கள்.

www.kathiravan.net



எஸ். எஸ். ஜுவலரி
NS Jewellery & Textiles
உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும்
நவீன உயர்தர டிசைன்களில்
நகைகளும், திருமண ஆபரணங்கள்,
ஓடர்நகைகள், திருத்த வேலைகள்
யாவும் செய்து கொடுக்கப்படும்.
தாலிக்குப் பொன்னுருக்குதல், காது,
மூக்குக்குத்துதல் போன்ற நல்ல
காரியங்கள் செய்து கொடுக்கப்படும்.
BEST Collections!
தாலி மற்றும் பொன்னுருக்குதல் இவையாவும் இங்கு செய்து தரப்படும்.
ஒவ்வொரு வருடமும் தை
மாதம் எமது ஸ்தாபனத்தால்
தங்கநகை சேமிப்புத்திட்டம்
ஆரம்பிக்கப்படுகின்றது.
மாதம் 100CHF என 12 மாதம்
1200CHF. இணைய விரும்புவோர்
உங்களது பெயர்களை முன்கூட்டியே
பதிவுசெய்யலாம்.
எமது
வாடிக்கையாளர்களுக்கு
இனிய சித்திரைப்
புத்தாண்டு
வாழ்த்துக்கள்
Neugasse 58, 8005 Zürich, Switzerland
Tel: 044 440 60 50
Fax: 044 440 60 52
info@nsjewellery.com



பாரிஸ் லாசப்பல் மாநகரில்
ஆடைத்தெரிவுகளின் அழகு மாடம்
தங்கம் ரெக்ஸ்
4, rue perdonnet
75010 Paris
France
மலிவான விலையில் மனம் மகிழ்ந்திடும்
தரமான தெரிவுகள்
அனைத்தும் தங்கத்தின் பெறுமதி!
எமது வாடிக்கையாளர்களுக்கு இனிய சித்திரைப் புத்தாண்டு வாழ்த்துக்கள்
Tel: 01 40 36 00 35
Port: 06 23 54 65 14

# ஏன் வேண்டும் தனித் தமிழ் ஈழம்?

பாகம் 2

அன்புச்செல்வன்




உலகின் முன்னோடி இனங்களுள் ஒன்றாக, நாகரீகத்தில் சிறந்த, பழமைமிக்க சிறந்த அழகும் வளமும் கொண்ட தமிழ் மொழி பேசும் இனமாகத் தமிழ் இனம் உள்ளது. அத்தகைய தமிழ் இனத்தின் தோற்று நிலமாக இலங்கை உள்ளது. இன்று உலகில் வாழும் தமிழ் மக்கள் அனைவருக்கும் தாயகமாக இருந்த லெமூரியாக் கண்டத்தின் உரிமை கொண்டவர்களாக ஈழத் தமிழ் இனம் உள்ளது.

ஈழத் தமிழினத்தின் தொன்மம் அழிக்கப்படுமானால் உலகில் தமிழ் இனத்தின் வரலாறு வேரோடு அழிந்து விடும். தமிழினத்தின் தொன்மம் பற்றி தமிழரின் முழுமையான வரலாறு என்ற நூலின் முகவுரையில் அதன் ஆசிரியர் நா.ரா. பண்டரிநாதன் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

“தமிழர்களின் வரலாறு நெடியது. இலட்சம் ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலத்தைக் கொண்டது. எனினும், தமிழரின் தொல் பழங்கால வாழ்க்கை பற்றிய விவரங்கள் தெளிவற்றுக் காணப்படுகின்றன.உலகின் மூத்த குடியினரான தமிழர்கள், ஏறக்குறைய 45,000 ஆண்டுகளுக்கு முன் நீண்டிருக்கும் கால கட்டத்தில் பல்வேறு கற் (கல்லால் ஆன) கருவிகளைப் பயன்படுத்திச் சோதனைமிக்க வாழ்வை நடத்தி நாகரீகக் காலத்தை எட்டிப் பிடித்தனர். இந்த நாகரீகக் காலம் தொடங்கிய ஆண்டு கி.மு.5000 என்று மதிப்பிடப் பட்டுள்ளது.

இந்த ஆண்டுக்குப் பின்னர்தான் தமிழர்களின் அரசியல் வரலாறும் இலக்கிய வரலாறும் தொடங்குகின்றன. இவ்விரு வரலாறுகளை விடத் தமிழர்களின் வரலாறு மிக நீண்டது. குரங்கிலிருந்து மனிதன் தோன்றிய காலத்திலிருந்தே தமிழர்களின் சமுதாய வரலாறும் தொடங்கிவிட்டது என்று குறிப்பிட்டால் அது மிகைக் கூற்றன்று”.

இன்று பாகிஸ்தான் பிரதேசத்தில் இருக்கும் சிந்து நதிப் பள்ளத்தாக்கில் மொகஞ்சதாரோ, ஹரப்பா, மேர்ஹார்க், போன்ற இடங்களில் மிகப் பழமையான மனித நாகரீக வரலாற்று எச்சங்கள் இன்றைய நாகரீகத்தையும் மிஞ்சும் வகையில் கிடைத்துள்ளன. திட்டமிட்ட செங்கல் கட்டுமானங்கள், குடியிருப்புகள், நீச்சல் தடாகம், கழிவு நீர் வடிகால் முறை என்பன இங்கு இடம் பெற்ற அகழாய்வுகள் மூலம் வெளியாகிய செய்திகள் மிகப் பழமையானவை. ஆனால் இவை தமிழர் பற்றியவை என்ற உண்மை படிப்படியாக இப்போதுதான் வெளியாகி வருகின்றன.

இங்கு கிடைக்கப் பெற்றவைகளில் மிக முக்கியமானவை சிவலிங்கம், இடபம் போன்ற கைவினைப் பொருட்கள் மற்றும் அங்கு இடம் பெற்ற மரணச் சடங்கு முறை என்பன இன்றும் இந்துக்களின் சம்பிரதாயத்தில் காணப்படுவது ஒரு வலுவான ஆதாரமாகக் கருதப்படுகிறது.

இந்த நாகரீகம் இந்தியாவில் ஆரியர் வருகைக்குப் பல நூற்றாண்டுகள் முந்தையவை என்பதால் ஆரியர் இவற்றுக்கு உரிமை கோர முடியாது உள்ளது. எனினும் அங்கு கிடைக்கப் பெற்ற எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட வணிக முத்திரைகள் படித்து அறிய முடியாத நிலை காணப்பட்டதால் அவற்றை ஆரியர் தமது மொழியின் ஆரம்ப நிலை எனவும் இந்தோ ஆரிய மொழிகளின் ஊற்று மொழி எனவும் கருத்துருவாக்கம் கண்டனர்.

இந்தியாவின் உலகப் புகழ் பெற்ற எழுத்தியல் நிபுணரான திரு.ஐராவதம் மகாதேவன் அந்த முத்திரைகளில் உள்ள எழுத்துகள் நிச்சயமாகத் திராவிட மொழி என முதலில் உறுதிபடக் கூறியதோடு அவை தமிழ்தான் என நிச்சயப்படுத்த முடியவில்லை எனவும் தெரிவித்து வந்தார்.

பின்னர் தென்னிந்தியாவில் ஆதிச்ச நல்லூரிலும், ஈழத்தில் ஆனைக் கோட்டை, கந்தரோடை போன்ற பல இடங்களிலும், அண்மையில் அம்பாந்தோட்டையிலும் கிடைத்த மட்பாண்ட ஓடுகளில் காணப்பட்ட எழுத்துக்கள் பழைய தமிழ்ப் பிராமி எழுத்து எனவும் அவை சிந்து வெளி எழுத்துக்களை ஒத்து உள்ளன எனவும் கலாநிதி க. இந்திரபாலா உறுதி செய்தார். திரு.மகாதேவனின் நிபுணத்துவம் கருதி சிந்து வெளி எழுத்துக்களும் பழைய தமிழ் பிராமி எழுத்தின் வடிவம் என்ற முடிவானது மிகப் பெரும் திருப்பம் என்று டாக்டர் கிரெகரி போசேல் தெரிவிக்கிறார்.

எனவே மேற் கண்டவற்றின் மூலம் தமிழராகிய நாம் எவ்வளவு பெரிய புகழ்மிக்க பாரம் பரியத்துக்குச் சொந்தக்காரர் என்பதை தெரிந்து கொள்ள முடியும். இவை ஒரு மிகச் சிறு அளவே இன்னும் இவைபோல் நிறைய உண்டு. முழுவதையும் நாம் தெரிந்து கொண்டால் உலகமே எதிர்த்தாலும் எமது தாயக தேசம், தமிழ் மொழி, ஆட்சி உரிமை என்பவற்றை இனி எக் காரணம் கொண்டும் பறிகொடுக்க முடியாது என்ற மன உறுதி எமக்கு ஏற்படும்.

இவ்வளவு பெருமைகளின் பிறப்பிடம் இலங்கைத் தீவு அடங்கிய கடலால் விழுங்கப்பட்ட லெமூரியாரக் கண்டத்தின் எச்சமாகத் திகழும் தேசத்துக்குச் சொந்தக்காரர் என்ற பெருமை ஒரு சிறு மக்கள் தொகையினராகிய ஈழத் தமிழ் மக்கள் ஆகிய எமக்கு உள்ளது. இக்கூற்றை உறுதி செய்யும் வெளிநாட்டவரின் மிக நவீன விஞ்ஞான ஆய்வுகள் பற்றிய விபரங்களை இத்தொடரில் வாசகர் கவனத்துக்கு வழங்கப்படும்.

எனவே ஈழத் தமிழினம் அழிக்கப்பட்டால், உலகின் முழுத் தமிழ் இனத்தின் பூர்வீக நிலமும் அடையாளமும் முழுமையாக உலகிலிருந்து மறைந்து விடும் என்பதை உறுதியாக நம்பலாம். அத்தகைய நிலைமை உருவாக அழிக்கப் படும் ஒரு இனத்தின் மக்களாக விளங்கும் புலம் பெயர் தமிழ் மக்கள் இடம் கொடுக்கலாமா? அதனால் வரும் வரலாற்றுப் பழிக்கும் சிங்களத்தின் தமிழ் இன அழிப்புக்கு உதவும் இனத் துரோகத்துக்கும் நாம் ஆளாக வேண்டுமா? சிந்திப்போம் தமிழ் இன விடுதலைப் போரில் எம்மை இணைத்துக் கொள்வோம். (தொடரும்)



# PAGEVISION IT AG

உங்கள் கணனிசார் அனைத்து விதமான தேவைகளுக்கும் தயக்கமின்றி எம்மை நாடுங்கள்.

Tel: 043 317 91 00, Fax: 043 317 91 02

www.pagevision.ch
info@pagevision.ch



CHF 109.- inkl. MwSt.

எம் ஊடாக VOIP TELEFON இணைப்பை ஏற்படுத்தினால், இலவசமாகவும் மிகக் குறைந்த கட்டணத்திலும் தொடர்பினை ஏற்படுத்திக் கொள்ளலாம்.

Tellstr. 31/ Ecke Militärstr. 106
8004 Zürich

உலக ஓட்டத்திற்கு ஏற்ப
உங்கள் வீடுகளிலும்
நவீன கணனி முக்கியம்
என்பதை நாம்
அறிவோம்.



- Intel Core i5 2400
- 4x 3.10GHz, 6MB Cache
- 4GB DDR-3 Ram, Markenprodukt
- 1000GB Festplatte
- Nvidia GeForce GTX550 PCI-Express Grafikkarte mit 1GB DDR-5 Ram
- Windows 7 Home Premium

**CHF 1'190.- inkl. MwSt.**

# return'IT

günstige gebrauchte Computer
Reparaturen aller Marken
www.pckaufen.ch



CHF 110.- inkl. MwSt.

**DELL Precision 380**
Intel Pentium IV - 2.80GHz
160GB Festplatte, 7200RpM, S-ATA
RAM 1GB DDR2 RAM
DVD/CD-RW, Floppy
Grafikkarte: Nvidia Quadro FX1400 - 128MB
Windows XP Professional Lizenzkleber


**HP DC7700**
Intel Core 2 Duo E6300
2x 1.86GHz
1GB DDR-2 RAM
80GB Festplatte
DVD/CD-Brenner
Integrierte Intel Q965 Grafik
Anschlüsse: 8x USB 2.0
VGA, 5x Audio, GLAN, 2x PS/2
Windows XP Professional Lizenz

CHF 120.- inkl. MwSt.



**HP Compaq NC8430**
15.4" WSXGA+ Display
Intel Core 2 Duo T7200
2x 2.00 GHz
2GB DDR-2 RAM
DVD-RW Laufwerk
ATI Mobility Radeon X1600
120GB Festplatte SATA
54Mbit WLAN
Fingerprint Reader, Bluetooth
Akkulaufzeit: 46-60 Minuten
Windows XP Professionaler

CHF 270.- inkl. MwSt.



**!! REPARATUREN ALLER MARKEN !!**

für Neuware besuchen Sie
**WWW.PAGEVISION.CH**

Tellstr. 31, 8004 Zürich - Tel: 043 317 91 01
Kirchgasse 33, 8302 Kloten - Tel: 044 500 22 22
Züricherstr. 99, 8406 Winterthur - Tel: 052 203 15 50

**HP Compaq 8510W**
Intel Core 2 Duo T7500
2x 2.20 GHz
2GB DDR-2 RAM
DVD-RW Laufwerk
Nvidia Quadro FX 570M
250GB Festplatte SATA
300Mbit WLAN
Schweizer Tastatur,
Fingerprint Reader,
Bluetooth
*Windows VISTA Business Lizenz*

CHF 360.- inkl. MwSt.





# 2011ஆம் ஆண்டிற்கான தேசிய விருதுகள்

வி. சபேசன்

கடந்த ஆண்டிற்கான தேசிய விருதுகள் அறிவிக்கப்பட்டுவிட்டன. தமிழ் சினிமா இம்முறை ஐந்து விருதுகளை வென்றிருக்கிறது. உண்மையில் இதை நான்கு விருதுகள் என்றுதான் சொல்ல வேண்டும்.

சிறந்த மாநில மொழிப் படங்களுக்கு கொடுக்கின்ற விருதுகளில் சிறந்த தமிழ் படத்திற்கான விரு-தும் நிச்சயமாக ஏதோ ஒரு தமிழ் படத்திற்கு கிடைத்துத்தான் தீரும். இதையும் பட்டியலில் சேர்த்து ஐந்து விருதுகள் என்று சொல்வது அவ்வளவு சரியாக இருக்கிறது.

சிறந்த தமிழ்ப் படம் என்ற விருது உட்பட ஐந்து விருதகளை மொத்தமாக மூன்று தமிழ் படங்கள் பெற்று இருக்கின்றன.

இதில் கவலையான விடயம் என்னவென்றால் விருதுகளை பெற்ற இந்த மூன்று படங்களுமே அவ்வளவு சிறப்பாக ஓடவில்லை என்பதுதான்.

## அழகர் சாமியின் குதிரை

இந்தப் படத்திற்கு இரண்டு விருதுகள் கிடைத்திருக்கின்றன. சிறந்த பொழுது போக்குத் திரைப்படம் என்ற விருதும், இதில் கதைநாயகனாக நடித்த அப்புக்குட்டிக்கு சிறந்த துணை நடிகர் விருதும் கிடைத்திருக்கிறது.

சுசீந்திரன் இந்தப் படத்தை இயக்கியிருந்தார். இவர் ஏற்கனவே "வெண்ணிலா கபடிக் குழு", "நான் மகான் அல்ல" என்கின்ற இரண்டு வெற்றிப்படங்களை இயக்கியிருந்தார். அந்த வகையில் "அழகர் சாமியின் குதிரை" படத்திற்கும் நல்ல எதிர்பார்ப்பு இருந்தது.

படத்தில் நல்ல கதை இருந்தது. பல சிறந்த சமூக சீர்திருத்தக் கருத்துக்கள் இருந்தன. மூடப் பழக்கங்களை சாடுகின்ற நகைச்சுவைகள் இருந்தன. சிறப்பான நடிப்பு இருந்தது. இளையராஜாவின் சிறப்பான இசையும் இருந்தது.
இத்தனை இருந்தும் படம் ஏனோ எதிர்பார்த்த அளவு ஓடவில்லை. ஆயினும் விமர்சகர்களின் பாராட்டினை படம் பெற்றிருந்தது.

"அழகர் சாமியின் குதிரை" படத்தினை அடுத்து விக்ரமை வைத்து சுசீந்திரன் இயக்கிய "ராஜபாட்டை" பெருத்த அடியை வாங்கியது. பலரும் படத்தை கடுமையாக விமர்சித்தார்கள். இந்த நிலையில் அழகர்சாமியின் குதிரை படத்திற்கு இரண்டு விருதுகள் கிடைத்திருப்பது சுசீந்திரனுக்கு நல்ல ஒரு ஆறுதலாக அமைந்திருக்கிறது.

சிறந்த துணை நடிகர் விருது பெற்ற அப்புக்குட்டிக்கு இது ஒரு பெரும் சாதனையா-கும். ஓரிரு படங்களில் சிறிய வேடங்களில் நடித்துக் கொண்டிருந்தவர் அழகர் சாமியின் குதிரையில் கதை-யின் நாயகனாக நடிக்கின்றார் என்ற செய்தி வந்த பொழுது பலர் பலவிதமாக பேசினார்கள்.

இன்றைக்கு அவர்கள் வாயடைத்துப் போய் நிற்பார்கள்.

## ஆரண்ய காண்டம்

இந்தப் படத்திற்கும் இரண்டு விருதுகள் கிடைத்திருக்கின்றன. இந்தப் படத்தை இயக்கிய தியகாராஜன் குமாரராஜாவிற்கு சிறந்த புதுமுக இயக்குனருக்கான விருது கிடைத்திருக்கிறது. சிறந்த எடிட்டிங்கிற்கான விருதையும் இந்தப் படம் பெறுகிறது. பிரவீண் இந்த விருதை பெறுகி-றார். இன்றைக்கு வருகின்ற பல படங்களுக்கு இவர்தான் எடிட்டிங் செய்து கொண்டிருக்கிறார்.

நிழல் உலகத்தைப் பற்றிய படம் இது. படத்தில் பாடல்களே இல்லை. ஆனால் யுவன் சங்கர் ராஜா பின்னணி இசையில் கலக்கியிருப்பார். படத்தின் பின்னணி இசை அனைவராலும் மிகவும் வியந்து பாராட்டப்பட்டது. பின்னணி இசைக்கான தேசிய விருது கிடைக்கும் என்றும் எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் யுவனுக்கு இந்த ஆண்டும் விருது கிடைக்கவில்லை.

ஆரண்ய கண்டம் படம் விமர்சகர்களால் பெரிதும் பாராட்டப்பட்டது. கடந்த ஆண்டு இணையத் தளங்களில் மிகவும் அதிகமாக உலகத் தரமான படம் என்று போற்றப்பட்டது ஆரண்ய கண்டம்தான்.

அப்படி இருந்தும் படம் பெரிய அளவில் பொதுவான மக்களிடம் எடுபடவில்லை. படத்தின் நுணக்கமான விடயங்கள் எல்லோருக்கும் புரியாமல் போயிருக்கலாம்.

ஆயினும் படத்திற்கு பல இடங்களில் இருந்து விருதுகள் குவிந்தன. தற்பொழுது இரண்டு தேசிய விருதுகளும் கிடைத்து விட்டன. படம் ஓடவில்லை என்ற குறையை இந்த விருதுகள் போக்கியிருக்கின்றன.



எதுவாயினும் நல்ல கருத்துக்களை கூறிய அழகர் சாமியின் குதிரை, வாகை சூட வா மற்றும் புதிய முறையில் முயற்சிக்கப்பட்ட ஆரண்ய காண்டம் போன்ற தகுதி மிக்க படங்களுக்கே விருதுகள் கிடைத்திருக்கின்றன. படங்கள் ஓடவில்லை ஆயினும் இந்த விருதுகள் இயக்குனர்களை மிகவும் ஊக்குவிக்கும். புதிய முயற்சிகளை செய்ய வைக்கும்.

## வாகை சூட வா

இந்தப் படத்திற்கு சிறந்த தமிழ்ப் படம் என்கின்ற விருது கிடைத்திருக்கிறது. "களவாணி" என்கின்ற வெற்றிப்படத்தை தந்த ஏ.சற்குணம் இந்தப் படத்தை இயக்கியிருந்தார். களவாணியில் கதாநாயகனாக நடித்த விமல்தான் இந்தப் படத்திலும் நடித்திருந்தார். சென்ற நூற்றாண்டின தொடக்கத்தில் நடக்கின்ற கதையை இந்தப் படம் கொண்டிருந்தது.

இவைகள் இந்தப் படத்திற்கு நல்ல எதிர்பார்ப்பைக் கொடுத்திருந்தன. படம் கல்வியின் அவசியத்தை போதிப்பதாக இருந்தது. நல்ல கருத்தோடு வந்த இந்தப் படமும் விமர்சகர்களின் பாராட்டைப் பெற்றதோடு சரி. படம் ஓடவில்லை.





மீண்டும் Dortmund நகரில்

புதிய அமுதசுரபி

இலங்கை இந்திய தமிழர் உணவகம்

U-Towerக்கு முன்பாக வட இந்திய, இலங்கை உணவு வகைகளைச் சுவைத்து மகிழ ஓர் உணவகம்!

Rheinische Str,20
44137 Dortmund
Tel: 0231 91098947 - Fax:0231 530 176 82




Mittag Buffet: Mo-bis Sa-11.00.15.00 Uhr
Nur 5,50€

Tel:0231/ 91 09 89 47

# விளாடிமீர் புட்டினுக்கு அஞ்சும் அமெரிக்கா!



பூமிபுத்திரன்

மார்ச் மூன்றாம் திகதி நடைபெற்ற ரஷ்ய ஒன்றியத்தின் அரசுத் தலைவர் தேர்தலில் 63.6 வீத வாக்குகளைப் பெற்று தற்போதைய பிரதமர் விளாடிமீர் புட்டின் அமோக வெற்றி பெற்றுள்ளார். இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ள ரஷ்ய பொதுவுடமைக் கட்சி வேட்பாளரும் சிரேஷ்ட அரசியல்வாதியுமான கென்னடி சுகனேவ் அவர்களால் 17.2 வீத வாக்குகளை மாத்திரமே பெற முடிந்தது.

ஏற்கனவே, கடந்த டிசம்பர் மாதம் நடைபெற்ற 'டூமா' என அழைக்கப்படும் ரஷ்யப் பாராளுமன்றத்துக்கான தேர்தலில் புட்டின் தலைமையிலான ஐக்கிய ரஷ்யக் கட்சியே பெரும்பான்மை இடங்களைக் கைப்பற்றி ஆட்சியமைத்து வருகின்ற போதிலும், அந்தத் தேர்தலில் முறைகேடுகள் இடம்பெற்றிருந்தன என்ற கூக்குரல்கள் தொடர்ந்த வண்ணம் இருக்கின்றன. வெறுமனே அறிக்கைகள் மட்டுமன்றி மேற்குலகின் நிதியுதவியுடன் இயங்கிவரும் அரச சார்பற்ற நிறுவனங்களின் ஏற்பாட்டில் மக்கள் பங்குபற்றும் பேரணிகளும் கூட அடிக்கடி இடம்பெற்று வருகின்றன.


பாராளுமன்றத்தில் 2003 ஆம் ஆண்டு முதல் புட்டின் தலைமையிலான ஐக்கிய ரஷ்யக் கட்சியே பெரும்பான்மைப் பலத்துடன் ஆட்சி செய்து வருகின்றது. எனினும், 2007 ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலோடு ஒப்பிடுகையில் அக் கட்சியின் செல்வாக்கு கடந்த தேர்தலில் சரிந்திருந்தமையை அவதானிக்க முடிந்தது. ஆனாலும் 238 இடங்களைப் பெற்றுத் தற்போதும் பெரும்பான்மைப் பலம் மிக்க கட்சியாக அதுவே உள்ளது. நிலைமை இவ்வாறு இருக்கையில் புட்டின் தேர்தலில் தோற்பார் என எதிர்பார்ப்பது எவ்வகையில் சாத்தியம்?

நடைபெற்று முடிந்த அரசுத் தலைவர் தேர்தலும் கூட முறைகேடுகள் நிறைந்ததாகவே நடைபெற்றது என நிலைநாட்டிவிட மேற்குலகமும், ரஷ்யாவிலுள்ள அதன் அடி வருடிகளும் பகீரதப் பிரயத்தனம் செய்து வருகின்றனர். ரஷ்ய மக்களின் ஜனநாயக உரிமைகளை நிலைநாட்டுவதோ அன்றி தர்மம் வெல்ல வேண்டும் என்பதோ அவர்களின் இலட்சியம் அல்ல, மாறாக புட்டின் அரசுத் தலைவர் ஆவதை எப்பாடுபட்டாவது தடுத்துவிட வேண்டும், அரசியல் அதிகாரம் கொண்ட ஒருவராக அவர் விளங்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்பதே அவர்களின் உண்மையான இலக்காக உள்ளது.

புட்டின் ரஷ்யாவின் அரசுத் தலைவராக வருவதை - ராஜதந்திர மரபுகளையும் மீறி - அமெரிக்கா தலைமையிலான மேற்குலகம் வெளிப்படையாகவே எதிர்த்து நிற்பதற்குக் காரணம் என்ன?

சோவியத் ஒன்றியமாக ரஷ்யா இருந்துவந்த காலத்திலிருந்தே அந்த நாட்டிற்கும் மேற்குலகிற்கும் இடையிலான பகைமை நீடித்து வருகின்றது. லெனின் தலைமையிலான செஞ்சேனையுடன் போராட புரட்சிக்கு எதிரான முதலாளித்துவக் கூலிப்படை ஒன்றை உருவாக்கி பயிற்சியும், ஆயுதங்களும், வழிகாட்டலும் வழங்கி, தனது நட்பு நாடான யப்பானுடன் கரங்கோர்த்து சோவியத் ஒன்றியத்தை நிர்மூலம் செய்துவிட தொழிலாளர் புரட்சி வெற்றிபெற்ற ஆரம்ப காலகட்டத்தில் அமெரிக்கா செயற்பட்டமை ஒன்றும் இரகசியமான விடயமல்ல.

பொதுவுடமைத் தத்துவத்தை நடைமுறையில் பிரயோகித்து பாட்டாளிவர்க்க சர்வாதிகார ஆட்சியைப் பூமிப்பந்தில் முதன்முதலில் படைத்துக் காட்டிய நாடு என்ற பெருமை பெற்றது சோவியத் ஒன்றியம். உலகின் முற்போக்குச் சக்திகளுக்கு தொடர்ந்தும் உறுதுணையாக நின்றது அந்நாடு. பின்னாளில், அதன் உதவியுடனேயே உலகின் பெரும்பாலான நாடுகள் காலனித்துவ அடிமைத்தளையில் இருந்து தம்மை விடுவித்துக் கொண்டன என்பதுவும் குறிப்பிடத் தக்கது.



தமது தங்கு தடையற்ற சுரண்டலுக்குத் தடையாக விளங்கிய சோவியத் ஒன்றியத்தை எப்பாடு பட்டாவது சிதைத்துவிடுவதே ஏகாதிபத்தியத்தின் முழுநேர வேலைத்திட்டமாக இருந்தது. இதற்காக தமது அனைத்து யுக்திகளையும் வளங்களையும் மேற்குலகம் கூச்ச நாச்சமின்றிப் பயன்படுத்தியது. இரண்டாம் உலக மகாயுத்த காலகட்டத்தில் நாஸிகளுக்கு எதிரான யுத்தத்தில் சோவியத் மக்கள் காட்டிய தீரம் மகத்தானதாகப் போற்றப்பட்ட போதிலும், அதனால் சோவியத் ஒன்றியத்தின் வீழ்ச்சியைத் தடுக்க முடியாமற் போய்விட்டது.

பின்னாளில் ரஷ்ய ஒன்றியம் அமைக்கப்பட்ட வேளையில், இரண்டு முகாம்கள் என்ற நிலைமாறி உலகம் ஒற்றை முகாம் என்ற நிலைக்குள் பிரவேசித்தது. 'தட்டிக் கேட்க ஆளில்லாத சண்டப் பிரசண்டனாக' அமெரிக்க பவனிவந்த வேளையில்தான் 2000 மாம் ஆண்டில் விளாடிமீர் புட்டின் ரஷ்யாவின் அரசுத் தலைவராக முதன்முதலில் பதவியேற்றார். அன்றிலிருந்து ரஷ்யாவின் தலைமையில் மேற்குலகிற்கு மாற்றான முகாம் ஒன்று உலகில் உருவாகத் தொடங்கியது.

இதனை அமெரிக்காவினாலும், அதன் நேச நாடுகளாலும் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. அன்றிலிருந்து அவை புட்டினைக் குறிவைத்துத் தாக்கும் தந்திரோபாயத்தைக் கையிலெடுத்தன. 'பொதுவுடமை அபாயத்'துக்கு எதிராக முன்னர் 'போராடிய' அவை தற்போது 'ரஷ்ய மேலாதிக்கத்'துக்கு எதிராக அணிதிரண்டன.

இதேவேளை, மாற்றுக் கருத்துக்காக ஏங்கிக் கொண்டிருந்த பல நாடுகள் புட்டினை தமது 'ஆபத் பாந்தவனா'கக் கருதி அவருடன் தொடர்புகளைப் பேண விளைந்தன. புட்டினும் தனது வரலாற்றுப் பாத்திரத்தை உணர்ந்து அதனை ஏற்றுக் கொண்டு உலகின் மாற்றுத் தலைமையாகப் பரிணமித்தார்.

பெற்றோலியப் பொருட்களுக்கு உலக நாடுகளில் ஏற்பட்ட விலைஉயர்வு சாதகமாக அமைந்ததில் ரஷ்யாவில் துரித பொருளாதார வளர்ச்சி ஏற்பட்டது. இதன் காரணமாக புட்டினின் செல்வாக்கு உள்நாட்டில் வெகுவாக அதிகரித்தது. இதன் விளைவாக, 2004 இல் நடைபெற்ற அரசுத் தலைவர் தேர்தலில் முன்னைவிட அதிகப்படியான வாக்குகளைப் பெற்று அவர் மீண்டும் தெரிவானார். அதேவேளை, உள்நாட்டில் புட்டினின் வகிபாகம் தவிர்க்க முடியாத ஒன்றாக உருப்பெற்றது. அவரது சகாப்தம் ரஷ்ய அரசியலில் ஒரு தவிர்க்க முடியாத அங்கமாகப் பரிமாணம் பெற்றது.

ரஷ்ய அரசியலமைப்பின் பிரகாரம் ஒருவர் தொடர்ச்சியாக இரண்டு தடவைகளுக்கு மேல் அரசுத் தலைவராகப் பதவி வகிக்க முடியாது. எனவே, - விருப்பம் இருந்த போதிலும் - மூன்றாவது தடவை போட்டியிட முடியாத நிலையில் புட்டின் தனது நீண்டகால நண்பரான டிமிற்ரி மெட்வடேவ் அவர்களை அரசுத் தலைவர் தேர்தல் களத்தில் இறக்கி அவரை வெற்றி பெறச் செய்தார். மெட்வடேவ் அரசுத் தலைவரான நிலையில் புட்டின் பிரதமர் பதவியைப் பொறுப்பேற்றுக் கொண்டார். இரண்டு தடவைகள் அதிஉயர் பதவியான அரசுத் தலைவர் பதவியை வகித்த ஒருவர் அதனிலும் குறைவான பிரதமர் பதவியை ஏற்றுக் கொள்ளமாட்டார் என்றே பலரும் எதிர்பார்த்தனர். ஆனால், புட்டின் அதைப்பற்றிக் கவலை கொள்ளவில்லை. ரஷ்ய அரசாங்கத்தின் ஒரு அங்கமாக விளங்கி தனது தாய்நாட்டு மக்களுக்கும், உலக மாந்தருக்கும் சேவையாற்றுவதையே கடமையாக நினைத்துப் பணியாற்றினார். அதேவேளை, மெட்வடேவ் அவர்களைப் பெயரளவில் வைத்துக் கொண்டு புட்டின் அவர்களே ரஷ்யாவை நிர்வகித்து வருகின்றார் என்ற குற்றச்சாட்டுக்களும் எழாமல் இல்லை. சில வேளைகளில் இந்தக் குற்றச்சாட்டு உண்மையோ என நினைக்கும் அளவிற்கே புட்டின் அவர்களின் ஒருசில செயற்பாடுகளும் அமைந்திருந்தன. உலக மன்றங்களில் அவர் ஆற்றிய பல உரைகள் ரஷ்யாவின் கருத்தாக இருந்தமை மட்டுமன்றி, கடுந் தொனி உடையதாகவும் இருந்தமையை அவதானிக்க முடிந்தது.



புட்டினின் முன்னைய ஆட்சிக் காலத்தில் மேற்குலகுடன் ஒரு இறுக்கமான நிலைப்பாட்டையே அவர் பேணி வந்திருந்தார். ஆனால், மெட்வடேவ் பதவி வகித்த இடைக் காலத்தில் மேற்குலகுடனான அணுகுமுறையில் ஒரு மென்மைப் போக்கை அவதானிக்க முடிந்தது. ஆனால், புட்டினின் புதிய பதவிக் காலம் முன்னைவிட இறுக்கமாகவே இருக்கும் என எதிர்பார்க்கலாம்.

தான் பதவிக்கு வருவதைத் தடுத்துவிட அமெரிக்கா மேற்கொண்டுவரும் முயற்சிகள் தொடர்பாக அவர் நன்கு அறிந்து வைத்திருக்கின்றார். இந்தத் தேர்தலில் அவரது வெற்றியைத் தடுத்துவிட அவரது உயிருக்குக் கூட இலக்கு வைக்கப் பட்டதாக ஒரு செய்தி உள்ளது. அது மட்டுமன்றி புட்டினின் தேர்தல் வெற்றியை ஒரு மோசடி என வர்ணிப்பதன் மூலம் அவரைச் சங்கடத்தில் ஆழ்த்தும் போக்கையும் மேற்குலகம் கடைப்பிடித்து வருகின்றது. இந்நிலையில், தனது உயிரை மட்டுமன்றி உலகையும் ஏகாதிபத்தியத்திடம் இருந்து காக்க வேண்டிய மாபெரும் பொறுப்பு தனக்கு இருப்பதாக புட்டின் கருதுகின்றார்.

ஏற்கனவே, அமெரிக்கா உத்தேசித்துள்ள, ஐரோப்பாவில் ரஷ்யாவைச் சுற்றி ஏவுகணை வளையமொன்றை அமைக்கும் திட்டத்தைக் கண்டித்துள்ள ரஷ்யா, அதனை எதிர்கொள்ளும் வகையில் மாற்றுத் திட்டங்களைப் பரிசீலித்து வருகின்றது. ஆப்கானிஸ்தானில் இருந்து வெளியேறுவதாக அறிவித்துள்ள அமெரிக்கா, ஏக காலத்தில் அயல் நாடுகளில் நிரந்தர படைத்தளங்களை நிறுவி விருவதையும் ரஷ்யா கண்டித்துள்ளது. இத்தகைய நாடுகள் ரஷ்யாவுடன் எல்லைகளைப் பகிர்ந்து கொள்ளும் நாடுகளாகவும் இருப்பது ரஷ்யாவின் கவலையை மேலும் அதிகரிப்பதாக உள்ளது.

ரஷ்யாவின் மற்றொரு அயல்நாடான ஈரானின் அணுசக்தி விடயத்தில் அமெரிக்காவும் இஸ்ரேலும் கடைப்பிடித்து வரும் கெடுபிடி நிலைப்பாடும் கூட ரஷ்யாவுக்கு ஏற்புடைத்தாக இல்லை. ரஷ்யாவின் நட்பு நாடுகளுள் ஒன்றாக விளங்கிய கேணல் கடாபி தலைமையிலான லிபியா விடயத்தில் அமெரிக்காவும், ஐரோப்பாவும் நடந்து கொண்ட விதம் ரஷ்யாவை தற்போதும் உறுத்திக் கொண்டே இருக்கின்றது. அதேசமயம், ரஷ்யாவின் மற்றொரு நட்பு நாடான சிரியாவில் தற்போது இடம்பெற்று வரும் சிவில் யுத்தத்தைக் கையாளுவதிலும் அமெரிக்காவும் ரஷ்யாவும் ஒன்றுக்கொன்று முரணான அணுகுமுறைகளையே கடைப்பிடித்து வருகின்றன. லிபியா தொடர்பான தனது அனுபவத்தைக் கொண்டு கேணல் கடாபிக்கு ஏற்பட்ட துயர முடிவைப் போன்ற ஒன்று தனது நண்பரான அசாத்துக்கும் நிகழ்ந்துவிடக் கூடாது என்பதில் ரஷ்யா அவதானமாக இருந்து வருகின்றது.

இந்நிலையில், உலக அரங்கில் தனது மனம்போனபடி நடக்க புட்டின் தலைமையிலான ரஷ்யா அமெரிக்காவை அனுமதிக்க மாட்டாது என்பதே யதார்த்தம்.

2007 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் ஜேர்மனியில் நடைபெற்ற பாதுகாப்புக் கொள்கைகள் தொடர்பான சர்வதேச மகாநாட்டில் உரையாற்றிய புட்டின் கூறிய வார்த்தைகள் இவை. 'ஒற்றைத் துருவ மாதிரி என்பது ஏற்றுக் கொள்ளப்பட முடியாத ஒன்று மாத்திரமன்றி, உலகில் சாத்தியமற்ற ஒன்றுமாகும். அமெரிக்காவானது சகல வழிகளிலும் தனது தேசிய எல்லைகளுக்கு வெளியே செயற்பட்டு வருகின்றது.'

புட்டினின் கருத்தை ஆழமாக விளங்கிக் கொண்டால் அவர் ரஷ்யாவின் அரசுத் தலைவர் ஆவதை அமெரிக்கா ஏன் விரும்பவில்லை என்பது இலகுவில் புலனாகும். அதேவேளை, புட்டினைப் போன்ற ஒருவர் எதற்காக ரஷ்யாவின் தலைமைப் பொறுப்பில் இருக்க வேண்டும் என்பதுவும் தெரியவரும்.

உலகில் சமநிலையைப் பேணும் பாரிய பொறுப்பு இன்று அவர் தோள்களிலேயே உள்ளது. தனது பொறுப்பை அவர் சரியாகவே உணர்ந்துள்ளார் என்பதால் அப் பொறுப்பை முறையாக நிறைவேற்றுவார் என நிச்சயம் நம்பலாம். அதேவேளை, அவர் ரஷ்யாவின் அரசுத் தலைவராக நீடிக்கும் வரை 'தேர்தல் முறைகேடுகள்' போன்ற அபத்தமான காரணங்களைக் கூறி மேற்குலகம் மேற்கொண்டுவரும் பரப்புரைகள் தொடரவே செய்யும் என்பது நிச்சயம்.

# Orient Textiles and Jewellery

2011 ம் ஆண்டுக்கான புத்தம்
புதிய வர்ணங்களில் குந்தம்
வேலை செய்த கோலம்.
காஞ்சி காஞ்சிபுரம்,
கோலம் மற்றும் பல வகையான
முகூர்த்தப் பட்டுச் சேலைகள்.

சிறுவர்களுக்கான
ஆடைவகைகளையும்
பெற்றுக்கொள்ளலாம்.

உத்தரவாத முத்திரை பதித்த
தரமான தங்கமான தங்க
ஆபரணங்கள் தரமான தேர்வில்,
சிங்கப்பூர் விலையில்
விற்பனையானகின்றது.



எமது
வாடிக்கையாளர்களுக்கு
இனிய சித்திரைப்
புத்தாண்டு
வாழ்த்துக்கள்

உரிமையாளர்: S.ஜெகதீஸ்

Königswall 16 (Am HBF)
44137 Dortmund, Germany
Tel: 0231 16 23 77
Fax: 0231 14 78 36

165, Upper Tooting Road
Tooting, London SW177TJ, UK
Tel: 0208 6823958




# அதிகரிக்கும் சாலைவிபத்துக்களும், இறுக்கமடையும் யேர்மனிய விதிமுறைகளும்!

*கிரிஷ் பாலா*

**1970**ஆம் ஆண்டில் யேர்மனியில் மக்கள் போக்குவரத்துக்கள் மூலமான விபத்துக்களினால் 21332 பேர் உயிரிழந்தார்கள். உச்சகட்டத்திற்கு வந்த இப்பதுகாப்பற்ற நிலையை மீண்டும் சிறந்த பாதுகாப்புப் பொறிமுறையாக மாற்றமடையச்செய்வதற்காக, யேர்மனியப் போக்குவரத்திற்கான கூட்டாட்சிப் பணிமனை பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டது. அந்த வகையில், பாதசாரிகளுக்கான பாதுகாப்பு, விபத்துக்களைத் தடுப்பதற்கான வேகக்கட்டுப்பாடு, போக்குவரத்தில் ஈடுபடுபவர்களுக்கான ஒழுங்குமுறைகளைக் கற்பிக்கும் அடிப்படையில் கையாளப்படும் கண்காணிப்புக்கள், அதிக முறை குற்றம் புரிந்தவர்களுக்கான புள்ளிவிபரமுறை, இருக்கைப்பட்டி அணியவேண்டிய கட்டாயம், தொழில்நுட்ப மற்றும் காற்றுப்பை போன்ற விடயங்களில் முன்னேற்றங்களைக் கொண்டுவந்ததன் காரணமாக, 2010ம் ஆண்டின் கணிப்பில், 3648 பேர் மட்டுமே போக்குவரத்துக்களினால் உயிரிழந்திருக்கிறார்கள். ஆனால், 2011 ஆம் ஆண்டிற்கான கணிப்பின் அடிப்படையில் விபத்துக்களினால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை மீண்டும் 3991 ஆக அதிகரித்திருந்தது.

மேற்குறிப்பிடப்பட்ட "அதிக முறை குற்றம் புரிந்தவர்களுக்கான" புள்ளிப்பதிவு எனும் திட்டம் முதன்முதலில் 1974.05.01 அன்று யேர்மனியில் அறிமுகப்படுத்தப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டது.

சீரில்லாத போக்குவரத்தினால் ஏற்படும் விபத்துகளை மேலும் குறைப்பதற்காக ஜேர்மன் அரசாங்க போக்குவரத்து அமைச்சரான திரு. பீற்றர் ராம்சவ்வர் ஒரு புதிய "பலமுறை குற்றவாளி - புள்ளிவிபர முறையை" அறிமுகப்படுத்தினார்.

இதுவரை வேகக்கட்டுப்பாடுகளை மீறுதல், சிவப்புச் சமிக்கை மின்விளக்கை மீறுதல், சாரதிப் பத்திரமின்றி வாகனம் ஓட்டுதல், விபத்து நடைபெற்ற இடத்திலிருந்து எது-வித அறிவித்தலுமின்றித் தப்பிச்செல்லுதல் போன்ற குற்றங்களுக்கு 7 புள்ளிகள் வரை பதியப்பட்டு வரப்படுகின்றது. பதினெட்டுப் (18) புள்ளிகள் பதியப்பெற்றவுடன் சாரதி பத்திரத்தை இழந்துவிடுவர். தன்னிச்சையாக மீள் வகுப்பிற்குச் சென்று, பெற்ற புள்ளிகளைக் கழித்துக்கொள்ளலாம். இரண்டு வருடங்களுக்கிடையில் மேலும் வேறு ஏதாவது குற்றங்களுக்காக குற்றப் புள்ளிகள் பதியப் படாவிடின், முன்பு பதியப்பட்ட குற்றப் புள்ளிகள் அதுவாகவே குறைக்கப்பட்டு விடப்படும். இல்லாது விடின் மேலும் இரண்டு ஆண்டுகள் பதிவிலேயே இருக்கும்.

சட்டத்தை மீறிய காலப் பகுதியையா? அபராதக் கடிதம் பெற்ற காலப் பகுதியையா? அல்லது அவற்றை சட்டமாக்கப்படும் காலப் பகுதியையா? குற்றப் புள்ளிப் பதிவில் கணக்கிடவேண்டும் என்ற சந்தேகம் சட்ட நிபுணர்களிடையே கூடத் தோன்றியது. அதன் காரணத்தினாலேயே புதிய புள்ளி விபர முறைமையை அறிமுகப்படுத்தினர்.

அதன் அடிப்படையில் போக்குவரத்தின் பாதுகாப்பு பாதிக்கப்படும் வகையில் நடந்து கொண்டால் மட்டுமே புள்ளிகள் வழங்கப்படும். எடுத்துக்காட்டாக, சூழல் பாதுகாப்பு இடங்களிற்குள் வாகனத்துடன் சென்றால் எதிர்காலத்தில் புள்ளிகள் கிடையாது. அபராதக் கட்டளைக் கடிதம் மட்டுமே அளிக்கப்படும்.

குறிப்பாக கடுமையான மீறல்கள், குற்றங்கள் போக்குவரத்தில் செய்தால், 2 புள்ளிகளும், வாகனம் ஓட்டும் போது கைத்தொலைபேசியைப் பயன்படுத்தினால் 1 புள்ளியும் பதியப்படும். எட்டு (8) புள்ளிகள் பதியப்பெற்றவுடன் சாரதிப் பத்திரத்தை இழந்து விடுவர் என்பது குறிப்பிடத்தக்கது. நான்கு முறை வாகன ஓட்டத்தடை பெற்றவரும் இப் புதிய திட்டத்தின் அடிப்படையில் சாரதி அனுமதிப்பத்திரத்தை இழந்து விடுவார். மேலும் நான்கு(4) புள்ளிகள் பதிவின் போது சாரதி முதன் முறை எச்சரிக்கப்பட்டு, ஆறு (6) புள்ளிகள் பதிவின் போது இரண்டாம் முறை எச்சரிக்கப்பட்டு நிர்மாண வகுப்பில் பங்கேற்கும்படி கட்டளை அளிக்கப்படும். தன்னிச்சையாகச் செயற்பட்டு குற்றப் புள்ளிகளைக் குறைப்பதற்கான வாய்ப்புக்கள் எதிர்காலத்தில் கிடையாது.


மேலதிகமான குற்றங்கள் செய்யப்படாவிடில் ஒரு புள்ளிக் குற்றங்கள் இரண்டரை வருடங்களின் பின்னரும், இரண்டு (2) புள்ளிக் குற்றங்கள் ஐந்து (5) வருடங்களின் பின்னரும், பெரிய குற்றங்கள் பத்து(10) வருடங்களின் பின்னரும் இல்லாது போய்விடும். ஐந்து வருடங்களுக்கள் குறிப்பாக 0.5 தொடக்கம் 1.09 சதவீதம் மதுசாரத்தின் அளவு குருதியில் கலந்திருப்பின் வாகனமோடியவரின் குற்றம் இணைக்கப்படவுள்ளது. ஏனைய சாரதிகளை போக்குவரத்தில் அவசரப்படுத்துவோரின் புள்ளிகள் பத்து வருடங்களுக்குப் பதியப்படும் என்பது குறிப்பிடத்தக்கது. வேகக் கட்டுப்பாட்டை 21 கி.மீ தொடக்கம் 25 கி.மீ வரை மணித்தியால அளவிற்கு அகதிகமாக ஓட்டினால் இரண்டரை (2.5) வருடங்கள் பதிவில் இருக்கும்.

தற்போது வில்லன்ஸ்பேர்க் என்ற நகரத்திலுள்ள போக்குவரத்துக் கூட்டாட்சிப் பணிமனையில் ஏறத்தாள 9 மில்லியன் வாகனச்சாரதிகளின் குற்றங்கள் புள்ளிவிபரத்தில் பதியப்பட்டுள்ளது. பழைய திட்டத்தின் அடிப்படையில் பதியப்பட்ட புள்ளிகள், புதிய திட்டத்தின் அடிப்படையில் நடைமுறைக்கு வரும்போது புதிய புள்ளிவிபர முறைமைக்கு மாற்றப்பட்டு பதிவில் இருக்கும் என்று வலியுறுத்தப்படுகின்றது.

போக்குவரத்து அமைச்சர் திரு. பீற்றர் ராம்சவ்வர் குறிப்பிடுகையில் "இப்புதிய முறையினூடாக ஏறக்குறைய வருடாந்தம் 5500 சாரதிகள் தமது வாகன ஓட்டுனர் பத்திரத்தை இழந்து விடுவர் என நம்பப்படுகின்றது" என்றார். எனவே 2014ல் வரக்கூடிய இச்சட்டத்தைக் கருத்தில் கொண்டு, அனைத்துச் சாரதிகளும் போக்குவரத்தின் விதிமுறைகளை கடைப்பிடித்து வாகனங்களைச் செலுத்துவது மிகவும் நன்மை பயக்கும்.




SK
SINCE-2003
10வது ஆண்டில் காலடி பதிக்கிறது
S.K. Silks & Gold Paradise
15.03.2012 - 15.04.2012 வரை
அதிரடி மலிவு விற்ப்பனை!
200 யூரோக்களுக்கு மேல்
சேலைகள் கொள்வனவு
செய்பவர்களுக்கு சேலை பிளவுஸ்
இலவசமாகத் தைத்துக்
கொடுக்கப்படும்!
எமது
வாடிக்கையாளர்களுக்கு
இனிய சித்திரைப்
புத்தாண்டு
வாழ்த்துக்கள்
மங்கையர் மனதை
கொள்ளைகொள்ளும்
பட்டுச்சேலைகள் யுற்ரொப்ஸ்,
சிமோக', லேஸ், நெற்ஸ், லேசர்
ரிசு சேலைகள் அனார்கலி,
பட்டியாலா பஞ்சாபிகள்,
பாவாடைத்தாவணிகள் காகி-
றாச் சோலிகளுடன் ஆடவர்கள்
சிறுவர் சிறுமியர்களுக்கான
ரெடிமேட் ஆடைகளையும் இங்கு
பெற்றுக்கொள்ளலாம்.
இவை மட்டுமல்ல, 22கரட்
உத்தரவாதம் பதிக்கப்பட்ட
தங்க, வைர நகைகளை நவீன
டிசைன்களுடன் ஒரே கூரையின்
கீழ் பெற்றுக்கொள்ளலாம்.
30% முதல் 50% வரை
ஆடைகளின் விலைத் தள்ளுபடி!
Adler Str. 33
44137 Dortmund
Tel: 0231/9501647
Fax: 0231/9501648



# சமுதாயப்பரிசு

இரா. அருணாச்சலம்

மல்லிகா ஓர் பொது நலப் பிரியை. சமூகத்தின் மூலை முடுக்குகளில் ஒளிந்து கிடக்கும் உயிர்த் துடிப்புள்ள பிரச்சனைகளை ஓடி எடுத்து வெளிச்சத்திற்குக் கொண்டு வருவதே மல்லிகாவின் குறிக்கோளாக இருந்தது. அவளின் ஒவ்வொரு செயலையும் உந்து நோக்கினர் அரசியல்வாதிகளும், அத்தேசத்தின் பெரும் புள்ளிகளும், துரோகக் கும்பல்களும். அவர்களின் செயல்களிற்கு மல்லிகாவின் ஒவ்வொரு அசைவுகளும் பெரும் தடையாக இருந்ததனால் மல்லிகாவை என்றாவது ஒரு நாள் முடக்கி விட வேண்டும் என்றே பல வழிகளாலும் திட்டமிட்டனர். மல்லிகா அவர்களின் திட்டங்களை ஏற்கனவே அறிந்திருந்தாள். இருந்தும் தன் முயற்சிகளைக் கைவிடவில்லை. அது மட்டுமன்றி வன்னிப் பிரதேசம் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுக்குள் இருந்ததனால் மல்லிகாவை அந்தக் குழுக்களினால் அணுக முடியவில்லை. மாதங்கள் கடந்தது ஆண்டுகளாயின. ஈழத்தின் பிரச்சனை உலகெங்கும் பறந்து ஐ.நா சபையில் ஒலிக்க ஆரம்பித்தது. ஈழத்தில் ஆயுதப்போரும், புலம்பெயர்தேசமெங்கும் அரசியல் போரும் வடிவெடுத்தது.

ஈழப்போர் சர்வதேசப் பார்வையைத் தன்வசம் திருப்பியது. ஈழப்போரின் வளர்ச்சியும் அவர்களின் அரசியல் யாப்பின் அணுகுமுறைகளும் உலக வல்லரசுகளைச் சிந்திக்க வைத்தது. சிங்களமும், இந்தியாவும் இணைந்து துரோகத்தனமான இரகசியத் திட்டமொன்றைத் தீட்டினர். இலங்கையில் பயங்கரவாதத்திற்கு எதிராகப் போர் மூண்டது, ஆனால் அது பயங்கரவாதத்திற்கு எதிரானதல்ல, தமிழினத்தின் அழிப்பிற்காக என்பதுதான் உண்மை.

போர் புயல்வேகம் கொண்டது இன அழிப்பு ஆரம்பமானது. மக்கள் அங்கங்களை இழந்தனர் உறவுகள் சிதறின வன்னித் தேசம் பிரேதக்காடாக வண்ணம் கொண்டது.மக்கள் சொல்லில் அடங்காத துயர் நிலைக்குத் தள்ளப்பட்டனர். ஈழதேசம் இராணுவமயமாக்கப்பட்டது. சும்மாயிருப்பார்களா அவர்கள். கழுகுகளாய் வட்டமிட்டனர். அனைத்தையுமே இழந்த மனிதர்களை வேட்டையாடினர். அந்த மனித வேட்டையில், வேடர்களின் பிடியில் சிக்கியவர்களில் மல்லிகாவும் ஒன்றானாள்.

கொழுத்த அரசியல்வாதிகளும் இனவெறிகொண்ட சிங்கள இராணுவமும் சரணடைந்த மக்களைத் தரம் பிரித்தனர். முதியவர், இளையவர் இனங்கண்டனர். ஆண், பெண் எனப் பால் வேறுபாடின்றி தனித்தனியாக அடிமைப் படுத்தினர் தனிமைப்படுத்தினர் . இளம் பெண்களைத் தனிமைப் படுத்தி காமக்கிழத்தியராகக் கொண்டு அவர்களை ஒரு தனி வகுப்பாகவும் ஆக்கி விட்டார்கள். சோதனைச் சாவடிகள், பதிவுக் காரியாலயங்கள் என்ற பெயரில் தம் வழி வருவோர்களைத் தனிப்பதிவுகள் என்றும், பெண்களைத் திசை திருப்பினர். வாழ்வைத் தொலைத்தவர்களாக, நிர்கதியாக்கி மானம் விற்கும் விலை மாதராக்கினர். கல்வி உரிமை வாழ்வுரிமைக்காக, நீதிக்காய் உருவெடுத்த போர் இன்று ஓர் இனத்தின் விதியை மாற்றிவிட்டாயிற்று. அந்த விதியின் பிடியில் மல்லிகாவும் சிக்கினாள்.

என்ன கொடுமை? சமுதாயத்தில் செல்வமும், செல்வாக்கும் பெற்ற பெரிய மனிதர்களும் இராணுவப் பெருச்சாளிகளும் ஓர் துரோகக் கூட்டமும் இணைந்து வசதியற்று வறுமையில் வாழும் ஏழைக் குடும்பத்துப் பெண்களைத் தமக்கு இரையாக்கிக் கொண்டும் பிறரிற்கும் இரையாக்கியும் பின்னர் ஏமாற்றி வீதிகளில் அலையவிட்டுக் குற்றவாளிப்பட்டியலில் சேர்த்துச் சிறைச்சாலைகளிற்கு அனுப்பியும் இழிந்ததோர் குலத்தைத் தோற்றுவித்தனர். அச்செயலில் மகிழ்ச்சியும் கண்டனர். தவறுகள் புரியும் பெரும் புள்ளிகள் சாலச்சிறந்த தலைவர்களாகவும், புனிதர்களாகவும், ஊர் போற்றும் ஒழுக்க சீலனாகவும் தங்களைக் காட்டிக் கொண்டனர். துன்பத்துக்கு ஆட்பட்ட பெண்கள் சமுதாயக்

கள்ளிகளாக ஒதுக்கப்பட்டனர். இந்தக் கொடுமையை ஒழிக்கத்தான் எம்மில் சிலர் முயற்சித்தனர். அவர்களில் மல்லிகாவும் ஒருத்தி. ஆனால் விதியின் விளையாட்டில் மல்லிகாவே அவ்வேள்விக்கு விருந்தானாள்.

இரண்டு ஆண்டுகள் கழிந்தன. பலர் இடம் மாற்றப்பட்டனர் சிலர் மீள் குடியேற்றப்பட்டனர். மல்லிகாவும் அவ்வப்போது விடுவிக்கப்பட்டாள்.

இன்று வீங்கிய கண்கள், வெடித்த கன்னம், திறந்த காயங்கள், குருதியில் வடிந்த முகம் மொத்தத்தில் இன்று அவளொரு வாடிய மலர். தென்றல் கூட ஒரு கணம் சிந்திக்கும் அவளைத் தீண்டுவதற்கு. ஆனால் இன்று கோலம் குலைந்து சிந்தை கலைந்து சிதறிய சிற்பமாக அவள் மாற்றமடைந்தாள். அவளின் இளமை மாறி அதிக நாட்கள் ஆகவில்லை. ஆனால் மேனியின் மெருகும், வசீகரமும், வனப்பும் மங்கி விட்டது. பூவுடல் கொண்டவள் புன்னகை நீக்கி, புண்ணுடலாகிப் புயலுக்கு விருந்தானாள். தன் உடலைத் தானே காண வெட்கப்பட்டாள்.

வலியும், வேதனையும் தாங்க முடியாத மல்லிகா, மருத்துவமனைக்குள் நுழைந்தாள். அங்கே ஓர் பக்கமாகப் பார்வையாளர்களிற்காகப் போடப்பட்ட இருக்கையில் தானும் அமர்ந்தாள். அங்கும் இங்குமாக இராணுவச் சிப்பாய்கள் சுற்றிக்கொண்டனர். நோயாளிகள் ஒவ்வொருவரும் உள்ளே போவதும் வெளியே வருவதுமாகவே இருந்தனர். மல்லிகாவிற்கு ஒரே தலைசுற்றலாகவே இருந்தது. அவள் பசியாறச் சாப்பிட்டுப் பல வாரங்கள் ஆகிவிட்டன. அவளை உண்ண நினைத்தவர்கள், அவளுக்கு உணவென்னவென்பதைச் சிந்திக்க மறந்தனர்.

மல்லிகாவின் கண்கள் கலங்கித் திறந்தது. கண்ணீர் வடிந்து கன்னத்தில் வெடித்த காயங்களை நிரப்பின. விழித்துக்கொண்டாள்..., எப்படி? சிந்தைதான் விழித்தது. கண்ணீர் நிரம்பிய புண்கள் எரிவை ஏற்படுத்தியது ஒரு கணம். தூங்கிக் கொண்டிருந்த எண்ணங்கள் அலையலையாக எழுந்தது, எண்ணாதனவெல்லாம் எண்ணலானாள். வீரத்திற்கு வித்தாக வேண்டும் என்று எண்ணிய வாழ்வு, இன்று ஓர் விளையாட்டுக் கருவியானதைச் சிந்தித்தாள். விழிகளில் கண்ணீர் மீண்டும் பெருகியது.

உதட்டுப் புண்களின் எரிவுகளும் கண்ணீர் பட்டதால் அதிகரித்தது. எரிவும் வேதனையும் அவளுக்குப் பெரிதல்ல. சிந்தனைகளில் தூங்கிய அவளை, எழுப்பியது ஒரு கூப்பிடு குரல். அடுத்தவரை அழைத்தார் வைத்தியர். "உங்களைத்தான் பிள்ளை, வாருங்கோ" என அழைத்தார் பணியாளர் கணேசன். "இங்க உட்காருங்கோ" என்று கூறி விட்டு, வழமைபோல் டின்சர் என்ற அந்த மஞ்சள் மருந்தை மல்லிகாவின் முகக்காயங்களிற்குப் பூச வந்தார். வைத்தியர் பக்கத்தில் வந்து "என்னம்மா இன்று உடம்புக்கு என்ன?" என்று கேட்டார். அவள் பதில் கூறும் முன்பு, நிலமையை புரிந்து கொண்டார். தானாகவே ஒரு பஞ்சில் ஒன்றை நனைத்து அவள் முகத்தைத் துடைக்க முயன்றார். தான் துடைத்துக் கொள்வதாக மல்லிகா கூறினாள். வைத்தியர் கேட்கவில்லை. வைத்தியர்களிற்கு சில பிரத்தியேக உரிமைகள் உண்டெல்லவா? கையிலே ஒரு நோட்டுத் துண்டை எடுத்தார். கேள்விகளைக் கேட்ட அவர் பதிலையும் தானாகவே எழுதிக்கொண்டார். "பெயர்: மல்லிகா, வயது: 19 நாற்பத்தொன்பது என்று கூறினால் கூட நம்புவார்கள். தகப்பன் பெயர் கேட்கவேயில்லை". டாக்டர் அவளுக்குப் பல முறை வைத்தியம் பார்த்திருக்கின்றார். இருந்தும் மல்லிகாவிடம் வேடிக்கையாகவே கேள்வி கேட்பது அவரிற்கு வாடிக்கையாகிவிட்டது. கடைசியாக என்ன தொழில் என்று கேட்டவர், தானாகவே பதிலை எழுதிக்கொண்டார்: தாசி. "வேடிக்கையாகவே பேசிக்கொண்டே இருந்தேன் அம்மா என்றார். அவரின் சகல கேள்விக்கும் விடை தந்த மல்லிகா, கடைசிக் கேள்விக்கு விடையை அவராகவே கூறியதைக் கேட்டு, அவளையும் அறியாமல் அவள் கண்களில் நீர் தழும்பியது. "நான் காட்டு மிராண்டித்தனமாக நடந்துக்கொண்டேன் அல்லவா?" என்று டாக்டர் கூறினார். "இல்லை டாக்டர் இதில் என்ன தவறு. நான் யார் என்பதை நான் மறந்து விட்டேன். நான் தரித்திர உலகில் இப்போது குடி புகுந்துள்ளேன்" என்று கூறி டாக்டரின் உள்ளத்தை உலுக்கி விட்டாள் மல்லிகா. "மல்லிகா நீங்கள் நல்ல அறிவாளி" என்றார். "உன் வாழ்க்கை வெகு ரசமுள்ளதாக இருந்திருக்குமென எண்ணுகிறேன், உனக்கு சம்மதமென்றால், என் வீட்டில் வந்து தங்கலாமே? என்றார் டாக்டர்.அதிர்ந்துபோனாள் மல்லிகா..!!! உடலின் காயத்திற்கு மருந்து போடவந்த அவளின் இதயத்தைப் புண்ணாக்கி விட்டார் வைத்தியர். மல்லிகா மௌனமாகப் புறப்பட்டாள்.

காயத்திற்கு மருந்து பூசியாச்சு, என் வாழ்க்கையே புண்ணாகிவிட்டதே. யார் மருந்து போடுவது? நடந்தாள், நடந்தாள், நடந்தாள். எத்திசையை நோக்கி நடப்பாள்? கதிரவன் சாய்ந்த திசையை நோக்கியே.


Gopara Gnanam
என்றுமே வரலாறு
காணாத மலிவுவிற்பனை
SALE
எமது
வாடிக்கையாளர்களுக்கு
இனிய சித்திரைப்
புத்தாண்டு
வாழ்த்துக்கள்
15.03.12 - 15.04.12 வரை
அனைத்து ஆடைகளும்
50% விலைத் தள்ளுபடி!
திருமணம், பூப்புனித நீராட்டுவிழா போன்றவற்றிற்க்கான
அன்பளிப்பு பொருட்கள் எம்மிடம் பெற்றுக்கொள்ள முடியும்.
SALE
மலிவுவிற்பனை
GOPARA GNANAM
01713306542
Rheinische Str. 79, 81, 83
44137 Dortmund
Tel: 0231 54 500 28
Fax: 0231 54 500 48

ஈழவிடுதலைப் போராட்டத்தின் பதிவுகள், ஈழமண்ணில் சிங்கள அரசாங்கத்தினால் அழிக்கப்பட்டு வருகிறது. இந்நிலையில் புதிய தலைமுறைகளிற்கான பாடமாக, தமிழீழமண்ணில் நடைபெற்ற விடுதலைப்போரின் அத்தியாயங்களைப்பதிவுசெய்வதன் மூலம், இனிவரும் சமுதாயம் எமது நியாயப்பாடுகளை இலகுவாக விளங்கிக்கொள்ளும் என்ற நம்பிக்கையில் அகரம் இதழ் இவ்வரைவுச் சித்திரங்களை வெளியிடுகிறது..!

தொகுப்பு - திரு. ஆ. புலேந்திரன்



# KB intercom

**CyberCafe,
Carte téléphonique,
Alimentation générale,
Kiosque, Cigarette,
Western Union,
Ticket Booking**

WESTERN UNION
MONEY TRANSFER

மிகக் குறைந்த
விலையில் அனைத்து
நாடுகளுக்குமான
தொலைபேசி
அட்டைகள்!

iEasyTravels
www.ieasytravels.com



**தொடர்புகளுக்கு:**

உரிமையாளர்: U. KARTHIGESU

Av des Alpes 40, 1820 Montreux, Switzerland

Tel.: 021 961 27 16   Fax: 021 961 27 19   Natel: 079 681 56 44

சங்கத் தமிழன்
www.sangatamilan.com



# நயினாதீவு



வன்னை தெய்வம்

நாற்புறமும் கடலால் சூழப்பட்ட இலங்கைத் தீவின் வடபாகத்தில் குட்டிக் குட்டித் தீவுகளாக ஏழு தீவுகள் இருக்கின்றன. இந்த சப்த தீவுகளின் நடுநாயகமாக விளங்குவது நயினாதீவாகும். மூர்த்தி, தலம், தீர்த்தம் என்னும் முப்பெருமையையும் கொண்ட இக் குட்டித்தீவைப்பற்றி பலரும் அறிந்து வைத்திருப்பது அங்குள்ள நாகபூசணி அம்பாள் ஆலயத்தையும், அருகில் இருக்கும் பௌத்த விகாரையைப் பற்றியும்தான். ஆனால் எட்டு வட்டாரங்களைக் கொண்ட இந்தக் குட்டித் தீவில் எட்டாம் வட்டாரத்தில் இஸ்லாமிய மக்களின் வழிபாட்டுத் தலமான மசூதியும், ஐந்தாம் வட்டாரத்தில் கிறிஸ்தவ மக்களின் வழிபாட்டுத்தலமான சர்ச்சும் இருப்பது இந்தத் தீவிற்குரிய சிறப்பாகும்.

தீவுப்பகுதி மக்களைத் தவிர பிற ஊர்களில் வாழ்கின்ற மக்களுக்கெல்லாம் நயினாதீவு என்றால் நாகபூசணி அம்மன் ஆலயம் மட்டும்தான் இந்து ஆலயம் என்ற எண்ணம் இருக்கின்றது. ஆனால் நயினாதீவின் தென் மூலையில் கத்தியாக்குடா பிடாரி அம்மன் கோவில், தீர்த்தக்கேணி காட்டுக் கந்தாசாமி கோவில், (இங்குதான் நல்ல தண்ணீர்க் கிணறு இருக்கின்றது) செம்மணத்தம்புலம் பிள்ளையார் கோவில், பெரும்குளம் வீரகத்தி விநாயகர் கோவில், அம்மன் கோவிலென பல சிறிய சிறிய காவல்த்தெய்வங்களெல்லாம் இருக்கின்றன.

சுமார் நூறு வருடங்களுக்கு முன்பாக யாழ்ப்பாணத்தில் உள்ளவர்கள் நயினாதீவு செல்லவேண்டுமானால் யாழ்ப்பாணம் பண்ணையில் இருந்து முதலில் ஒரு வள்ளம் மூலமாக வங்களாவடி சென்று பின்பு வாகனம் மூலமாக வேலணையைக் கடந்து பின்பு புங்குடுதீவிலும் ஒரு பெரும் கடற்பயணம் செய்து பின்பும் வாகனம் மூலமாக புங்குடுதீவின் எல்லைவரை வந்து அங்கிருந்து மீண்டும் வள்ளங்கள் மூலமாகத்தான் நயினாதீவிற்கு செல்லவேண்டும்.

இப்படியாக மூன்று தடவைகள் கடற்பயணம் செய்துதான் நயினாதீவை அடைய முடிந்தது அன்றைய நாட்களில். அதன் பின்னர் தற்பொழுது சுமார் அறுபது அறுபத்தைந்து வருடங்களுக்கு முன்னர் புங்குடுதீவு பெருங்கடலை ஊடுறுத்து பெரு வீதியும், சுமார் ஐம்பது வருடங்களுக்கு முன்னர் பண்ணைக் கடலில் பாலம் கட்டப்பட்டு கடலூடாக வீதியும் அமைக்கப்பட்டதால் தற்பொழுது புங்குடுதீவு துறைமுகம்வரை வாகனங்களிலேயே செல்லக்கூடியதாக இருக்கின்றது.

புங்குடுதீவில் இருந்து நயினாதீவு செல்வதற்காக கழுதைப்பிட்டி, (இறுப்பிட்டி) குறிகட்டுவான் என இரண்டு துறைமுகங்கள் புங்குடுதீவில் இருக்கின்றன. இதேபோல நயினாதீவிலும் இரண்டு துறைமுகங்கள் இருக்கின்றன கழுதைப்பிட்டி துறைமுகத்தில் இருந்து நயினை அம்மன் கோவில்

HMH
Asianshop
&
Trinkhalle
குறைந்த விலையில் தரமான பொருட்களை பெற்றுக்கொள்ளலாம்
Heinrich Gustav Str. 82
Bochum Werne
Germany
Tel.: 0234 52 84 783

Catering Coordinator:
R.P. Paramesh
GGS
Food Service
Providing quality catering in Germany
Tel: 02305 967375
Mobile: 01779391607

வாயிலில் உள்ள இறங்கு துறையிலும், குறிகட்டுவான் துறைமுகத்தில் இருந்து நயினை தெற்குப் பகுதியில் உள்ள வங்களாவடி இறங்குதுறையிலுமாக மக்கள் பாவனையில் இருக்கின்றன.

நாகபூசணி அம்மனின் திருவிழாக் காலங்களில் இந்த இரண்டு துறைமுகங்களும் மக்கள் வெள்ளத்தால் நிரம்பி வழியும்! இவ் ஆலயத்தின் தேர்த் திருவிழாவினைப் பார்ப்பதற்காக அனேகமான மக்கள் முதல்நாள் இரவே இங்கு வந்து வீதி ஓரங்களிலும், மர நிழல்களிலும் தங்கி மறுநாள் அங்குள்ள வயல்க் கிணறுகளில் குழித்து முழுகி அம்மாளின் தேர் ஊர்வலத்தைத் தரிசிப்பார்கள்.

இவ் ஆலயத்தின் மற்றுமொரு சிறப்பு தேர்த்திருவிழாவிற்கு மறுநாள் நடைபெறும் தெற்பத்திருவிழா! இத் திருவிழா அன்று அம்பாள் கடலுக்குள் உலா வரும் காட்சியைக் காண்பதற்காக ஏராளமான பக்தர்கள் கடற்கரையெங்கும் நிறைந்திருப்பார்கள்.

இவ் ஆலயத்திற்கு அருகினில் "அமுதசுரபி அன்னதானசபை" என்னும் பெயரில் ஒரு ஆச்சிரமம் இருக்கின்றது. திருவிழாக் காலங்களில் அங்கு வரும் பக்தர்களுக்கு காலை எட்டுமணியில் இருந்து இரவு பன்னிரண்டு மணிவரை அன்னதானம் வழங்கப்பட்டுக்கொண்டே இருக்கும்.

இதேபோல சிங்கள மக்களின் வடபகுதி யாத்திரைத் தலமாக விளங்குவதும் நயினாதீவுதான். இங்குள்ள பௌத்த விகாரையில் யாத்திரீகர்களாக வரும் சிங்கள மக்கள் தங்கிச் செல்வதற்கென்றே பெரிய வரவேற்பு மண்டபம் ஒன்றைக் கட்டி வைத்திருக்கின்றார்கள்.
*(தொடரும்...)*

இக் கட்டுரையை முழுமைப் படுத்துவதற்காகப் பல தரவுகளைத் தந்துதவிய நயினை மண்ணின் மைந்தரும், பிரான்ஸ் நயினை அபிவிருத்திக் கழகத்தின் செயலாளரும், பாரிஸ் எம்.ஜி.ஆர் வீடியோக் கழக உரிமையாளருமான திரு. கோபாலபிள்ளை - இரத்தினசபாபதி அவர்கட்கு நன்றி!


# CITY CAR CENTER

தங்களது வாகனங்களை விற்பதற்கோ அல்லது மிகக் குறைந்த விலையில் வாகனங்களைப் பெற்றுக்கொள்வதற்கோ எம்மை நாடுங்கள்.

Münster Str. 61, 59065 Hamm, Germany

Tel: 02381 6 04 83 Fax: 02381 48 89 05

ECHO

ECHO அமைப்பு நடாத்தும்

# இளவேனில் 2012

ஜேர்மனியின் முன்னணி இசைக்குழு செந்தளிர் வழங்கும் இசைமழை 'அன்றிலிருந்து இன்றுவரை' திரையிசைப்பாடல்களின் சங்கமம்.

நம் மரபுகள் மறவாத திரையிசைப்பாடல்களுக்கான நடன அரங்கு

நகைச்சுவை அரங்கு

இன்னும் பல இனிய மகிழ்வு தரும் கலையம்சங்களுடன்

இளவேனில்

காலம்: 28.04.2012
சனிக்கிழமை மாலை
15:00 - 19:30 வரை

இடம்:
Bürgerzentrum Mettingen
Neuenkirchener Straße 65
49497 Mettingen

Patchwork

ஆதரவு வழங்குவோர்

யோர்மனி

செந்தளிர்

ETR www.etr.fm

அகரம் சஞ்சிகை

# வெளி நாட்டு அழைப்புகள் 6öre யில் இருந்து

# Lycamobile டென்மார்க்



| | வீட்டு தொலைபேசி | கைத் தொலைபேசி |
|---|---|---|
| அவுஸ்ரேலியா | 0.06Kr /min | 0.94Kr /min |
| இலங்கை | 0.58Kr /min | 0.78Kr /min |
| இந்தியா | 0.06Kr /min | 0.06Kr /min |

| | வீட்டு தொலைபேசி | கைத் தொலைபேசி |
|---|---|---|
| கனடா | 0.06Kr /min | 0.06Kr /min |
| ஐக்கிய ராஜ்ஜியம் | 0.06Kr /min | 0.69Kr /min |
| சுவிட்ஸர்லாந்து | 0.06Kr /min | 2.29Kr /min |

| | |
|---|---|
| வெளி நாட்டு குறுந்தகவல் (SMS) | Kr 0.99 |
| உள் நாட்டு குறுந்தகவல் (SMS) | Kr 0.19 |

## தங்களது தற்போதைய கைத்தொலைபேசி எண்ணை Lycamobile க்கு மாற்றி 200Kr பெறுமதியான நிமிடங்களை இலவசமாக பெற்றிடுங்கள்!

**Lycamobile லில் இருந்து Lycamobile க்கு**

***இலவச அழைப்புகளை பெற்றிடுங்கள்**

மேலதிக விபரங்களுக்கு

**www.lycamobile.dk 70 14 55 56**

*லைக்காமொபைலில் இருந்து லைக்காமொபைலுக்கு 30 நிமிடங்கள் இலவசமாக பேசி மகிழலாம். அடுத்து வரும் ஒவ்வொரு நிமிடங்களுக்கும் வழமையான கட்டணம் அறவிடப்படும். இணைப்புக் கட்டணமாக 0.99Kr அறவிடப்படும்.

*சலுகை கட்டணங்கள் கால வரையறைக்குட்பட்டவை. மேலதிக விபரங்களுக்கு www.lycamobile.dk

**Lyca mobile**

Call the world for less

Lycamobile வாங்கக்கூடிய இடங்கள்:

Fleggaard, Super Brugsen, Dagli' Brugsen, Kvickly, POST, KWIK SPAR, SUPER SPAR, Q8, 7 ELEVEN, extra, OK, Super Best, Brugsen, Kvickly xtra, WHSmith, LØVBJERG, SPAR, EUROSPAR

# கச்சதீவும் கனகராகிய என்ர வாக்குமூலமும்!



அந்தக்காலத்தில் நல்ல ஞாபகம். அப்பர் கச்சதீவுக்கு வெளிக்கிடப்போறார் எண்டால் வீடு இரண்டு பட்டிடும், எனக்கு அது உனக்கு இது எண்டு என்ர அக்கா, தங்கச்சிமார் பொரிய பட்டியல் போடத் தொடங்கியிடுவினம். இந்தியாவிலிருந்து வருகிற வியாபாரிமாரிட்ட பண்டமாற்று விளையாட்டுத்தான். இங்கேயிருந்து அப்பர் லக்ஸ், பீடி, தேங்காய் எண்ணை அது இதுவெண்டு ஒரு வண்டில் சமானோட வெளிக்கிடும். அதுக்குள்ள குறிகட்டுவானில வச்சு வள்ளமோடுற ராயப்புக்கெண்டு ஒரு பண்டல் மண்டான் சுருட்டு மனுசன் மறக்கவே மாட்டுது. ஓரிரண்டு தடவை மனுசன் என்னையும் தன்னோடை கச்சதீவுக்கு கூட்டிக்கொண்டு போயிருக்கு.

அதெல்லாம் அந்தக்காலமப்பு. பிறகு வந்த சண்டையால கச்சதீவு பற்றிய பேச்சை வீட்டில மறந்தே போட்டுதுகள். போன கிழமை பேப்பர தட்டிப்பாக்கேக்க தான் அந்தநாள் ஞாபகங்கள் நினைவில் வந்துபோச்சு. எல்லாரும் கூடிக்கதைச்சாச்சு ஏற்பாடெல்லாம் சரி நீங்கள் வாறதுதான் மிச்சம் எண்டமாதிரி செய்தியள போட்டிருந்திச்சினம். சரி இதுக்குப்பிறகும் பொறுக்கேலுமே?. நாளை எப்படியிருக்குமெண்டு இண்டைக்கு தெரியாத வாழ்க்கை பாருங்கோ? பிறகென்ன கனகரும் வெளிக்கிட்டாச்சுப் பாருங்கோ. ஒரு மாதிரியா அடிச்சுப்பிடிச்சு குறிகட்டுவானுக்கு போட்டன்., ஜெற்றிப்பக்கமா நடந்து போகேக்க தெரிஞ்ச பெடியனொருத்தன் அஞ்சாறு சினேகிதங்களோட வள்ளமொண்டில நிண்டு கூப்பிட்டான். கனகணணை வாருங்கே இதில நெடுந்தீவு போய் அங்கின தண்ணிகிண்ணிய குடிச்சு சாப்பிட்டுப்போட்டு, ஒரு மூன்று மணிபோல கச்சதீவு போகலாமெண்டான். சரி அதுவும் நல்லதெண்ட மாதிரித்தான் எனக்குப்பட்டுது. பழைய சினேகிதமொண்டு அங்கால இருக்குது ஒருக்கா எட்டிப்பாக்கலாமெண்ட நப்பாசையும் தான். வள்ளத்தில ஏறினாப்பிறகுதான் தெரிஞ்சுது மற்றப்பொடியள் பேப்பர்காறப்பொடியள் எண்டு சரி பலதும் பத்தும் கதைக்க ஆள்கிடைச்ச சந்தோசம் எனக்கு.

எல்லாம் சரியெண்டு வள்ளம் வெளிக்கிடத்தான் நாலைஞ்சு நேவிக்காரங்கள் நிப்பாட்டு நிப்பாட்டு எண்டு கத்திக் கொண்டு வந்தாங்கள். பிறகென்ன அங்க பெர்மிசன் எடுத்தனியோ, இங்க பெர்மிசன் எடுத்தனியோ எண்டு ஆயிரம் கேள்வி, உங்கட பாதுகாப்பு கருதி வள்ளத்தில நெடுந்தீவு போகேலாதெண்டு கடைசித்தீர்மானம் வாசிச்சுப்போட்டு போட்டாங்கள். பொடியளும் தெரிஞ்ச இடம் அது இதுவெண்டு டெலிபோன் போட்டுக்கதைச்சுக்கொண்டிருந்தாங்கள். பெர்மிசன் தாற ஐயா 12மணியோட சாப்பிடப்போட்டாராம். எல்லாம் முடிஞ்சு ஒரு சின்ன நித்திரைக்குப் பிறகு மூன்றரைக்குப்பிறகுதானாம் மனுசன் எட்டிப்பாக்குமெண்டு சொல்லிப்போட்டாங்கள். அப்ப உது சரி வராது அண்ணை வாங்கோ அம்மா சொன்னவா கச்சதீவுக்குப் போறதுக்கு போதிய படகு வசதி செய்திருக்கு அதுகளில நேராப்போகலாமெண்டு அதில நிண்ட பொடியன் ஒருத்தன் சொன்னான்.

அதுதான் சரியெண்டு எனக்கும் பட்டது. சரிவாங்கோ லைன்ல நிப்பமெண்டு எல்லாரும் பொட்டலங்களையும் தூக்கிக் கொண்டுபோய் நேவியிட்ட பதிஞ்சுபோட்டு அங்கின போட்டிருந்த சீமெந்துக்குந்துகளில இருக்கத் தொடங்கினம். இருக்கிறம் அதுவருது இதுவருது எண்டாங்கள் ஆனால் சனம் போறதுக்குத்தான் ஒண்டும் வரயில்லை.

கச்சதீவுக்குப்போறதுக்கெண்டு நெடுந்தீவுக்கு ஓடிக்கொண்டிருந்த வடதாரகைக் கப்பலை இப்ப மாத்திவிட்டிருக்கினமாமெண்டு அங்கிருந்த ஆக்கள் கதைச்சுக் கொண்டிருந்திச்சினம். பிறகு கொஞ்சத்தால அங்க பார் வருகுது வடதாரகை எல்லோரும் தயாரகுங்க எண்டான் காவலுக்கு நிண்ட நேவிக்காரன். சனமும் இடிபட்டுக்கிடிபட்டு லைன்ல நிக்க நேவி பெரிய-துரையாம் ஒருத்தர் வந்து சொன்னார். அமைச்சர் தன்ர ஆக்களோட வாறாராம் ஏறிப்போன பிறகு மிச்சமீதி இடமிருந்தால் உங்களை ஏத்துறதப் பற்றி யோசிப்பம் எண்டார்.

அதுவும் அமைச்சர் ஓமெண்டால் மாத்திரம்தானெண்டு எக்ஸ்ரா பிட் ஒன்றையும் போட்டுட்டு போனார். நேரம் மூன்று நாலெண்டு கடந்துபோகுது. அமைச்சர் வெளிக்கிட்டிட்டாராம் அங்க நிக்கிறாராம் இப்ப இஞ்ச நிக்கிறாராம் எண்டு ஒரு ஆள் டெலிபோனோட நேரடி அஞ்சல் செஞ்சு கொண்டிருந்துது. ஒரு மாதி ஆள் வந்தாச்சு நூற்றுக்கணக்கில சனம் ஆவலோட பாத்துக் கொண்டிருக்குது. ஆள் ஓமெண்டால் நாங்களும் கச்சதீவுக்கு போயிடலாமெண்ட நப்பாசை தான். மனுசன் மூச்சு விடுறதுக்கு கூட இஞ்சால திரும்பிப்பாக்கேல. வழைமையா எங்க கண்டாலும் ஒரு கும்பிடு போடுவார் அதுக்கேனும் திரும்புவார் எண்டால் ம்.. கூம்.. பின்னால் தொண்டர் படை, குண்டர்படை எல்லாம் போகுது இரண்டு மூன்று முந்தி எங்கினையோ கண்டபொடியள் மாதிரிக்கிடந்தது. பேனை கொப்பியளோட போனவங்கள் கணக்குப் பாக்கிறவங்களோ எண்டால் இல்லை இல்லை அண்ண முந்தி வன்னியில நிண்டு கிழிச்சவங்கள் இப்ப இங்கேயிருந்து... எண்டு பேப்பர்காரப்பொடியன் ஒருத்தன் கடுப்போட சொன்னான்.

அவை குடிக்கிறதுக்கு குளிரூட்டின பால்தொடக்கம் இந்திய வியாபரியளுக்கு விற்கிறதுக்கு ராணி சந்தண சவற்காரம் வரைக்கும் கப்பலில் ஏறுது. ஆனால் வாக்களிச்ச பாவம் செய்த சனம் மட்டும் ஏறாமல் அணில் ஏற விட்டநாய் மாதிரி பாத்துக் கொண்டு நிக்குதுகள் அதுக்க ஏசிவேற இருக்குதாம். வழமையா நெடுந்தீவு சனத்தை ஏற்றி இறக்கிற வேலைக்கு இண்டைக்கு அதை விடேல்லையாம். காலை 10மணியிலிருந்து ஏழு, எட்டு மணிநேரமாக அந்த ஊர்ச்சனங்கள் தூங்கி வழியுதுகள். அமைச்சர், அவரோட வந்தவை போன பிறகு அவற்ற கட்சி எம்.பியெ-ாருவர் வந்தார். சனத்துக்கு ஒரே சந்தோசம்.

ஏதோ எங்கட பிரச்சினையை கேள்விப்பட்டுத்தான் இஞ்சை வந்திருக்காரெண்டு பேச்சு, பிறகுதான் தெரியும் மனுசனுக்கு நெடுந்தீவு சொந்த வீடு போக வந்திருக்கெண்டு. பள்ளிக்கூடம் போற பொம்புளைப் பிள்ளையொண்டை அவையின்ர ஆளொருத்தர் கெடுத்துப்போட்டு கல்லால் அடிச்சு சாக்காட்டிப்போட்டானெண்டு சனம் கதைச்சிது. தேம்பின சனத்தை மடக்க அவரும் நேவி வள்ளத்தில எறிப்போட்டார்.

அரைவாசி சனம் நம்பிக்கை இழந்து வீடுகளுக்கு திரும்பத் தொடங்கியிருந்தது. கடைசியா நெடுந்தீவிலிருந்த சனத்தோட வந்த குமுதினிப்படகை கச்சதீவுக்குப் போகச் சொல்லி நேவிக்காரர் வற்புறுத்திக் கொண்டிருந்தினம, அவங்கள் நாங்கள் அரசாங்க உத்தியோகம் நினைச்சமாதி ஓட்டேலாது எண்டு நிக்கிறாங்கள். அமைச்சர் போகச் சொன்னார் எண்டு சொன்னால் எவர் சொன்னாலும் போகமாட்டோம் என்று விடாப்பிடியாக நிண்டாங்கள். பிறகு டீசல் போதாதெண்டாங்கள். நேவிக்காரன் பிறகு எங்கேயோ இருந்து அதை கொண்டுவந்து கொடுத்தான். ஒரு மாதிரியா புறப்பட்டு நெடுந்தீவு போய் அங்கு மணித்தியாலக் கணக்கா நிண்டு தண்ணி எடுத்துப்போட்டு கச்சதீவுக்குப் புறப்பட்டாங்கள். பேந்துதான் தெரிஞ்சுது அவங்கள் பக்கத்தில நிக்கேக்க அடிச்ச கப்பெண்ட நாத்தம், அடிச்சது சாதாரண தண்ணியில்லேண்ட விசயம்.

ஒரு மாதிரி இரவு ஒருமணியளவில் கச்சதீவு போய்ச்சேர்ந்தால் கரையொதுங்க மாட்டாமல் வள்ளக்காரனும் நேவிக்காரனும் கடல-ில சுத்துறாங்கள், கடைசியா ஏலாம நேவிக்காரங்கள் தங்கட போட்டுகளில ஏத்தி கரையில கொண்டுபோய் விட்டாங்கள். நெடுந்தீவு செஞ்சிலுவைச் சங்கக்காரர்தான், வாற சனத்தை நிண்டு வரவேற்று எல்லாம் செய்து கொண்டிருந்திச்சினம். உதவி அரசாங்க அதிபர் ஐயா எங்கேயெண்டு கேக்க அவர் டெலிபோனை நிற்பாட்டி வச்சிட்டு நித்திரைக்குப் போட்டார் எண்டு சனம் நக்கலாச் சொல்லிச்சிரிக்குது. சரி ஒரு ஓரமாக்கிடந்திட்டு விடிய எழும்புவம் எண்டு திரும்பினால் ஓரமா அமைச்சரும், அவற்ற ஆக்களும் படுத்து நல்ல நித்திரை.

இப்பதானே ஏசிக்கப்பலில வந்தவையெண்டு நான் வாய்திறக்க அண்ணை மூச்சை விட்டாதேங்கோ அங்கால இந்தியா,கொழும்பு பேப்பர் காரர்கள் தமிழ்நாட்டிலிருந்து வந்த சனம் மதகுருமார் எல்லோரும் இருக்கினம். இப்படி ஸ்ரண்ட் அடிக்கேல்லையெண்டால் ஓடி வந்ததில என்ன பயன் எண்டு கேள்வி எழுப்பிறான்.

கூட வந்த எங்கட பேப்பர்காரப்பொடியன் அட இதுக்குள்ள இவ்வளவு அரசியல் இருக்கோ எண்டு வாய்மூடி திறக்குறதுக்குள்ள பக்கத்து டென்ற் கொட்டில எட்டிப்பார்த்தால் தம்பியார் நீட்டி மல்லாந்து படுத்துக்கிடக்குறார்.

அண்ணை நீங்கள் லேட் இப்பதான் இந்திய இலங்கை மீனவர்கள் அமைச்சருக்கு முன்னாலை சந்திச்சுப் பேசினவை எண்டார் தவரத்தினத்தார். அப்ப என்னமாதிரி ஏதும் முடிவு வந்ததோ எண்டன் அண்ணைக்கு எப்பவும் பகிடிதான். எண்டு அந்தாள் காய்வெட்டிச்சிட்டுது. அப்ப ஏனப்பு இவ்வளவு பில்டப் காட்டினியள் ஏதோ வெட்டி விழுத்திறதும் எண்ட மாதிரி புதினம் சொல்லிக் கொண்டிருந்தியள். இப்ப சும்மா கதைச்சதெண்டுறியள் ஏன் உங்கட விளம்பரத்துக்கு சப்போட் நடிகர் நம்மட மீனவர்மாரோ எண்டு கேள்வியெழுப்பிறதுக்க ஆள் எஸ்கேப் ஆயிட்டுது.

பிறகு நடந்த திருப்பலி பூசையில அமைச்சர அந்தப்பக்கம் கூட காணேல்ல. யாழ்.மாவட்ட இராணுவத்தளபதி, கடற்தளபதி, அரசாங்க அதிபர் எண்டு ஆள்படைக்கு பஞ்சமேயில்லை. திருப்பலி கொடுத்த தமிழ்நாட்டு பாதிரியார் ஒருவர் வெளுத்து வாங்கிக் கொண்டிருந்தார். காணாமல்போன தமிழ் உறவுகள் வீடு திரும்போணும், இந்த மண்ணில அவங்கள் மாவீரரா வாழோணும் எண்டு ஒரே வெளுத்துக்கட்டு. இருந்த இஞ்சால் பக்கத்து வி.ஐ.பி ஆக்களின்ட மூஞ்சையள பாக்கோணுமே. இடி விழுந்த மாதிரிக்கிடந்தது.

பாதிரியார் இன்னுமொண்டையும், போட்டுகொழுத்திச்சு. இலங்கை இந்திய மீனவர்கள் விடயம் ஒரு சின்ன உரசல் பாருங்கோ. நாங்கள் தமிழர். பேசித்தீர்ப்பம். நாங்கள் தொப்புள் கொடி உறவுகள். நீங்கள் ஒருத்தரும் கவலைப்படவேண்டாம் என வெட்டொண்டு துண்டிரண்டு எண்டு கூறிப்போட்டுது. அவையளுக்கும் துவக்கை எடுத்துக்காட்டேலாது என்ற படியால பொத்திக் கொண்டு இருந்திச்சினம்.

என்ர அந்தோனியாரே இதுவொண்டு போதும், என்ர கச்சதீவுப் பயணத்தின்ர பிரார்த்தனை வெளிச்சமாதிரிக்கிடந்தது.

இதுக்க கடற்கரையில நிண்டு பார்க்கேக்க அரசாங்க அதிபர் அம்மா நேவி போட்டில வந்து இறங்குறா.கட்டின பட்டு சீலை கசங்காமல் கவனமா பார்த்து ஆள் கவனமா இறங்குது.அவவின்ர பரிவாரங்களும் பாதுகாப்பா காலை வேளையில கரை இறங்கி போகினம்.திருவிழா முடியேக்க தான் அவை வந்து இறங்கினவையெண்டார் அவையின்ர ஏற்பாட்டு திறத்தை பற்றி நீங்கள் நினைச்சு பாருங்கோ.அவையளுக்கு இருக்கிற சீற்றை காப்பாற்றினால் போதும் .அதுக்கு சலாம் வச்சு வாழ்ந்தா போதும்.சனத்திற்கு சேவையெண்டதெல்லாம் வெறுமனே பேப்பரில மட்டும் தான்.

தமிழ் நாட்டில இருந்து ஐயாயிரம் சனம் வரேக்க இஞ்சால இருந்து வெறுமன எழுநூறு பேர். அதில இருந்து இவையின்ர போக்குவரத்து திறமைக்கு விளக்கம் தேவையில்லை.சரி திரும்பேக்கையெண்டாலும் பார்ப்பமெண்டால் காலை வெள்ளமையே அமைச்சர் தன்ர பரிவாரத்தோட வடதாரகையை கொண்டு போட்டார். பிறகென்ன நேவி கெதியா போங்கோ போங்கோ எண்டுறான். வரேக்கை நடந்த கததான் மூண்டு மணி நேரத்தில போற கச்சதீவை பதினெழு மணித்தியாலமா கடந்த அதிசயம் சத்தியாமா இவை சொல்ற வடக்கினில் வசந்தம் தான். ஆனாலும் நான் தெளிவா ஒரு முடிவெடுத்து போட்டன்.என்ர அந்தோனியாரே சாத்தான்களின்ர வேதத்தை நம்பி இனி உன்னிட்ட வெளிக்கிடமாட்டன். அவ்வளவுந்தான்.




Bern மாநகரில்

SIVA SALON

Herren Coiffeur

Öffungszeiten:
Mo - Fr: 10:00 - 19:00
Sa: 08:30 - 17:00



Tel: 031 381 0287
Natel: 078 318 31 45
079 595 41 32

ஆண்களுக்கான சிகை அலங்காரம்.

Konizstrasse 70
3008 Bern

# Milin Impex

*Asiatische Lebensmittel Groß und Einzelhandel*

ஜேர்மனி டோட்முண்ட் மாநகரில் தலைமுறை தலை
முறையாக தரமான ஆசிய, ஆபிரிக்கா உணவுப்பொருட்களின்
இறக்குமதியாளரும் மொத்த, சில்லறை விநியோகஸ்தர்களும்.

யேர்மனியில் உங்களுக்குத் தேவையான எல்லா விதமான
தரமான இலங்கை, இந்திய, மற்றும் ஆபிரிக்கா உணவுப்
பொருட்களைச் சிரமம்மின்றி ஒரே இடத்தில் மலிவாகவும்,
மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள
நாடவேண்டிய ஒரே
ஒரு 20 வருட அனுபவமிக்க நிறுவனம்.

**Web: www.milinimpex.de E-Mail: info@milinimpex.de**

அத்துடன் உங்கள் வசதிக்கு ஏற்ப
நீங்கள் வீட்டில் இருந்தபடியே எம்மிடம்
பொருட்களை மொத்தமாகவும்
சில்லறையாகவும் ஓடர் செய்து
பெற்றுக் கொள்ளலாம்!

**Tel: 0231 45 96 17 / 28**

**எமது வாடிக்கையாளர்களுக்கு**
**இனிய சித்திரைப் புத்தாண்டு**
**வாழ்த்துக்கள்**

Dortmund நகரில்
Westendorfstr. 41
44287 Dortmund
Tel: 0231 459617/28
Fax: 0231 1815288

Wuppertal நகரில்
Aue – 94
42103 Wuppertal
Tel: 0202/29995869

Lüdenscheid நகரில்
Höchstr. 8a
58511 Lüdenscheid

Geschäftszeiten:
Dienstag, Mittwoch, Freitag
10:00 bis 19:00 Uhr
Montag & Donnerstag
07:00 bis 17:00 Uhr
Samstags 09:00 - 16:00 Uhr





பிரமாண்டமான... மூன்று காட்சி அறைகள்
தங்க நகைகளின் சமுத்திரம்
உயர்தர பட்டு ஆடைகளின் ஆலயம்
ரெடிமேட் ஆடைகளின் சிகரம்
P.S.
உங்கள் முல்கைம் P.S. பவான் அண்ணாச்சி
Indische Textilien & Schmuck
Tel : 0208-444 89 53 Mobil : 0172-2607388
142
Berlin மாநகரில்
நாள் : 2012 April. 3, 4, 5
மிக பிரமாண்டமான
அதிரடி மலிவு விற்பனை
Parking
P.S. 50 Parkplätze
P.S. 50 தரிப்பிடம்
50 Parkplätze vor dem Laden
Öffnungszeiten Mo.-Sa. 10.00 - 20.00
உங்கள் முல்கைம்
P.S. பவான்
அண்ணாச்சி கடையின்
Berlin மாநகரில்
மிக பிரமாண்டமான
அதிரடி மலிவு விற்பனை!!!
புதுப்புது உயர்தர ஆடை ரகங்கள்
தினம் தினம் அறிமுகம்!
உங்கள் வீட்டு அனைத்து மங்களகரமான நிகழ்வுகளுக்கும் 24 மணி நேரத்தில் வரும் அனைத்து பொருட்களும் உலகின் பல்வேறு இடங்களிலிருந்து ஆடை ஆபரண உலகில் ஆண்டாண்டு கால அனுபவமிக்க நம் அண்ணாச்சியின் கைத்தேர்வில் இறக்குமதி செய்யப்பட்டவை.
எங்கள் மதிப்பிற்குரிய வாடிக்கையாளர்களே! எண்ணற்ற டிசைன்களில்! ஏராளமான ஆடைகள் !! தினம் தினம் குவிந்த வண்ணம் உள்ளன.
Berlin மாநகரில்
நாள் : 2012 April. 3 செவ்வாய், 4 புதன், 5 வியாழன்
இடம் : Bundesalle 160, 10715 Berlin
(உவான் மூலம் வருபவர்கள் U9 U Bahnhof Bundesplatz-ல் இறங்கி வரவும்)
H.P : 01722607388, 01724406514
P.S.
உங்கள் முல்கைம்
P.S. பவான்
அண்ணாச்சி
BANK
MoneyGram
International Money Transfer
பணம் மாற்று சேவை
24 நிமிடத்தில்
உங்கள் தேவைகளை
பெற்றுக்கொள்ளலாம்
P.S.
இன்றைய தங்கத்தின்
விலையை அறிய
உடனே நாடுங்கள்
உங்கள் முல்கைம்
P.S. பவான்
அண்ணாச்சி கடை
• லண்டன்
• துபாய்
• சிங்கப்பூர்
• USA
Tel : 0208 4448958
H.P : 0172 2607388

புதிய லைக்காமொபைல் ப்ளஸ் சிம்முடன்!

# Lycamobile

சுவிட்சர்லாந்து

CHF 100.- வரை இலவசம்!

## சர்வதேச நாடுகளுக்கான தரம் வாய்ந்த அழைப்புக்கள் மிக குறைவான கட்டணத்தில்..!

இந்தியா
கனடா
அமெரிக்கா

CHF 0.01 /min
வீட்டுத் தொலைபேசி + கைத் தொலைபேசி

Lycamobile ப்ளஸ் இல் இருந்து Lycamobile ப்ளஸ் க்கு
CHF 0* /min

சிங்கப்பூர்
மலேசியா

CHF 0 /min
வீட்டுத் தொலைபேசி



இலங்கை
வீட்டுத் தொலைபேசி CHF 0.09 /min
கைத் தொலைபேசி CHF 0.12 /min

ஐரோப்பா
CHF 0.01 /min வீட்டுத் தொலைபேசி

*அனைத்து அழைப்புக்களும் நிமிடக்கணக்கீட்டில் கட்டணம் அறவிடப்படும். லைக்காமொபைல் ப்ளஸ்ஸில் இருந்து லைக்காமொபைல் ப்ளஸ்க்கு ஒரு இணைப்புக்கு 19Rpனில் 30 நிமிடம் வரை உரையாடலாம். மேலதிகமாக வரும் ஒவ்வொரு நிமிடத்திற்கும் 19Rp என்கிற அடிப்படையில் கட்டணம் அறவிடப்படும்.

*கட்டணங்கள் மாறுதலுக்குட்பட்டவை.
*உள் நாடு மற்றும் வெளி நாடு இணைப்புக்கட்டணம் CHF 0.19

மேலதிக விபரங்களுக்கு
www.lycamobile.ch 077 900 01 22
044 555 23 23

Lyca mobile
Call the world for less

Lycamobile வாங்கக்கூடிய இடங்கள்:
SBB CFF FFS · MediaMarkt · Inter Discount · k kiosk · SWISS POST · coop · Fust · TELEFONCORNER · NAVILLE · Presse web · RELAY